மலர் : 51 இதழ் :12

தமிழரசு

ஜூன் 2021
விலை ரூ. 20/–

செய்தித் துறையின் வெளியீடு

14 அத்தியாவசிய மளிகைப் பொருட்கள் அடங்கிய தொகுப்பு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு. க. ஸ்டாலின்** அவர்கள் 30.05.2021 அன்று
கோயம்புத்தூர் அரசு மருத்துவக் கல்லூரி / இ.எஸ்.ஐ. மருத்துவமனை வளாகத்தில் கொரோனா தொற்றால்
பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வரும் நோயாளிகள் பிரிவுக்கு முழு பாதுகாப்பு கவச உடை (PPE KIT) அணிந்து சென்று,
நோயாளிகளை சந்தித்து நலம் விசாரித்து, அவர்களின் தேவைகள் குறித்து கேட்டறிந்தார்.

குழந்தைகள் கல்வியைப் போற்று!
குழந்தைகள் தொழில் செய்வதை அறவே நீக்கு!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களின்
குழந்தைத் தொழிலாளர் முறை எதிர்ப்பு தினச் செய்தி – 11.06.2021

இப்பூமியில் பிறந்த குழந்தைகள் ஒவ்வொருவருக்கும் மிக முக்கியமானது வாழும் உரிமை, பாதுகாப்பு உரிமை மற்றும் கல்வி உரிமை என்பனவாகும். அந்த உரிமைகளை அவர்களிடமிருந்து பறிப்பது இயற்கை நியதிக்கும், சமூக நீதிக்கும் எதிரானது என்பதைக் கருத்தில் கொண்டு, குழந்தைகளின் நலன் பேணும் நெறியில், குழந்தைத் தொழிலாளர் முறைக்கு எதிரான விழிப்புணர்வை வளர்க்கும் நாளாக உலகெங்கும் கடைப்பிடிக்கப்படும் நாள் ஜூன் 12. குழந்தைகளின் குழந்தைப் பருவத்தைச் சீர்கெடாமல் இருக்க விழிப்புணர்வை விதைக்கும் நாள் இது.

நாளைய நவீன உலகை உருவாக்கும் சிறந்த சிற்பிகள் நம் குழந்தைச் செல்வங்கள். ஆற்றல்மிக்க அவர்களது திறமைகளைக் கண்டறிந்து அத்திறமைகளை மேம்படுத்தி, அவர்களின் உரிமைகளைப் பாதுகாத்து, அவர்களைக் கருத்தோடு பராமரிக்க வேண்டியது தமிழ்நாட்டு மக்களின் கடமையாகும். கல்விச் செல்வம் பெற வேண்டிய சமயத்தில், கடுமையான வேலைச் சுமைகளைச் சுமந்து நிற்கின்ற பிஞ்சு குழந்தைகளை, குழந்தைத் தொழிலாளர் முறை என்ற கொடுமையான வன்முறையிலிருந்து விடுவித்து, அவர்களுக்கு இனிமையான குழந்தைப் பருவத்தினையும், முறையான கல்வியினையும் உறுதி செய்வதே தமிழக அரசின் குறிக்கோளாகும்.

அக்குறிக்கோளை அடையும் பொருட்டு அனைத்து வகையான தொழிலகங்களிலிருந்தும் குழந்தைத் தொழிலாளர் முறையை முற்றிலுமாக அகற்றி ''குழந்தைத் தொழிலாளர் இல்லா மாநிலம்'' என்ற நிலையினை தமிழ்நாட்டில் கொண்டுவர, அனைத்து ஆக்கப்பூர்வமான செயல்திட்டத்தினையும் துரிதமாக நடைமுறைப்படுத்திடப் புதிதாகப் பொறுப்பேற்றுள்ள இவ்வரசு உறுதி பூண்டுள்ளது.

நம் அரசு குழந்தைத் தொழிலாளர் முறையினை முற்றிலுமாக அகற்றிடும் வகையில், பணியிலிருந்து மீட்கப்பட்ட குழந்தைகளை முறையான பள்ளிகளில் சேர்த்து, அவர்களுக்கு அரசின் மூலமாகச் சீருடைகள், பாடப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், புத்தகப் பைகள், காலணிகள், கல்வி உபகரணங்கள், சத்தான மதிய உணவு, கட்டணமில்லாப் பேருந்து பயண அட்டை, உயர்கல்வி பயிலும் முன்னாள் குழந்தைத் தொழிலாளர்களுக்கு அவர்களின் கல்விக் காலம் முழுமைக்கும் ரூ.500/– வீதம் மாதாந்திர உதவித் தொகை வழங்குதல் போன்ற பல்வேறு நலத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

தற்போது ஒன்றிய அரசால் 14 வயதிற்குட்பட்ட குழந்தைகள் மட்டுமின்றி 18 வயது நிறைவடையாத வளரிளம் பருவத்தினரையும் அபாயகரமான தொழில்களில் அமர்த்தப்படுவதை முற்றிலுமாக தடை செய்து வெளியிடப்பட்ட சட்டத் திருத்தத்தை அரசு மிகத் தீவிரமாகச் செயல்படுத்தி வருகிறது.

தமிழ்நாட்டை, குழந்தைத் தொழிலாளர்களற்ற மாநிலமாக மாற்ற நம் அரசு மேற்கொள்ளும் சீரிய முயற்சிகளுக்கு அரசு, அரசு சாரா நிறுவனங்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள், தொழிற்சங்கங்கள், தொழில் நிறுவனங்களின் உரிமையாளர்கள், பொதுமக்கள் ஆகிய அனைவரும் சீரிய ஒத்துழைப்பு நல்க வேண்டும்.

குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழிப்போம் !
அவர்களுக்குக் கல்வி அளித்து வாழ்வில்
ஒளியேற்றுவோம் !

தமிழரசு

தமிழ்நாடு அரசு
செய்தித் துறையின் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு 2052
பிலவ வருடம் : வைகாசி – ஆனி
ஜூன் 2021

மலர் : 51 | விலை ரூ.20 | இதழ் : 12

ஆசிரியர் - வெளியிடுபவர்
முனைவர் **வீ.ப. ஜெயசீலன், இ.ஆ.ப.,**
இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்பு மற்றும்
அலுவலால் அரசு துணைச் செயலாளர்

நிருவாக ஆசிரியர்
த. சரவணன்
இணை இயக்குநர் (நினைவகங்கள்)/
துணை இயக்குநர் (வெளியீடுகள்) (மு.கூ.பொ.)

முதன்மைப் பொறுப்பாசிரியர்
எஸ். சீதாலட்சுமி
உதவி இயக்குநர்

பொறுப்பாசிரியர்கள்
சு. கமலா
ச. மஞ்சுளா
பெ. சதீஷ்
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள்

உதவி ஆசிரியர்கள்
மு. மணிமேகலை
அ. மதன்
போ. முத்துக்குமார்
கு. சுபாஷ்

கணினி வடிவமைப்பு
தி. ஜெய்சங்கர்
க.இரா. உமாமகேஸ்வரி

முதுநிலை அச்சுப்பிழைத் திருத்துபவர்
கோ. சந்திரசேகர்

வடிவமைப்பாளர்
கோ. முரளி கிருஷ்ணன்

தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம்,
எண்.5, இராஜீவ் காந்தி சாலை,
கானகம், தரமணி, சென்னை–600 113.
தொலைபேசி : 22542221 / 22542224
மின்னஞ்சல் : tamilarasujournal@gmail.com
இணையதளம் : www.tndipr.gov.in

தமிழரசு இதழுக்கு
www.tamilarasu.org என்ற இணையதளத்தில்
சந்தாத் தொகையினை நேரடியாக செலுத்தலாம்.

“கல்வியில், வேலைவாய்ப்பில், சமூகப் பொறுப்புகளில் அனைவருக்கும் அனைத்தும் கிடைக்க மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அதிகாரத்தைப் பயன்படுத்தித் தங்களது கடமையை ஆற்றவேண்டும்”.

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க. ஸ்டாலின்** அவர்கள்

இந்த இதழில்...

❖ **தென் சென்னையில் ரூ.250 கோடி மதிப்பீட்டில் 500 படுக்கை வசதிகளுடன் கூடிய பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை**
(முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 97ஆவது பிறந்த நாளை முன்னிட்டு தமிழ்நாடு அரசின் அறிவிப்புகள் – 03.06.2021) 7

❖ **18 முதல் 44 வயது வரை உள்ளவர்களுக்கு கொரோனா தடுப்பூசி செலுத்தும் திட்டம் தொடக்கம்**
(மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 20.05.2021 அன்று திருப்பூர் மாவட்டம், நேதாஜி ஐவுளிப் பூங்காவில், 18 முதல் 44 வயது வரை உள்ள பயனாளிகளுக்கு கொரோனா தடுப்பூசி செலுத்தும் முகாமினை தொடங்கி வைத்தார்கள்.) 21

❖ **கோயம்புத்தூர் மாவட்டத்தில், கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவரும் நோயாளிகளை நேரில் சென்று கள ஆய்வு**
(மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 30.05.2021 அன்று கோயம்புத்தூர் அரசு மருத்துவக் கல்லூரி / இ.எஸ்.ஐ. மருத்துவமனை வளாகத்தில் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அளிக்கப்படும் சிகிச்சைகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.) 42

முதலாம் பக்க அட்டை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
03.06.2021 அன்று தலைமைச் செயலகத்தில்,
அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு 14 அத்தியாவசிய
மளிகைப் பொருட்கள் அடங்கிய தொகுப்பு வழங்கும்
திட்டத்தைத் தொடங்கி வைத்தார்கள்.

கொரோனா பாதிப்பு நிவாரண உதவித்தொகை இரண்டாம் தவணை ரூ.2 ஆயிரம் மற்றும் 14 அத்தியாவசிய மளிகைப் பொருட்கள் அடங்கிய தொகுப்பு வழங்கும் திட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 03.06.2021 அன்று தலைமைச் செயலகத்தில், 2,09,81,900 அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு கொரோனா பாதிப்பு நிவாரண உதவித்தொகை இரண்டாம் தவணையாக 2 ஆயிரம் ரூபாய் வழங்கும் திட்டத்தையும், 14 அத்தியாவசிய மளிகைப் பொருட்கள் அடங்கிய தொகுப்பினை வழங்கும் திட்டத்தையும் தொடங்கி வைக்கும் அடையாளமாக 10 அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு இரண்டாம் தவணை நிவாரணத் தொகை மற்றும் மளிகைப் பொருட்கள் தொகுப்பினை வழங்கினார்கள்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை தேர்தல்–2021 தேர்தல் அறிக்கையில், கொரோனா தொற்றால் செயல்படுத்தப்பட்டுள்ள கட்டுப்பாடுகளால் வாழ்வாதாரங்கள் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் துன்பங்களைப் போக்குவதற்கு, அரிசி குடும்ப அட்டை வைத்துள்ள குடும்பங்கள் அனைத்திற்கும் ஆறுதல் அளிக்கும் வகையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த திருநாள் முதல் ரூ.4,000/– வழங்கப்படும் என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் உறுதியளித்திருந்தார்கள்.

> மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 03.06.2021 அன்று தலைமைச் செயலகத்தில் நிவாரண உதவித்தொகை மற்றும் மளிகைத் தொகுப்பு வழங்கும் திட்டங்களை தொடங்கி வைத்தார்.

அதனடிப்படையில் கொரோனா நோய்த் தொற்றின் காரணமாகப் பொதுமக்களுக்கு ஏற்பட்டுள்ள சிரமங்களைக் குறைக்கும் வகையிலும், பெருந்தொற்று நேரத்தில் பொதுமக்களின் வாழ்வாதாரத்திற்கு உதவும் வகையிலும், ரூ.4,196.38 கோடி செலவில், மே மாதத்தில் 2,09,81,900 அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு கொரோனா நிவாரணத் தொகைக்கான முதல் தவணை ரூ.2,000 வழங்கும் திட்டத்தை 10.05.2021 அன்று

தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

அதன் தொடர்ச்சியாக, தற்போது, ஜூன் மாதத்தில் ரூ.4,196.38 கோடி செலவில் 2,09,81,900 அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு கொரோனா நிவாரணத் தொகைக்கான இரண்டாவது தவணை ரூ.2,000 வழங்கும் திட்டத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.

கொரோனா ஊரடங்கு கட்டுப்பாடுகளால் பாதிக்கப்பட்டுள்ள பொதுமக்களின் சிரமத்தைக் குறைக்கும் வகையில், மளிகைப் பொருட்கள் அடங்கிய தொகுப்பினை அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு நியாய விலைக் கடைகள் மூலம் ஜூன் மாதம் முதல் வழங்கப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 28.05.2021 அன்று அறிவித்தார்கள்.

அந்த அறிவிப்பிற்கிணங்க, அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு ரூ.844.51 கோடி செலவில், 1 கிலோ கோதுமை மாவு, 1 கிலோ உப்பு, 1 கிலோ ரவை, ½ கிலோ சர்க்கரை, 500 கிராம் உளுத்தம் பருப்பு, 250 கிராம் புளி, 250 கிராம் கடலைப் பருப்பு, 100 கிராம் கடுகு, 100 கிராம் சீரகம், 100 கிராம் மஞ்சள் தூள், 100 கிராம் மிளகாய்த் தூள், 200 கிராம் டீ தூள், குளியல் சோப்பு மற்றும் துணி சோப்பு உள்பட 14 அத்தியாவசியப் பொருட்கள் அடங்கிய மளிகைத் தொகுப்பினை வழங்கும் திட்டத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.

படமும் செய்தியும்

திருக்கோயில்களில் மாதச் சம்பளமின்றி பணியாற்றி வரும் அர்ச்சகர்களுக்கு கொரோனா கால நிவாரண நிதியுதவி

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 03.06.2021 அன்று தலைமைச் செயலகத்தில், இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள திருக்கோயில்களில் நிலையான மாதச் சம்பளமின்றி பணியாற்றி வரும் அர்ச்சகர்கள், பட்டாச்சாரியார்கள், பூசாரிகள் மற்றும் இதரப் பணியாளர்களுக்கு கொரோனா கால நிவாரண உதவித்தொகையாக 4,000 ரூபாய், 10 கிலோ அரிசி மற்றும் 15 வகை மளிகைப் பொருட்கள் வழங்கும் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்கள். இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு.பி.கே. சேகர்பாபு, தலைமைச் செயலாளர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தென் சென்னையில் ரூ.250 கோடி மதிப்பீட்டில் 500 படுக்கை வசதிகளுடன் கூடிய பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை



உலகிலே எந்த முதல்வரும் பெற்றிராத பெருமையைக் கொண்டவர் நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள். தமிழகத்தில் ஐந்து முறை முதல்வராக ஆட்சிக் கட்டிலிலே அமர்ந்து, நல்லாட்சி நடத்தியவர், சீர்மிகு திட்டங்களை பார் போற்றும் வகையில் தீட்டிச் செயல்படுத்தியவர், ஒடுக்கப்பட்ட மக்களின் ஒப்பற்றத் தலைவராக விளங்கியவர், பெரியாரின் சலியாத உழைப்பும், பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் அயராத தொண்டும், பேரறிஞர் அண்ணா அவர்களின் பரந்த உள்ளமும் தன்னகத்தே கொண்டிருந்தவர், உலகெங்கிலும் வாழும் தமிழர்களுக்காகவும், தமிழ் மொழிக்காகவும் தன்னை அர்ப்பணித்து வாழ்ந்தவர், தன் அரசியல் அனுபவங்கள் அனைத்தையும், அடித்தட்டில் வாழ்கிற மக்களின் முன்னேற்றத்திற்காகப் பயன்படுத்திக் கொண்டவர்.

இத்தகைய பெருமைகளையெல்லாம் பெற்று, நம் இதயங்களில் என்றென்றும் வீற்றிருக்கும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், தமிழ்நாட்டு மக்களின் நலன் குறித்து தம் வாழ்நாள் முழுவதும் சிந்தித்து, எண்ணற்ற நலத் திட்டங்களை மருத்துவத் துறையில் தீட்டிச் செயல்படுத்தியிருக்கிறார் என்பதை நாம் அனைவரும் நன்கு அறிவோம். அவற்றில், கர்ப்பிணிப் பெண்களுக்குப் பேருதவியாக விளங்கக்கூடிய டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு நிதியுதவித் திட்டம், ஏழை எளியோரின் உயிர் காக்கும் காப்பீட்டுத் திட்டம், பார்வை இழந்தோருக்கு இலவச கண்ணொளி வழங்கும் திட்டம் எனத் தமிழகத்தின் மருத்துவத் துறையில் முத்திரை பதித்த முக்கியத் திட்டங்கள் அனைத்தும், அவரின் சிந்தனையில் உதித்தவையே. இதுபோன்று ஏழை, எளியோர் ஏற்றம் பெற, தம் வாழ்நாளில் அவர் பல்வேறு நலத் திட்டங்களை இந்த நாட்டு மக்களுக்கு அர்ப்பணித்ததோடு மட்டுமின்றி, தான் வாழ்ந்த இல்லத்தை ஏழை, எளிய மக்களுக்கு இலவச மருத்துவ வசதியினைத் தரும் மருத்துவமனையாகப் பயன்படுத்துவதற்குத் தானமாக அளித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. நம் நெஞ்சமெல்லாம் வீற்றிருக்கும் அவரின் நினைவைப் போற்றும் வகையில், சென்னைப் பெருநகரத்தில் உள்ள

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 97ஆவது பிறந்த நாளை முன்னிட்டு தமிழ்நாடு அரசின் அறிவிப்புகள் – 03.06.2021

கிங் இன்ஸ்டிடியூட் வளாகத்தில், ரூ.250 கோடி செலவில் 500 படுக்கை வசதிகளுடன் கூடிய, பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை ஒன்று அமைக்கப்படும்.

❖ **சங்கத் தமிழ் வளர்த்த மதுரையில் கலைஞர் நினைவு நூலகம்**

புத்தகங்கள் மீதும், புத்தகங்களை வாசிப்பதன் மீதும் தலைவர் கலைஞர் அவர்களுக்கு வாழ்நாள் முழுவதும் இருந்த தீராப் பற்றினை நாம் அனைவரும் நன்கு அறிவோம். இதன் வெளிப்பாடாகத்தான், 2010ஆம் ஆண்டில், பேரறிஞர் அண்ணா அவர்களின் 102ஆவது பிறந்தநாள் அன்று, சென்னை கோட்டூர்புரத்தில், ஆசியாவின் அதி நவீன மிகப் பெரிய நூலகம் எனப் போற்றப்படும் அண்ணா நூற்றாண்டு நூலகத்தைத் திறந்து வைத்தார்கள். மாணவர்கள், கல்வியாளர்கள், ஆராய்ச்சியாளர்கள், இலக்கியவாதிகள், போட்டித் தேர்வுகளுக்குத் தம்மைத் தயாா்ப்படுத்திக் கொள்ளும் இளைஞர்கள், பள்ளிச் சிறார்கள் எனச் சமுதாயத்தின் அனைத்துப் பிரிவினருக்கும் அறிவொளி அளிக்கும் கலங்கரை விளக்கமாக இந்த நூலகம் விளங்கி வருகிறது என்று சொன்னால், அது மிகையாகாது. தமிழ்நாட்டின் மற்ற பகுதிகளில் வாழும் மக்களும், இத்தகைய அரிய வாய்ப்பினைப் பெற வேண்டும் என்ற நோக்கத்தோடு, இரண்டு இலட்சம் சதுர அடி பரப்பளவில் நவீன வசதிகளுடன் கூடியவகையில், **மதுரையில் 70 கோடி ரூபாய் செலவில், கலைஞர் நினைவு நூலகம் ஒன்று அமைக்கப்படும்.**

❖ **இலக்கிய மாமணி விருது துவக்கம்**

இயல், இசை, நாடகத்தில் சிறந்து விளங்கும் கலைஞர்களுக்குத் தமிழ்நாடு அரசின் சார்பாகக் கலைமாமணி விருது வழங்கப்பட்டு வருகிறது. அதே போல் தமிழ் எழுத்தாளர்களை ஊக்குவித்துச் சிறப்பிக்கும் வகையில், ''இலக்கிய மாமணி'' என்ற விருது உருவாக்கப்பட்டு, தமிழின் இலக்கியத்திற்கு வளம் சேர்க்கும் எழுத்தாளர்கள் மூன்று பேருக்கு ஆண்டுதோறும் இந்த விருது வழங்கப்படும். **இவ்விருதாளர்களுக்கு பாராட்டுப் பத்திரம் மற்றும் ஐந்து இலட்சம் ரூபாய் ரொக்க பரிசும் வழங்கப்படும்.**

❖ **கனவு இல்லம்**

தமிழ்நாட்டைச் சேர்ந்த எழுத்தாளர்களில் ஞானபீடம், சாகித்திய அகாடமி போன்ற தேசிய விருதுகள், மாநில இலக்கிய விருதுகள், புகழ்பெற்ற உலகளாவிய அமைப்புகளின் விருதுகள் பெற்றவர்களை ஊக்குவிக்கும் வகையில், அவர்கள் வசிக்கும் மாவட்டத்தில் அல்லது விரும்பும் மாவட்டத்தில் தமிழ்நாடு அரசு மூலமாக வீடு வழங்கப்படும்.

❖ **திருவாரூர் மாவட்டத்தில் ரூ.30 கோடி மதிப்பீட்டில் நெல் சேமிப்பு கிடங்குகள் மற்றும் உலர் களங்கள்**

திருவாரூர் மாவட்டத்தின் நெல் உற்பத்தியினை கருத்தில் கொண்டும், விவசாய விளைபொருட்கள் மழை வெள்ள பாதிப்பினால் சேதமடைவதைத் தவிர்ப்பதற்கும் கிராமப்புற அளவில் கூடுதலாகக் கிடங்குகள் கட்டுமானம் செய்வது விவசாயிகளுக்குப் பேருதவியாக அமையும். விவசாயிகளின் நலன் காக்கும் இந்த அரசு, திருவாரூர், திருத்துறைப்பூண்டி, முத்துப்பேட்டை, மன்னார்குடி, கோட்டூர், நீடாமங்கலம், நன்னிலம், குடவாசல், கொரடாச்சேரி மற்றும் வலங்கைமான் வட்டாரங்களில் உள்ள **ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் காலியாக உள்ள இடங்கள் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் இனங்கண்டு ஒதுக்கீடு செய்யப்படும் இடங்களிலும் ரூபாய் 24 கோடியே 30 இலட்சம் மதிப்பீட்டில் 16,000 டன் கொள்ளளவு கொண்ட சேமிப்புக் கிடங்குகள் அமைக்கப்படும்.**

மேலும், அறுவடைக்குப் பின் தானியம் மற்றும் பயறு வகைகளைச் சரியான முறையில் உலர வைக்காததால் ஏற்படும் இழப்பினைத் தவிர்க்க விவசாயிகள் நலன் கருதி திருவாரூர் மாவட்டத்தில் ரூ.5 கோடி மதிப்பீட்டில் 10 வட்டாரங்களில் சூரிய ஒளியில் உலர்விக்கும் 50 களங்களும், கோட்டூர் மற்றும் வலங்கைமான் வட்டாரங்களில் ரூ.60 இலட்சம் மதிப்பீட்டில் 2 மறுசுழற்சி தொகுப்பு உலர்விப்பான்களும், நீடாமங்கலம் மற்றும் மன்னார்குடி வட்டாரங்களில் ரூ.60 இலட்சம் மதிப்பீட்டில் 2 தொடர் ஒட்ட உலர்விப்பான்களும் ஆகமொத்தம் ரூபாய் 6 கோடியே 20 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கூறியவாறு 54 உலர்களம் மற்றும் உலர்விப்பான்கள் ஏற்படுத்தப்படும்.

❖ **திருநங்கைகள் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு அரசு பேருந்துகளில் இலவசப் பயணச் சலுகை**

மகளிர் நலன் கருதி இந்த அரசு பொறுப்பேற்ற அன்றே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மகளிருக்கு அரசு நகரப் பேருந்துகளில் இலவசப் பயணச் சலுகையை அறிவித்து உத்தரவிட்டுள்ளார்கள். அதன் தொடர்ச்சியாக, மாற்றுத்திறனாளிகள் மற்றும் திருநங்கைகளுக்கும் நகர்ப்புற அரசு பேருந்துகளில் இலவச பயண சலுகை வழங்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். ஊரடங்கு காலம் விலக்கிக் கொள்ளப்பட்டவுடன் இந்த ஆணை நடைமுறைக்கு வரும்.

தாழ்வதில்லை தலைகள்!

கொள்ளை இருட்டுக்குள் கிடந்த தமிழ் நிலத்தை
கொள்கை ஒளியால் உய்விக்கத் தோன்றிய
தந்தையே !

உன் பெயரைச் சொல்லிக் கொண்டே சிலர்
உன் கொள்கை மறக்கின்றார்; இது
விந்தையே!

முடை நாற்றமெடுக்கும் மூடத்தனங்கள்
கடை கட்டு மட்டும் தமிழருக்கு வாழ்வில்லை!

நடைபோட்டு வரும் உன் பாசறையில்
சிப்பாய்கள் நாங்கள்,
தடைபோட்டு மறித்தாலும் எம் தலைகளுக்குத்
தாழ்வில்லை!



– முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர்

“உங்கள் தொகுதியில் முதலமைச்சர்” துறை மூலம் 3,750 மனுக்களுக்குத் தீர்வு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 03.06.2021 அன்று தலைமைச் செயலகத்தில் உங்கள் தொகுதியில் முதலமைச்சர் துறை மூலம் தீர்வு காணப்பட்ட பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள்.

உங்கள் தொகுதியில் முதலமைச்சர் துறையின் கீழ் பெறப்பட்ட மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் 03.06.2021 அன்று தலைமைச் செயலகத்தில் வழங்கினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தேர்தல் பரப்புரையில் “உங்கள் தொகுதியில் ஸ்டாலின்” என்ற நிகழ்வின் மூலம் பெறப்பட்ட மனுக்கள் 100 நாட்களுக்குள் தீர்வு காணும் பொருட்டு “உங்கள் தொகுதியில் முதலமைச்சர்” என்ற புதிய துறை உருவாக்கப்பட்டு, அதன்மூலம் பெறப்பட்ட 4.20 இலட்சம் மனுக்கள் மாவட்ட வாரியாக, வகை வாரியாக பிரிக்கப்பட்டு, தமிழ்நாடு மின் ஆளுமை (TNeGA) மூலம் உருவாக்கப்பட்டுப் பராமரிக்கப்படும் வலைத்தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

இவற்றில், முதற்கட்டமாகப் பரிசீலனையில் எடுத்துக் கொள்ளப்பட்ட 1,52,000 மனுக்களில், 57,845 மனுக்கள் மீது உரியக் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, அவற்றிலிருந்து 3,750 மனுக்களுக்கான கோரிக்கைகளுக்கு முழுமையான தீர்வு காணப்பட்டுள்ளன. மீதமுள்ள 54,095 மனுக்கள் தீர்வு காணும் பொருட்டு, பல்வேறு நிலைகளில் பரிசீலனையில் உள்ளன.

உரிய முறையில் தீர்வு காணப்பட்ட 3,750 கோரிக்கை மனுக்களுக்கான விவரங்கள்

★ வருவாய்த் துறை – சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் – ஓய்வூதியம், வீட்டுமனை பட்டா போன்ற தீர்வு காணப்பட்ட தனிநபர் கோரிக்கைகள் 1,626,

★ ஊரக வளர்ச்சித் துறையின் சார்பில் வீடுகட்ட வழங்கப்பட்ட பணி ஆணைகள் 88, ஊரக வளர்ச்சித் துறையின் சார்பில் வீடுகட்ட வழங்கப்பட்ட பணி ஆணைகள் 88,

★ ஊரக வளர்ச்சித் துறையின் சார்பில் அடிப்படை கட்டமைப்பு பணிகளுக்காக வழங்கப்பட்ட ரூ.26 கோடி மதிப்பிலான பணி ஆணைகள் 548,

★ பெருநகர சென்னை மாநகராட்சி (GCC) சார்பில் பெறப்பட்டு, அடிப்படை வசதிகள் சம்பந்தமாக நிறைவேற்றப்பட்டவை 236,

★ சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்றல் வாரியம் (CMWSSB) சார்பில் குடிநீர் வசதிகள் சம்பந்தமாக நிறைவேற்றப்பட்டவை 261,

★ தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் (TANGEDCO) சார்பில் மின் கோரிக்கை சம்பந்தமாக நிறைவேற்றப்பட்டவை 575,

★ நகராட்சிகள் மற்றும் இதர துறைகள் சார்பில் பெறப்பட்டு, சம்பந்தப்பட்ட துறைகள் மூலமாகத் தீர்வு காணப்பட்டவைகள் 416 என மொத்தம் 3,750 மனுக்கள் மீது தீர்வு காணப்பட்டுள்ளது.

03.06.2021 அன்று முழுமையாகத் தீர்வு காணப்பட்ட 3,750 மனுதாரர்களில் கீழ்க்காணும் 12 மனுதாரர்களுக்கு ● காஞ்சிபுரம் மாவட்டம் செரப்பனஞ்சேரி சேர்ந்த திருமதி பத்மாவதி இலவச வீட்டுமனைப் பட்டா, ● காஞ்சிபுரம் ஒரகடத்தைச் சேர்ந்த திருமதி கன்னிகா அவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா, ● தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்த திரு.ம.முகேஷ் அவர்களுக்கு ரூ.1,00,000/–க்கான கல்விக்கடன், ● கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூரைச் சேர்ந்த திரு.ரா.கோவிந்தராஜ் அவர்களுக்கு ரூ.2,50,000/– மானியத்துடன் கூடிய ரூ.12,00,000/– மதிப்பீட்டிலான சுயதொழில் கடன் அனுமதி ஆணை ● வேலூர் மாவட்டம், குடியாத்தம் வட்டாரத்தைச் சேர்ந்த திரு.சுதர்சன் அவர்களுக்கு ரூ.2,10,000/–திற்கான பசுமை வீடு, ● தருமபுரி மாவட்டம் காரிமங்கலத்தைச் சேர்ந்த திருமதி.பழனியம்மாள் அவர்களுக்கு ரூ.2,10,000/–திற்கான பசுமை வீடு ● விழுப்புரம் மாவட்டம், வானூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த திரு.காந்தியப்பன் மற்றும் பொதுமக்கள் கோரிக்கையான ரூ.12,00,000/– மதிப்பிலான திறந்தவெளி கிணறு மற்றும் ரூ.41.50 இலட்சத்திலான இதர மூன்று பொதுப் பணிகளுக்கான ஆணைகள் ● காஞ்சிபுரம் மாவட்டம் வாலாஜாபாத் ஒன்றியத்தைச் சேர்ந்த பொது மக்களின் கோரிக்கையான சாலை அமைத்திட ரூ.47,90,000/–திற்கான நிருவாக அனுமதி ஆணை ● கிருஷ்ணகிரி மாவட்டம் செம்பரசணபள்ளி ஊராட்சியினைச் சேர்ந்த திரு.முனிகிருஷ்ணப்பா அவர்களின் கோரிக்கையான சமுதாயக் கிணறு அமைப்பதற்கு ரூ.12,25,000/–திற்கான நிருவாக அனுமதி ஆணை ● விழுப்புரம் மாவட்டம் தடாகம் ஊராட்சியினைச் சேர்ந்த திரு. மனோகர் அவர்களின் கோரிக்கையான கழிவுநீர் வாய்க்கால் அமைத்திட ரூ.20,12,000/–திற்கான நிருவாக அனுமதி ஆணை ● திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி வட்டாரத்தைச் சேர்ந்த திரு.புஷ்பநாதன் அவர்களின் கோரிக்கையான தார்ச்சாலை அமைத்திட ரூ.7,80,000/–திற்கான நிருவாக அனுமதி ஆணை ● வேலூர் மாவட்டம், கணியம்பாடி வட்டாரத்தைச் சேர்ந்த திரு. தினேஷ் அவர்களின் கோரிக்கையான கொண்டசமுத்திரம் கிராமத்தில் 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட குடிநீர் மேல் தேக்கத் தொட்டியினை அமைத்திட ரூ.22,64,000/–திற்கான நிருவாக அனுமதி ஆணை ஆகிய நலத்திட்டங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்கள்.

நடையை நிறுத்தாதே

நாய்கள் குரைத்துக் கொண்டேயிருக்கும்
அதற்காக நீ உன் நடையை நிறுத்தாதே !
நடுங்கி, ஒடுங்கி, ஓரம் ஒதுங்கத் தேவையில்லை
நாம் போவது கொள்ளையடிக்க அல்லவே ;
கொள்ளைகளை தடுத்து நிறுத்தத்தானே!
கொள்கை பரப்ப – குறிக்கோளை எட்டிப்பிடிக்க –
வெற்றிக் குன்றின் மீது ஏறிக் கொடி நாட்ட !
தூவப்படும் எதிரிகளின் கலக விதைகள்
முள்ளாக விளைந்து தூயவனே !
உன் கால்களில் குத்தும் உன்னைத் தொடர்ந்து வருவோர்
பாதங்களைக் காயப்படுத்தாதிருக்க அதனைத்
தூக்கி, முனை முறித்துத் தொலைவில் போட்டு விடுக !

முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் 97ஆவது பிறந்தநாளை முன்னிட்டு மரக்கன்றுகள் நடும் திட்டம்

முத்தமிழறிஞர் **டாக்டர் கலைஞர்** அவர்களின் 97ஆவது பிறந்தநாளை முன்னிட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 03.06.2021 அன்று சென்னை, மெரினா கடற்கரையில் அமைந்துள்ள முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நினைவிடத்தில் மரக்கன்று நட்டார்கள்.

பாதையில் குறுக்கிடும் காட்டாறு பதறத் தேவையில்லை – உன்
பாட்டன் பூட்டன் தாய் தந்தையர் கடந்தது எப்படி எனக் கணக்கிட்டுப்
பாலம் அமைத்தோ , தோள்பலம் காட்டி நீந்தியோ
பாதியில் பயணம் தடைபடாமல் ஏறுக கரையில் !
ஊளையிடும் நரிகளின் கூட்டம் ஒன்று வலப்புறம் போகும்
மற்றொன்று இடப்புறம் போகும் – அவை
வலம் போனால் என்ன ? இடம் போனால் என்ன ? மேலே
விழுந்து பிடுங்காத அளவுக்குப் பார்த்துக் கொள்க !
புதர்களில் விலங்குகள் மலைப்பாம்புகள் புரளும் – அந்த
இடர் களைய மட்டுமே கையில் ஆயுதம் தேவை !
பதர் என மண்டும் மனிதப் பகையினை மாய்க்கப்
பண்பெனும் வாளும் அன்பெனும் கவசமும் ஏந்திச் செல்க !

– முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர்

“உங்கள் தொகுதியில் முதலமைச்சர்” துறை உருவாக்கப்பட்ட 10 தினங்களுக்குள், மனுதாரர்கள் பயன்

“உங்கள் தொகுதியில் முதலமைச்சர் துறை'' உருவாக்கப்பட்ட 10 தினங்களுக்குள் குறைதீர்ப்புப் பணிகள் துவக்கம் – மனுதாரர்களுக்குப் பயன்களை வழங்கினார் மாண்புமிகு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள்.

உங்கள் தொகுதியில் முதலமைச்சர் துறையின் கீழ் பெறப்பட்ட மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 18.05.2021 அன்று வழங்கப்பட்டன.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தேர்தல் பரப்புரையில் ''உங்கள் தொகுதியில் ஸ்டாலின்'' என்ற நிகழ்வின் மூலம் பெறப்பட்ட மனுக்கள் 100 நாட்களுக்குள்

மாண்புமிகு
தமிழ்நாடு முதலமைச்சர்
திரு.**மு.க.ஸ்டாலின்** அவர்கள்
''உங்கள் தொகுதியில் முதலமைச்சர் துறையின்'' கீழ் பெறப்பட்ட மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு, 18.05.2021 அன்று பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள்.

தீர்வு காணும் பொருட்டு "உங்கள் தொகுதியில் முதலமைச்சர்" என்ற புதிய துறை உருவாக்கப்பட்டு, சிறப்பு அலுவலர் நியமிக்கப்பட்டு, 09.05.2021 அன்று அவரிடம் அனைத்து மனுக்களும் ஒப்படைக்கப்பட்டன.

அனைத்து மாவட்டங்களிலிருந்தும் 72 மரப் பெட்டிகளிலும் மற்றும் 275 அட்டைப் பெட்டிகளிலும் சுமார் 4 இலட்சம் மனுக்கள் இதுவரை இத்துறையில் பெறப்பட்டன.

பெறப்பட்ட அனைத்து மனுக்களும் மாவட்ட வாரியாக, வகை வாரியாக பிரிக்கப்பட்டு தமிழ்நாடு மின் ஆளுமை (TNeGA) மூலம் பராமரிக்கப்படும் வலைத்தளத்தில் பதிவேற்றம் செய்யப்படுகிறது. இதுவரை சுமார் 70,000 மனுக்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மனுவும் வலைத்தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டவுடன் தனித்தன்மையுடன் கூடிய அடையாள எண் வழங்கப்பட்டு, அடையாள எண்ணுடன் கூடிய குறுஞ்செய்தி (SMS) மனுதாரருக்கு அனுப்பப்படுகிறது. மனுக்களில் கொடுக்கப்பட்டுள்ள விவரங்கள் மற்றும் அதன் உண்மைத் தன்மைக்கேற்றவாறு தகுதியான ஒவ்வொரு மனுவும் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு உடனடி தீர்வு காண அனைத்து நடவடிக்கைகளும் மாவட்ட அலுவலர்கள் மேற்கொள்கிறார்கள்.

இதுவரை சென்னை, திருவள்ளூர், இராணிப்பேட்டை, வேலூர், திருவாரூர், தேனி ஆகிய ஆறு மாவட்டங்களிலிருந்து பெறப்பட்ட 549 மனுக்களின் மீது முழுமையாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் செயல்படத் தொடங்கியதைக் குறிக்கும் வகையில், பத்து பயனாளிகளை நேரில் அழைத்து அவர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நலத் திட்ட உதவிகளை வழங்கினார். சென்னை, ஆதம்பாக்கத்தைச் சேர்ந்த திருமதி ராணி அவர்களுக்கு முதியோர் உதவித் தொகையும், சென்னை, பரங்கிமலையைச் சார்ந்த திருமதி N.நித்யா அவர்களுக்கு விதவை உதவித் தொகையும், சென்னை, தியாகராயநகரைச் சார்ந்த திரு.U.சத்தியநாராயணன் அவர்களுக்கு மாற்றுத்திறனாளி உதவித் தொகையும், சென்னை, சூளைமேட்டைச் சேர்ந்த செல்வி தாயாரம்மா அவர்களுக்கு முதிர்கன்னி உதவித் தொகையும், தண்டையார்பேட்டையைச் சேர்ந்த திருமதி சுமதி அவர்களுக்குத் தையல் இயந்திரமும், சென்னை, வில்லிவாக்கத்தைச் சேர்ந்த திரு.உதயகுமார் அவர்களுக்கு வாரிசு சான்றிதழும், சென்னை, ஆயிரம் விளக்கைச் சேர்ந்த திருமதி நந்தினி அவர்களுக்குக் காதுகேட்கும் கருவியும், இராணிப்பேட்டை மாவட்டம் கொண்டபாளையத்தைச் சேர்ந்த திருமதி ஜெயந்தி அவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாவும், இராணிப்பேட்டை மாவட்டம் வெங்குபட்டு ஊராட்சியைச் சேர்ந்த திரு.முத்துராமன் அவர்களுக்கு வீடு கட்ட உதவியும், இராணிப்பேட்டை மாவட்டம், சிறுவாளைத்தைச் சேர்ந்த திரு.சுபாஷ் அவர்களுக்குச் சொட்டுநீர்ப் பாசன உதவி ஆகிய நலத் திட்டங்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டன.

சாலை மேம்பாடு, குடிநீர் வசதி போன்ற அடிப்படை வசதி வேண்டி பொதுவான கோரிக்கைகள் வரப்பெற்றவை பரிசீலிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன. இவற்றில் முதற்கட்டமாக பொது கோரிக்கைகள் தொடர்பாக வரப்பெற்ற நான்கு மனுக்களின்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக்கான ஒப்புதல் ஆணைகள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சம்பந்தப்பட்ட பின்வரும் துறைகளுக்கு வழங்கப்பட்டது.

திருவள்ளூர் மாவட்டத்தைச் சார்ந்த திரு.M.முனுசாமி என்பவரின் கோரிக்கையின் அடிப்படையில், அழிஞ்சிவாக்கம் கிராம ஊராட்சியில் அங்கன்வாடி மையக் கட்டடம் ரூ.10.1 இலட்சம் மதிப்பீட்டில் கட்டுவதற்கு அனுமதி ஆணையும், திருவள்ளூர் மாவட்டத்தைச் சார்ந்த திரு.முருகன் என்பவரின் கோரிக்கையை ஏற்று, ஆமூர் ஊராட்சி, சித்தேரி கால்வாயில் தடுப்பணை கட்டுவதற்கு ரூ.4.6 இலட்சத்தில் அனுமதி ஆணையும், இராணிப்பேட்டை மாவட்டத்தைச் சேர்ந்த திரு.குணசேகரன் என்பவரின் கோரிக்கையின் அடிப்படையில், அசநெல்லிகுப்பம் கிராமம், சிமெண்ட் சாலை அமைப்பதற்கு ரூ.1.89 இலட்சத்தில் அனுமதி ஆணையும், இராணிப்பேட்டை மாவட்டம், கல்மேல்குப்பம் ஊராட்சியைச் சேர்ந்த திரு.புவனேஸ்குமார் என்பவரின் கோரிக்கையின் அடிப்படையில், எருக்கம்தொட்டி கிராமம், பிள்ளையார் கோவில் தெருவில் குடிநீர் குழாய் அமைத்திட ரூ.1.1 இலட்சம் அனுமதி ஆணை ஆகிய நலத் திட்டங்களுக்கான ஆணைகள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது.

இதேபோல், இத்திட்டத்தின் கீழ், பெறப்பட்டுள்ள மனுக்கள் அனைத்தையும் முறையாக ஆய்வு செய்து, விரைவில் உரிய நடவடிக்கை எடுக்கப்படுவதை, உறுதி செய்ய வேண்டுமென இத்துறை அலுவலர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவுரை வழங்கினார்கள்.

டெல்டா பாசனப் பகுதிகளில் நீர் நிலைகளைத் தூர்வாரி சீரமைக்கும் பணிகளைப் போர்க்கால அடிப்படையில் விரைந்து நிறைவேற்ற ஆணை!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 11.06.2021 அன்று கல்லணையில் மேற்கொள்ளப்பட்டு வரும் சீரமைப்புப் பணிகள், தஞ்சாவூர் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் சிறப்பு தூர்வாரும் பணிகள் ஆகியவற்றைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் 11.06.2021 அன்று, தஞ்சாவூர் மாவட்டம், கல்லணையில், நீர்வளத் துறை சார்பில் நீர் வள அமைப்புகள் விரிவாக்கம், புதுப்பித்தல், புனரமைத்தல் திட்டத்தின் கீழ், முதல்கட்டமாக ரூ.1,036 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் சீரமைப்புப் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள். மேலும், நீர்வளத் துறை சார்பில் காவேரி டெல்டா மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் சிறப்பு தூர்வாரும் பணிகள் குறித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

மேட்டூர் அணையிலிருந்து டெல்டா பாசன வசதிக்காகத் திறந்து விடப்படும் தண்ணீர் விரயமாகாமல்

“குறித்த காலத்தில், தரமான முறையில் பணிகளை முடிக்க ஏதுவாக, 9 மாவட்டங்களுக்கும் சிறப்பு கண்காணிப்பு அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். மேற்படி பணிகள் தொடர்பாக உழவர் குழுக்கள் உருவாக்கப்பட்டு, அக்குழுக்களின் ஆலோசனைகள் பெறப்பட்டு, வெளிப்படைத் தன்மையுடன் பணிகள் நடைபெறுவதை தெரிவிக்கும் வகையில் அனைத்து தகவல்களும் ஆவணப்படுத்தப்பட்டு அறிவிப்பு பலகைகளில் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன”.

கடைமடை வரை தடையின்றி சென்று சேரும் வகையில், டெல்டா பாசனப் பகுதிகளில் நீர் நிலைகளைத் தூர்வாரி சீரமைக்கும் பணிகளைப் போர்க்கால அடிப்படையில் விரைந்து நிறைவேற்றத் தமிழ்நாடு அரசால் ஆணையிடப்பட்டுள்ளது.

இதன்படி, விவசாயச் சங்கங்களின் பிரதிநிதிகளுடன் ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டு, நீர்வளத் துறையின் சார்பில், திருச்சிராப்பள்ளி, கரூர், அரியலூர், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, கடலூர், புதுக்கோட்டை ஆகிய 9 மாவட்டங்களில், ரூ.65.10 கோடி திட்ட மதிப்பில் 4061.44 கிலோ மீட்டர் தூரத்திற்கு 647 பணிகள் நடைபெற்று வருகின்றன.

குறித்த காலத்தில், தரமான முறையில் பணிகளை முடிக்க ஏதுவாக, 9 மாவட்டங்களுக்கும் சிறப்பு கண்காணிப்பு அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். மேற்படி பணிகள் தொடர்பாக உழவர் குழுக்கள் உருவாக்கப்பட்டு, அக்குழுக்களின் ஆலோசனைகள் பெறப்பட்டு, வெளிப்படைத் தன்மையுடன் பணிகள் நடைபெறுவதைத் தெரிவிக்கும் வகையில் அனைத்து தகவல்களும் ஆவணப்படுத்தப்பட்டு அறிவிப்புப் பலகைகளில் பொதுமக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன.

டெல்டா மாவட்டங்களில் விவசாயிகள் குறுவை சாகுபடிக்கான பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். இதற்காக விவசாயிகளுக்கு உதவும் வகையில் விதைகள், பூச்சிக்கொல்லி மருந்துகள், உரங்கள் ஆகியவை போதுமான அளவிற்கு இருப்பு வைக்கப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றன. இந்தப் பணிகள் மூலமாக டெல்டா மாவட்டங்களில் நீர்வளம் மேம்படும். இவ்வாண்டு நிர்ணயிக்கப்பட்ட சாகுபடி இலக்கைத் தாண்டி உணவு உற்பத்தியில் தமிழ்நாடு சாதனை படைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

காவேரி டெல்டா மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் சிறப்பு தூர்வாரும் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்யும் பொருட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 11.06.2021 அன்று, தஞ்சாவூர் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் கள ஆய்வு மேற்கொண்டார்கள்.

முதலாவதாக, தஞ்சாவூர் வட்டம், வல்லம் வடக்கு கிராமத்தில் ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் முதலை முத்துவாரி வடிகாலில் மேற்கொள்ளப்பட்டு வரும் தூர்வாரும் பணிகளையும், தஞ்சாவூர் வட்டம், பள்ளியக்ரஹாரம் கிராமத்தில் ரூ.17 இலட்சம் மதிப்பீட்டில் வெண்ணாற்றில் மண்மேட்டுக்களை சமன்படுத்தும் பணிகளையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

அதனைத் தொடர்ந்து, திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் வட்டம், கொடியாளம் கிராமத்தில், ரூ.29.70 இலட்சம் மதிப்பீட்டில் புலிவலம் மணற்போக்கி வடிகால் கால்வாயில் நடைபெற்று வரும் தூர்வாரும் பணிகளையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

❖ ❖ ❖

டெல்டா மண்டலத்தில் ஹைட்ரோகார்பன் திட்டத்திற்கான ஏல அறிவிக்கையினை நிறுத்த வேண்டும்

மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. **நரேந்திர மோடி** அவர்களுக்கு,
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் எழுதிய கடிதம் – 13.06.2021

டெல்டா மாவட்டங்களில் ஒன்றான புதுக்கோட்டையிலுள்ள வடதெரு என்ற கிராமத்தில் ஹைட்ரோகார்பன் திட்டத்திற்கான ஏல அறிவிக்கையினை ஒன்றிய அரசின் பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகம் கடந்த 10.06.2021 அன்று வெளியிட்டுள்ளது. இதனை உடனடியாக நிறுத்தவேண்டுமென வலியுறுத்தி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களுக்குக் கடிதம் எழுதியுள்ளார்கள்.

தொன்றுதொட்டு தமிழகத்தின் நெற்களஞ்சியமாகவும், தமிழர் நாகரிகத்தின் ஆணிவேராகவும் காவிரிப் படுகை விளங்கி வருகிறது. "சோழ நாடு சோறுடைத்து" என்ற சொல் நெடுங்காலமாக வழக்கத்தில் உள்ள ஒன்று. இத்தனை பெருமை கொண்ட காவிரிப் படுகை பகுதியையும், அதனைச் சார்ந்திருக்கும் விவசாயப் பெருமக்களின் நலனையும் பாதுகாப்பதில் எங்கள் அரசு உறுதி பூண்டுள்ளது. நேற்றையதினம், மேட்டூர் அணையிலிருந்து பாசனத்திற்காகத் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. மேலும், காவிரிப் படுகை மாவட்டங்களில் உள்ள வாய்க்கால்கள், நீர்நிலைகளைத் தூர்வாரும் பணிகளுக்கு போதுமான நிதி ஒதுக்கி, அப்பணிகளைத் துரிதப்படுத்த அரசு ஆணையிட்டுள்ளதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

10.06.2021 அன்று ஒன்றிய பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகம், நாடு முழுவதும் 75 பகுதிகளில் ஹைட்ரோகார்பன் பிரித்தெடுக்கும் திட்டங்களைச் செயல்படுத்த ஏலம் விடுவதாக ஒரு அறிவிக்கை வெளியிட்டுள்ளது. அவ்அறிவிக்கையில், காவிரிப் படுகை பகுதியில் வடதெரு என்ற பகுதியும் சேர்க்கப்பட்டுள்ளது. ஹைட்ரோகார்பன் உற்பத்திக்காக ஆழ்குழாய்க் கிணறுகளை

அமைத்தால், வளமான காவிரிப் படுகை பகுதியிலுள்ள விவசாய மக்களின் வாழ்வாதாரம் பாதிப்புக்குள்ளாகும் என்பதால், இந்தப் படுகை மற்றும் அதனைச் சுற்றியுள்ள மாவட்டங்களில் ஹைட்ரோகார்பன் உற்பத்தி செய்ய ஆழ்குழாய்க் கிணறுகளை அமைக்கக் கூடாது என்பது தமிழ்நாடு அரசின் உறுதியான கொள்கையாகும்.

இக்காரணங்களை எடுத்துக்காட்டி, மேற்குறிப்பிட்ட ஏலத்திலிருந்து வடதெரு பகுதியை நீக்க வேண்டுமென்றும், எதிர்காலங்களில் தமிழ்நாட்டின் எந்தப் பகுதியையும் ஹைட்ரோகார்பன் ஆய்வுக்காக ஏலத்தில் கொண்டு வரக்கூடாது என்றும்,

மேலும், பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகம் ஏலம் விட்டாலும், தமிழ்நாட்டில் ஹைட்ரோகார்பன் ஆய்வு மற்றும் உற்பத்தி செய்யத் தேவைப்படும் அனுமதிகளைத் தமிழ்நாடு அரசு ஒருபோதும் வழங்காது என்றும், தமிழ்நாட்டின் விவசாயப் பெருங்குடி மக்களின் நலனையும், காவிரிப் படுகை பகுதியின் வளத்தையும் "கண்ணை இமை காப்பது போல" எங்கள் அரசு காக்கும் என்றும் உறுதிப்படக் கூற விரும்புகிறேன்.

❖ ❖ ❖

தமிழ்நாட்டில் மருத்துவ மாணவர் சேர்க்கையில் நீட் தேர்வின் தாக்கம் குறித்து அறிக்கை சமர்ப்பிக்க ஓய்வு பெற்ற நீதியரசர் திரு. ஏ.கே. இராஜன் தலைமையில் உயர்நிலைக் குழு அமைத்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணை

மருத்துவ மாணவர் சேர்க்கையில் நீட் தேர்வு முறையானது சமுதாயத்தின் பின்தங்கிய நிலையில் உள்ள மாணவர்களுக்குக் கடந்த சில ஆண்டுகளாகப் பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளதா என்பது குறித்தும், அவ்வாறு பின்தங்கிய மாணவர்களுக்குப் பாதிப்புகள் ஏற்பட்டிருந்தால், அவற்றைச் சரி செய்யும் வகையில், இம்முறைக்கு மாற்றாக அனைவரும் பயன்பெறத்தக்க வகையிலான மாணவர் சேர்க்கை முறைகளை வகுத்து, அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான சாத்தியக் கூறுகள் பற்றியும், அவற்றிற்கான சட்ட வழிமுறைகள் பற்றியும் முழுமையாக ஆராய்ந்து, அரசுக்குப் பரிந்துரைகளை அளித்திட ஓய்வு பெற்ற நீதியரசர் திரு. ஏ.கே. இராஜன் அவர்கள் தலைமையில், கல்வியாளர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் அடங்கிய உயர்நிலைக் குழு ஒன்று அமைக்கப்படும் என மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் ஏற்கெனவே அறிவித்திருந்தார்கள்.

இந்த அறிவிப்பின்படி, ஓய்வு பெற்ற நீதியரசர் திரு. ஏ.கே இராஜன் அவர்கள் தலைமையில், கீழ்க்காணும் உறுப்பினர்களைக் கொண்ட குழுவினை அமைத்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 10.06.2021 அன்று உத்தரவிட்டுள்ளார்கள்:

1. நீதியரசர் திரு. ஏ.கே. இராஜன் (ஓய்வு) – தலைவர்
2. டாக்டர் ஜி.ஆர். இரவீந்திரநாத் – உறுப்பினர்
3. டாக்டர் ஜவஹர் நேசன் – உறுப்பினர்
4. அரசு முதன்மைச் செயலாளர், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை – உறுப்பினர்
5. அரசு முதன்மைச் செயலாளர், பள்ளிக் கல்வித் துறை – உறுப்பினர்
6. அரசு செயலாளர், சட்டத் துறை – உறுப்பினர்
7. அரசு முதன்மைச் செயலாளர் / சிறப்புப் பணி அலுவலர், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை – உறுப்பினர்
8. இயக்குநர், மருத்துவக் கல்வி இயக்ககம் – உறுப்பினர்
9. கூடுதல் இயக்குநர், மருத்துவக் கல்வி இயக்ககம் / செயலர், தேர்வுக் குழு – உறுப்பினர் – செயலர்/ ஒருங்கிணைப்பாளர்

இந்தக் குழு உரியப் புள்ளி விவரங்களை ஆய்வு செய்து, தமிழ்நாட்டிலுள்ள பின்தங்கிய மாணவர்களின் நலனைப் பாதுகாத்திடத் தேவையான பரிந்துரைகளை ஒரு மாத காலத்திற்குள் அரசுக்கு அளிக்கும். இந்தப் பரிந்துரைகளை ஆய்வு செய்து அடுத்த கட்ட நடவடிக்கைகளைத் தமிழ்நாடு அரசு மேற்கொள்ளும்.

சேலம் மாவட்டத்தில் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் கூடுதலாக ஆக்சிஜன் வசதியுடன் கூடிய 500 படுக்கை வசதிகளை ஏற்படுத்த வேண்டும்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க. ஸ்டாலின்** அவர்கள் 20.05.2021 அன்று சேலம் மாவட்டத்தில் ஆக்சிஜன் வசதியுடன் கூடிய 500 படுக்கை வசதிகள் கொண்ட கோவிட் சிறப்பு சிகிச்சை மையத்தினை திறந்து வைத்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 20.05.2021 அன்று சேலத்தில், ஆக்சிஜன் வசதியுடன் கூடிய 500 படுக்கை வசதிகள் கொண்ட கோவிட் சிறப்பு சிகிச்சை மையத்தினை திறந்து வைத்தார்கள். மேலும், 10 நாட்களுக்குள் கூடுதலாக 500 படுக்கை வசதிகளை ஏற்படுத்தி, இந்தியாவிலேயே முதன்மையான சிறப்புச் சிகிச்சை மையமாக மாற்ற உத்தரவிட்டுள்ளார்.

தமிழகத்தில் கொரோனா வைரஸ் நோய்த் தடுப்பு நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்த, 10.05.2021 அன்று காலை 4.00 மணி முதல் 24.05.2021 அன்று காலை 4.00 மணி வரை இருவாரங்களுக்கு மாநிலம் முழுவதும் முழு ஊரடங்கு உத்தரவு அமல்படுத்தப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் கொரோனா நோய் தொற்றினை கட்டுப்படுத்திடத் தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

சேலம் மாவட்டத்தில் கடந்த 07.05.2021 அன்று முதல் நோய்த் தடுப்பு நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்த பல்வேறு புதிய கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு நடைமுறையிலிருந்து வருகிறது. கடந்த 07.05.2021 அன்று வரை 71,417 சளி மாதிரிகள் எடுக்கப்பட்டு நோய்த் தொற்று பாதிப்புக்குள்ளான 8,768 நபர்கள் கண்டறியப்பட்டு அவர்களுக்குச் சிறப்பான சிகிச்சைகள் அளிக்கப்பட்டு 7,432 நபர்கள் பூரண குணமடைந்து வீடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

கொரோனா பெருந்தொற்று பரவாமல் கட்டுப்படுத்திடச் சேலம் மாவட்டத்தில் தீவிரமாக பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ஆக்சிஜன் வசதியுடன் கூடிய 966 படுக்கைகளும், அரசு மருத்துவமனைகளில் ஆக்சிஜன் வசதியுடன் கூடிய 617 படுக்கைகளும் என மொத்தம் ஆக்சிஜன் வசதியுடன் கூடிய 1,583 படுக்கைகள் அரசு மருத்துவமனைகளில் அமைக்கப்பட்டுள்ளன. தனியார் மருத்துவமனைகளில்

ஆக்சிஜன் வசதியுடன் கூடிய 2,896 படுக்கைகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், கொரோனா சிறப்புச் சிகிச்சை மையத்தில் 2,770 படுக்கைகளும், அரசு ஆரம்பச் சுகாதார நிலையங்களில் 600 படுக்கைகளும் அமைக்கப்பட்டுள்ளன.

கொரோனா வைரஸ் நோய்த் தொற்று பரவலைத் தடுத்திடவும், ஊரடங்கினை கண்காணித்திடவும், கொரோனா வைரஸ் நோய்த் தொற்றினால் பாதிக்கப்பட்ட நபர்கள் வீட்டிலேயே தனிமைப்படுத்தப்பட்டு தனியாக உள்ளார்களா என்பதைக் கண்காணிக்கவும், கோவிட் சிகிச்சை மையங்களில் சிகிச்சை பெற்றுவரும் நபர்களின் உடல் நலனைக் கண்காணித்திடவும், சேலம் மாவட்டம் முழுவதும் 177 பகுதிகளில் 354 நபர்கள் கொண்ட கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டு, 24x7 கண்காணிப்பு பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

பெருந்தொற்றால் பாதிக்கப்பட்டுள்ள ஊரகப் பகுதிகளில் வசிக்கும் கிராமப்புற மக்களுக்குச் சேலம் மாவட்டத்தில் உள்ள 20 ஊராட்சி ஒன்றியங்களில் புதியதாக 26 கோவிட் பராமரிப்பு மையங்களும், மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள 4 மண்டலங்களில் 9 கோவிட் பராமரிப்பு மையங்களும் மற்றும் நகராட்சிப் பகுதிகளில் 3 கோவிட் பராமரிப்பு மையங்கள் ஆக மொத்தம் 38 கோவிட் பராமரிப்பு மையங்கள் (கோவிட் கேர் சென்டர்) துவக்கப்பட்டுள்ளது.

மேலும், சித்த மருத்துவத் துறையின் சார்பில் சேலம் – 8 அரசு மகளிர் கலைக் கல்லூரி விடுதியில் 100 படுக்கை சித்த மருத்துவ கோவிட் கண்காணிப்பு மையம் அமைக்கப்பட்டுச் செயல்பட்டு வருகின்றது. இந்த மையத்தில் கூடுதலாக 100 படுக்கைகள் அமைக்கப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களால் நோயாளிகளின் சிகிச்சைக்கு 20.05.2021 அன்று தொடங்கி வைக்கப்பட்டது.

மேலும், முதன்முறையாகத் தடையின்றி ஆக்சிஜன் உற்பத்தி செய்யும் இடத்திலேயே 500 படுக்கை வசதிகள் கொண்ட சிறப்பு கொரோனா சிகிச்சை மையம், உயிர் காக்கும் தீவிர சிகிச்சைப் பிரிவு, ஆய்வகம், மருந்தகம், தகுதி வாய்ந்த சிறப்பு மருத்துவர்கள், செவிலியர்கள், நவீன சிகிச்சை உபகரணங்கள் உள்ளிட்ட அனைத்து வசதிகளும் இதில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

கொரோனா சிறப்புச் சிகிச்சை மையத்தினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்து ஆய்வு செய்து, மேலும் இம்மையத்தை விரிவாக்கம் செய்து பொதுமக்கள் பயன்பெறும் வகையில் கூடுதலாக 500 ஆக்சிஜன் வசதியுடைய படுக்கைகளை ஏற்படுத்தி இந்தியாவிலேயே முதன்மையான சிறப்புச் சிகிச்சை மையமாக மாற்ற வேண்டுமெனவும், 10 நாட்களுக்குள் இப்பணிகளை முடித்திடவும் உத்தரவிட்டார்கள்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் காவல் துறையினரின் பணியினை ஊக்குவிக்கும் வகையில் ரூ.5 ஆயிரம் ஊக்கத்தொகை வழங்க உத்தரவு

கோவிட்–19 பெருந்தொற்று, உலகளவில் மட்டுமல்ல இந்தியாவில், தமிழ்நாடு உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களிலும் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி வருகிறது. தமிழ்நாட்டில் கோவிட் தொற்றின் முதல் மற்றும் இரண்டாம் அலையின் காரணமாக காவல்துறைப் பணியாளர்கள் உட்பட பல்வேறு முன்களப் பணியாளர்கள் தங்களது இன்னுயிரையும் பொருட்படுத்தாது கடமையாற்றி வருகின்றனர். அவர்களது இன்றியமையாத பணியினை அங்கீகரிக்கும் விதமாகவும், அவர்களது பணியினை ஊக்குவிக்கும் விதமாகவும் காவல்துறையைச் சேர்ந்த இரண்டாம் நிலைக் காவலர் முதல் ஆய்வாளர் வரையிலான 1,17,184 ஆளிநர்களுக்கு ரூ.5,000/–வீதம் ஊக்கத் தொகை வழங்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

கோயம்புத்தூர் மாவட்டத்தில், கொரோனா சிறப்புச் சிகிச்சை மையத்தில் அமைக்கப்பட்டுள்ள கூடுதல் படுக்கை வசதிகளை ஆய்வு

கோயம்புத்தூர் மாவட்டத்தில் கொரோனா நோய்த் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு, அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, ESI மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை, பொள்ளாச்சி – மேட்டுப்பாளையம் அரசு மருத்துவமனை, மதுக்கரை அரசு மருத்துவமனை ஆகிய அரசு மருத்துவமனைகளிலும், காருண்யா கல்லூரி, பாரதியார் பல்கலைக்கழகம், கொடிசியா வளாகம், அண்ணா பல்கலைக்கழகம், கோவை – தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், சீனிவாச கல்யாண மண்டபம் (சித்தா முறை சிகிச்சை மையம்), காரமடை– வித்ய விகாஷ் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி ஆகிய கொரோனா சிறப்புச் சிகிச்சை மையங்களிலும், 67 தனியார் மருத்துவமனைகளிலும், 10 தனியார் தங்கும் விடுதிகளிலும் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டு, தற்போது 22,852 நபர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர். அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 1,001 நபர்கள், இ.எஸ்.ஐ மருத்துவமனையில் 810 நபர்கள், பொள்ளாச்சி மாவட்ட தலைமை மருத்துவமனையில் – 120 நபர்கள், மேட்டுப்பாளையம் அரசு மருத்துவமனை (ஹிந்துஸ்தான் வளாகம்) – 80 நபர்கள், 6 தற்காலிக சிறப்புச் சிகிச்சை மையங்களில் 2,034 நபர்கள், 67 தனியார் மருத்துவமனைகளில் 4,672 நபர்கள், 16 தனியார் விடுதிகளில் 589 நபர்கள் சிகிச்சை பெற்று வருகிறார்கள். இவர்களில் 4,709 நபர்கள் பிற மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் ஆவார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 20.05.2021 அன்று கோயம்புத்தூர் மாவட்டம், கொடிசியா வளாகத்தில் உள்ள கொரோனா சிறப்புச் சிகிச்சை மையத்தில் அமைக்கப்பட்டுள்ள கூடுதல் படுக்கை வசதிகளையும், குமரகுரு பொறியியல் கல்லூரியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள கொரோனா சிறப்புச் சிகிச்சை மையத்தையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

கொரோனா நோய்த் தொற்றால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில், படுக்கை வசதிகளை அதிகரிக்கும் வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 20.05.2021 அன்று கோயம்புத்தூர் மாவட்டம், கொடிசியா வளாகத்தில் உள்ள கொரோனா சிறப்புச் சிகிச்சை மையத்தில் ஏற்கெனவே 676 படுக்கை வசதிகள் இருந்த நிலையில், கூடுதலாக அமைக்கப்பட்டுள்ள 820 படுக்கை வசதிகளையும், குமரகுரு பொறியியல் கல்லூரியில் புதிதாக 360 படுக்கை வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ள கொரோனா சிறப்புச் சிகிச்சை மையத்தையும் பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.

18 முதல் 44 வயது வரை உள்ளவர்களுக்கு கொரோனா தடுப்பூசி செலுத்தும் திட்டம் தொடக்கம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 20.05.2021 அன்று திருப்பூர் மாவட்டம், நேதாஜி ஜவுளிப் பூங்காவில், 18 முதல் 44 வயது வரை உள்ள பயனாளிகளுக்கு கொரோனா தடுப்பூசி செலுத்தும் முகாமினை தொடங்கி வைத்தார்கள்.

திருப்பூர் மாவட்டத்தில் கொரோனா நோய்த் தாக்குதலைக் கட்டுப்படுத்தும் வகையில் அரசு வழிகாட்டுதல்கள் படி கடந்த 16.01.2021 அன்று கொரோனா தடுப்பூசி செலுத்தும் பணி தொடங்கப்பட்டது. முதற்கட்டமாக 23,565 முன்களப் பணியாளர்கள் மற்றும் 16,106 சுகாதாரப் பணியாளர்கள் ஆகியோருக்கு கொரோனா தடுப்பூசி செலுத்தப்பட்டது. 01.03.2021 முதல் 60 வயதிற்கு மேற்பட்டவர்கள் மற்றும் 45 வயது முதல் 59 வயது வரையிலான இணைநோய் உள்ளவர்களுக்கும் கொரோனா தடுப்பூசி செலுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து, 45 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கும் கொரோனா தடுப்பூசி செலுத்தும் பணி 01.04.2021 முதல் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இதனையடுத்து, 18 முதல் 44 வயது வரை உள்ளவர்களுக்குத் தடுப்பூசி செலுத்துவதற்கான திட்டத்தை மாநில அரசுகளே செயல்படுத்த வேண்டும் என்ற மத்திய அரசின் முடிவையொட்டி, மத்திய அரசு ஒதுக்கீட்டின் கீழ், மாநில அரசுகள் வாங்கும் முறையின் அடிப்படையில் 1.5 கோடி தடுப்பூசிகளையும், உலகளாவிய ஒப்பந்தப்புள்ளி மூலமாக 3.5 கோடி தடுப்பூசிகளையும் வாங்கிட அனைத்து முயற்சிகளையும் அரசு எடுத்து வருகிறது. மேலும், இந்த வயதிற்கு உட்பட்டவர்கள் அனைவரும் பல்வேறு பணிகளில் ஈடுபட்டு நமது பொருளாதாரத்தின் முதுகெலும்பாகத் திகழ்வதால், இத்திட்டத்தின் முதற்கட்டத்தில், அதிக தொற்று பாதிப்பு அபாயம் (High Risk) உள்ளவர்களுக்கும், தொழிற்சாலைகளில் பணிபுரிவோருக்கும் (Industrial workers) தடுப்பூசி செலுத்திட, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

இதன்படி, 18 முதல் 44 வயது வரை உள்ள அனைவருக்கும் இலவசமாகத் தடுப்பூசி செலுத்தும் பணியினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள் 20.05.2021 அன்று திருப்பூர் மாவட்டம், நேதாஜி ஜவுளிப் பூங்காவில் தொடங்கி வைத்தார். மேலும், தடுப்பூசி செலுத்திக் கொண்டவர்களுக்குச் சான்றிதழ்களையும் வழங்கினார். இப்பூங்காவில் 12,000 தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். இவர்களில் தகுதியுள்ளோர் அனைவருக்கும் தடுப்பூசி அளிக்கப்படும்.

மதுரை மாவட்டத்தில், கூடுதலாக அமைக்கப்பட்டுள்ள ஆக்சிஜன் வசதியுடன் கூடிய படுக்கைகள் கொண்ட கோவிட் சிறப்புச் சிகிச்சை மையத்தைத் திறந்து வைத்து ஆய்வு!

*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க. ஸ்டாலின்** அவர்கள் 21.05.2021 அன்று, மதுரை மாவட்டம், தோப்பூர் அரசு காசநோய் மருத்துவமனையில் கூடுதலாக அமைக்கப்பட்டுள்ள ஆக்சிஜன் வசதியுடன் கூடிய 500 படுக்கைகள் கொண்ட கோவிட் சிறப்புச் சிகிச்சை மையத்தைத் திறந்து வைத்தார்கள்.*

மதுரை மாவட்டத்தில் 07.05.2021 முதல் கொரோனா நோய்த் தடுப்பு நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்த பல்வேறு புதிய கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. கடந்த 15.03.2021 முதல் 21.05.2021 வரை 3,63,599 நபர்களுக்குப் பரிசோதனைகள் செய்யப்பட்டு, நோய்த் தொற்று பாதிப்புக்குள்ளான 30,521 நபர்கள் கண்டறியப்பட்டு அவர்களுக்குச் சிறப்பான சிகிச்சைகள் அளிக்கப்பட்டதன் விளைவாக 18,564 நபர்கள் பூரண குணமடைந்துள்ளனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி, கொரோனா பெருந்தொற்று பரவாமல் கட்டுப்படுத்திட மதுரை மாவட்டத்தில் பல்வேறு நடவடிக்கைகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு, மதுரை அரசு இராஜாஜி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை உள்ளிட்ட அரசு மருத்துவமனைகளில் ஆக்சிஜன் வசதியுடன் கூடிய

1,101 படுக்கைகளும், ஆக்சிஜன் வசதி அல்லாத 646 படுக்கைகளும், தனியார் மருத்துவமனைகளில் ஆக்சிஜன் வசதியுடன் கூடிய 1,131 படுக்கைகளும், ஆக்சிஜன் வசதி அல்லாத 794 படுக்கைகளும் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், கொரோனா சிறப்புச் சிகிச்சை மையத்தில் 2,620 படுக்கைகளும் அமைக்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் 21.05.2021 அன்று, மதுரை மாவட்டம், தோப்பூர் அரசு காசநோய் மருத்துவமனையில் கூடுதலாக அமைக்கப்பட்டுள்ள ஆக்சிஜன் வசதியுடன் கூடிய 500 படுக்கைகளில் முதற்கட்டமாக 200 படுக்கை கொண்ட கோவிட் சிறப்பு சிகிச்சை மையத்தினை திறந்து வைத்து ஆய்வு செய்தார். அப்போது, இம்மையத்தில் உடனடியாக கொரோனா தொற்று நோயாளிகளை அனுமதித்து உரியச் சிகிச்சை அளித்திட மாவட்ட நிர்வாகத்தினருக்கு அறிவுறுத்தினார்.

❖ ❖ ❖

HLL Biotech நிறுவனம் உற்பத்தியைத் தொடங்குவதற்கு ஒன்றிய அரசு உரிய நிதியை விரைந்து ஒதுக்கீடு செய்ய வேண்டும்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 25.05.2021 அன்று செங்கல்பட்டு மாவட்டம், திருக்கழுக்குன்றத்தில் அமைந்துள்ள மத்திய அரசின் HLL Biotech நிறுவனத்தின் தடுப்பூசி தயாரிக்கும் ஆய்வுக் கூடத்தை ஆய்வு செய்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள், கொரோனா தொற்றைத் தடுப்பதற்கான தடுப்பூசிகளின் தேவை அதிகமாக இருப்பதைக் கருத்தில் கொண்டு, இந்த நிறுவனத்தில் கொரோனா தடுப்பூசி உற்பத்தியை உடனடியாகத் தொடங்குவதற்கு அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும், இதற்காகத் தமிழ்நாடு அரசின் சார்பில் தேவைப்படும் உதவிகள் வழங்கப்படும் எனவும் தெரிவித்தார்.

மேலும், மத்திய அரசின் நிறுவனமான HLL Biotech நிறுவனம் உற்பத்தியைத் தொடங்குவதற்கான உரிய நிதியை ஒதுக்கீடு செய்து, பயன்பாட்டிற்குக் கொண்டுவர மத்திய அரசு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

திருச்சி தேசிய தொழில் நுட்பக் கல்லூரி வளாகத்தில் கொரோனா நலவாழ்வு மையம் திறப்பு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 21.05.2021 அன்று திருச்சி மாவட்டத்தில், கி.ஆ.பெ. விசுவநாதம் அரசு மருத்துவக் கல்லூரியுடன் இணைந்த மகாத்மா காந்தி நினைவு அரசு மருத்துவமனையில் கூடுதலாக அமைக்கப்பட்டுள்ள 400 படுக்கை வசதிகளுடன் கூடிய கொரோனா சிகிச்சை மையம், கலையரங்கம் திருமண மண்டபத்தில் அமைக்கப்பட்டுள்ள 100 படுக்கை வசதிகளுடன் கூடிய கொரோனா சிறப்பு மருத்துவ முகாம் மற்றும் திருவெறும்பூர், திருச்சி தேசிய தொழில் நுட்பக் கல்லூரி வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள 320 படுக்கை வசதிகள் கொண்ட கொரோனா நலவாழ்வு மையம் ஆகியவற்றைத் திறந்து வைத்தார்கள்.

கொரோனா பெருந்தொற்று பரவாமல் கட்டுப்படுத்திடத் திருச்சி மாவட்டத்தில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. திருச்சி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ஆக்சிஜன் வசதியுடன் கூடிய 335 படுக்கைகளும், அரசு மருத்துவமனைகளில் ஆக்சிஜன் வசதியுடன் கூடிய 168 படுக்கைகளும், என மொத்தம் 503 படுக்கைகள் அரசு மருத்துவமனைகளில் அமைக்கப்பட்டுள்ளன. தனியார் மருத்துவமனைகளில் ஆக்ஸிஜன் வசதியுடன் கூடிய 1,297 படுக்கைகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும், கொரோனா சிகிச்சை மையத்தில் 1,661 படுக்கைகளும், அரசு ஆரம்பச் சுகாதார நிலையங்களில் 290 படுக்கைகளும் அமைக்கப்பட்டுள்ளன.

கொரோனா நோய்த்தொற்று பரவலைத் தடுத்திடவும், ஊரடங்கினை கண்காணித்திடவும், கொரோனாவால் பாதிக்கப்பட்டு வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டவர்களைக் கண்காணித்திடவும், கொரோனா சிகிச்சை மையங்களில் சிகிச்சை பெற்றுவரும் நோயாளிகளின் உடல் நலனைக் கண்காணித்திடவும், நகர்ப்புறம் மற்றும் கிராமப்புறங்களிலும், அனைத்து வட்டாரங்களிலும் கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டு, கண்காணிப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி பகுதியில் கொரோனா நோய்த்தொற்று பரவுதலை முன்னதாக

கண்டறியும் பொருட்டு கொரோனா பரவல் அதிகமுள்ள 34 வார்டுகளில் களப்பணியாளர்களாக 785 சத்துணவு பணியாளர்கள் மூலம் PULSE OXIMETER மற்றும் வெப்பமானி ஆகிய கருவிகளைக் கொண்டு ஆக்சிஜன் அளவு 95 சதவீதத்திற்கும் கீழ் உள்ளவர்கள் மற்றும் காய்ச்சல் உள்ளவர்களைக் கண்டறிந்து உடனடி சிகிச்சை அளிக்கும் பொருட்டு வீடுதோறும் ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

திருச்சி மாவட்ட நகர்ப்புற பகுதியில் பிசப்ஹீபர் கல்லூரி வளாகத்தில் 350 படுக்கைகளும், திருவரங்கம் யாத்ரி நிவாஸில் 530 படுக்கைகளும், சேதுராப்பட்டி அரசு பொறியியல் கல்லூரியில் 600 படுக்கைகளும், நேரு கலைக் கல்லூரியில் 150 படுக்கைகளும் கொண்ட கொரோனா சிகிச்சை மையங்கள் செயல்பட்டு வருகின்றன.

மேலும், பாரதிதாசன் தொலைதூர பல்கலைக்கழகம், காஜாமலை வளாகத்தில் 160 படுக்கைகள் வசதி கொண்ட அரசு சித்த மருத்துவக் குழுவினரால் கொரோனா சிகிச்சை மையம் அமைக்கப்பட்டு, முழுவதும் சித்த மருத்துவத்தின் மூலம் சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 21.05.2021 அன்று திருச்சி மாவட்டம், கி.ஆ.பெ. விசுவநாதம் அரசு மருத்துவக் கல்லூரியுடன் இணைந்த மகாத்மா காந்தி நினைவு அரசு மருத்துவமனையில் ஏற்கெனவே செயல்பட்டு வரும் 914 படுக்கை வசதியுடன், மேலும் கூடுதலாக 400 படுக்கை வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ள கொரோனா சிகிச்சை மையத்தைத் திறந்து வைத்து ஆய்வு செய்தார்.

மேலும், திருச்சிராப்பள்ளி, கலையரங்கம் திருமண மண்டபத்தில் அமைக்கப்பட்டுள்ள 100 படுக்கை வசதிகளுடன் கூடிய கொரோனா சிறப்பு மருத்துவ முகாமை திறந்து வைத்து, 18 முதல் 44 வயது வரை உள்ளவர்களுக்கான கொரோனா தடுப்பூசி முகாமில் முன்னுரிமை அடிப்படையில் மாற்றுத்திறனாளிகளுக்குத் தடுப்பூசி செலுத்தும் பணியையும் ஆய்வு செய்தார்.

அதன் தொடர்ச்சியாக, திருவெறும்பூர் வட்டாரத்தில், திருச்சி தேசிய தொழில் நுட்பக் கல்லூரி வளாகத்தில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள 320 படுக்கை வசதிகள் கொண்ட கொரோனா சிகிச்சை மையத்தைத் திறந்து வைத்தார்கள். இம்மையத்தில் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர்களை உடனடியாக அனுமதித்து உரியச் சிகிச்சை அளித்திட மாவட்ட நிர்வாகத்தினருக்கு அறிவுறுத்தினார். மேலும், என்.ஐ.டி வளாகத்தில் இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி துறையின் சார்பில் அளிக்கப்பட்டு வரும் கொரோனா சிகிச்சைக்கான சித்த மருந்துகளைப் பார்வையிட்டு அதன் பயன்களைக் கேட்டறிந்தார். அவர்கள் வழங்கிய கபசுரக் குடிநீர் சூரணத்துடன் துளசி, அதிமதுரம், பனங்கற்கண்டு சேர்த்துக் காய்ச்சிய மூலிகை தேநீரை அருந்தினார்.

மாற்றுத்திறனாளிகளுக்கான கோவிட் தடுப்பூசி சிறப்பு முகாம் தொடக்கம்

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் மாற்றுத்திறனாளிகளுக்கு கோவிட் தடுப்பூசி செலுத்துவதில் முன்னுரிமை வழங்கும் வகையில் கோவிட் தடுப்பூசி சிறப்பு முகாம்களை அமைக்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டார்கள்.

அதனடிப்படையில், சென்னை, தேனாம்பேட்டை மண்டலம், டி.டி.கே.சாலையில் உள்ள எத்திராஜ் திருமண மண்டபத்தில், பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் மாற்றுத்திறனாளிகளுக்கான கோவிட் தடுப்பூசி சிறப்பு முகாமினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 22.05.2021 அன்று தொடங்கி வைத்தார். இக்கோவிட் தடுப்பூசி சிறப்பு முகாமில் 26 மாற்றுத்திறனாளிகளுக்குத் தடுப்பூசி செலுத்தப்பட்டது.

கோவிட் தடுப்பூசி செலுத்தப்படும் பெருநகர சென்னை மாநகராட்சியின் அனைத்து மையங்களிலும் மாற்றுத்திறனாளிகளுக்கு முன்னுரிமை அளிக்கும் வகையில் சிறப்புக் கவனம் செலுத்தி, வரிசையில் காத்திருக்காமல், தகுந்த பாதுகாப்பு வழிமுறைகளுடன் அவர்களுக்கு விரைந்து தடுப்பூசி செலுத்தப்படும். மேலும், பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தகுதியுள்ள மாற்றுத்திறனாளிகளுக்குத் தடுப்பூசி செலுத்தச் சிறப்பு முகாம்கள் ஏற்பாடு செய்யப்படும்.

இத்தடுப்பூசி மையங்களில் மாற்றுத்திறனாளிகள் தடுப்பூசி செலுத்திக் கொள்ள 18004250111 என்ற உதவி எண் மற்றும் 97007 99993 என்ற காணொலி உதவி எண்களின் வாயிலாகப் பதிவு செய்யலாம். இந்த உதவி எண்கள் மூலம் பதிவு செய்யும் மாற்றுத்திறனாளிகளுக்குத் தடுப்பூசி செலுத்தும் முகாமின் நாள், நேரம் மற்றும் இடம் போன்ற விவரங்கள் தெரிவிக்கப்படும். பதிவு செய்த மாற்றுத்திறனாளிகள் வசிக்கும் இருப்பிடத்திற்கு அருகாமையில் தற்காலிக தடுப்பூசி முகாம்கள் ஏற்படுத்தப்படும்.

மேலும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்குச் செல்ல இயலாத மாற்றுத்திறனாளிகள் எனக் கண்டறியப்பட்ட நபர்களுக்கு, அவர்களின் வீடு அல்லது மிக அருகாமையில் இருக்கும் இடத்திற்குச் சென்று தடுப்பூசி செலுத்தச் சிறப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்தகைய மாற்றுத்திறனாளிகளும் மேற்குறிப்பிட்ட இரண்டு உதவி எண்களின் வாயிலாகத் தடுப்பூசி செலுத்திக்கொள்ளப் பதிவு செய்து கொள்ளலாம். மாற்றுத்திறனாளியின் வீட்டிற்கு ஒரு மருத்துவ அலுவலர் தலைமையில் ஒரு செவிலியர் கொண்ட மருத்துவக்குழு சென்று பதிவு விவரங்கள் குறித்து கள ஆய்வு மேற்கொள்வார்கள். அந்த ஆய்வின் அடிப்படையில் தற்காலிக மருத்துவ முகாம் அவர்களின் வீடுகளுக்கு மிகவும் அருகாமையில் ஏற்படுத்தப்பட்டு உரிய விதிமுறைகளின்படி தடுப்பூசி செலுத்தப்படும். ★

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 22.05.2021 அன்று சென்னை, டி.டி.கே.சாலையில் உள்ள எத்திராஜ் திருமண மண்டபத்தில், மாற்றுத்திறனாளிகளுக்கான கோவிட் தடுப்பூசி சிறப்பு முகாமினைத் தொடங்கி வைத்தார்கள்.

மகளிருக்கான இலவசப் பேருந்து பயணத் திட்டம் எங்கள் வாழ்க்கையைப் புரட்டிப் போட்ட திட்டம்

செவிலியர் பட்டப்படிப்பு படிக்கும் சங்கீதா தன் கல்லூரிக்குச் சென்று வர, பேருந்திற்காகத் தினமும் 100 ரூபாய் செலவழிக்க வேண்டும். கடந்த ஆண்டு, பேருந்து அட்டைக்காக விண்ணப்பம் செய்தும் அவளுக்கு அது மறுக்கப்பட்டது. சங்கீதா ஏழைக் குடும்பத்தைச் சார்ந்தவர். அவர்கள் குடும்பத்தில் பட்டப்படிப்பு படிக்கும் முதல் பெண். அப்பெண்ணின் படிப்பிற்குத் தடங்கல் ஏற்படக் கூடாது என்பதற்காக, அவளின் பெற்றோர் தாங்கள் ஈட்டிய சொற்பக் கூலியிலிருந்து அவளுக்கென்று தினமும் 100 ரூபாயைத் தனியே எடுத்து வைத்து விடுவார்கள். **மாண்புமிகு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்த மகளிருக்கான இலவசப் பேருந்து பயணத் திட்டம், இதற்கு ஒரு நல்ல மாற்றத்தைக் கொண்டு வந்தது.**

சங்கீதாவின் பெற்றோர்கள் கொத்தடிமைகளாக இருந்து, 2009இல் ஒரு செங்கல் சூளையிலிருந்து மீட்கப்பட்டனர். திண்டிவனம் அருகில் உள்ள வீரணமூர் கிராமத்தில் அக்குடும்பம் தன் புதுவாழ்வைத் தொடங்கியது. 25 இருளர் குடும்பங்கள் உள்ள அந்த தொகுப்பிலிருந்து, சங்கீதா 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் வெற்றியடைந்த முதல் பெண்ணாகவும், மேற்படிப்புக்காக முண்டியம்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரியில் செவிலியர் பட்டப்படிப்பில் சேர்ந்தவராகவும் இருந்தார்.

தன்னுடைய குடும்ப நிலையை விளக்கி பேருந்தில் கட்டணமின்றி பயணம் செய்ய அட்டை (Pass) வேண்டுமென்று, 2020ஆம் ஆண்டில் 19 வயதான சங்கீதா விண்ணப்பித்தார். “அதற்கு வகையில்லை” என்று அவளுடைய விண்ணப்பத்தை போக்குவரத்துத் துறை மறுத்துவிட்டது. இதை TNIE (புதிய இந்தியன் எக்ஸ்பிரஸ்) செய்தித்தாள் தன்னுடைய இதழில், மார்ச் 11,2020இல் வெளியிட்டது. ஆனால் அதிகாரிகளால் எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இத்திட்டத்தைப் பற்றி சங்கீதா கூறியதாவது, “இத்திட்டம் எனக்கு எவ்வளவு மகிழ்ச்சியைத் தருகிறது என்று என்னால் கூற இயலவில்லை. கடந்த ஆண்டு, ஒரு இலவச பேருந்து அட்டைக்காக நான் பட்ட துயரங்கள் சொல்ல முடியாதவை. பலதடவை அது எனக்கு மறுக்கப்பட்டது. இப்போது என்னைப்போல் ஒவ்வொரு பெண்ணும், யாருக்காகவும் காத்திருக்கத் தேவையில்லை. வறுமை எங்களை வாட்டிக்கொண்டிருக்கும்போது, **பேருந்திற்கு ஆகும் செலவையும் பெற்றோர்களிடம் கேட்டு துன்பத்திற்கு ஆளாக்காமல், சுதந்திரமாக நாங்கள் இப்பொழுது கல்லூரிக்குச் செல்லலாம்.** இப்போது நான் ஒரு குற்ற உணர்ச்சியற்ற முதல் தலைமுறை பட்டப்படிப்பு மாணவி. என்னுடைய பேருந்து செலவை, மிச்சப்படுத்தி குடும்பத்திற்குச் செலவிடலாம்.”

நாங்கள் ஈட்டிய வருமானத்தை, படிக்கும் என் மகளின்,
போக்குவரத்துச் செலவிற்கு கொடுத்துவிட்டு பட்டினி கிடந்த நாட்களும் உண்டு.

கிராமத்தில் கிடைக்கும் தினக்கூலி, விவசாய வேலைகள், நூறுநாள் வேலைத் திட்டத்தில் கிடைக்கும் வேலைகள் போன்ற பல வேலைகளைச் செய்து சங்கீதாவின் பெற்றோர் வாழ்க்கை நடத்துகின்றனர்.

சங்கீதாவின் தந்தை சின்னசாமி கூறியதாவது, "நாங்கள் ஈட்டிய வருமானத்தை என் மகளின் போக்குவரத்துக்குச் செலவிற்குக் கொடுத்துவிட்டு பட்டினி கிடந்த நாட்களும் உண்டு. ஆனால், நாங்கள் ஒருபோதும் சமரசம் செய்து கொண்டதில்லை, எங்கள் பசியை விட அவளின் படிப்பிற்குத்தான் முதலிடம் கொடுத்தோம்.

என்னுடைய மகள்களும் மனைவியும் உலகத்தை வெல்ல, அவர்கள் விருப்பப்படி எங்கு வேண்டுமானாலும் செல்ல இடமளிக்கும் ஒரு திட்டத்தைப் பற்றி கூற எனக்குச் சக்தியில்லை. என் குழந்தைகளின் படிப்பிற்கான மற்ற செலவினங்களுக்கு அந்த நூறு ரூபாயை இப்பொழுது செலவழிக்கலாம். எங்கள் வாழ்க்கையையே புரட்டிப் போடும் ஒரு திட்டத்தை முதல்வர் அவர்கள் நிறைவேற்றியதற்கு எங்களுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

நன்றி : ***நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்***

பத்திரிகைகள் மற்றும் ஊடகவியலாளர்களுக்குச் சிறப்பு ஊக்கத்தொகை ரூ.5 ஆயிரம், கொரோனா நோய்த் தொற்றினால் இறப்பு ஏற்படின், வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகை ரூ.5 இலட்சத்தை ரூ.10 இலட்சமாக உயர்த்தி வழங்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணை

கொரோனா நோய்த் தொற்று காலத்தில் பல்வேறு சிரமங்களுக்கிடையே ஊடகவியலாளர்கள் பயனுள்ள தகவல்களையும், செய்திகளையும் மக்களுக்குச் சரியாகக் கொண்டு சேர்ப்பதிலும், விழிப்புணர்வை ஏற்படுத்துவதிலும் முக்கிய பங்காற்றி வருகிறார்கள்.

மக்களுக்கும், அரசுக்கும் ஒரு இணைப்புப் பாலமாக இக்காலகட்டத்தில் சிறப்பாக இயங்கிவரும் இவர்களது பணியினை ஊக்குவிக்கும் வகையில், அனைத்து மாவட்டங்களிலும் உள்ள பதிவு செய்யப்பட்ட பத்திரிகைகள், தொலைக்காட்சிகள் மற்றும் காலமுறை இதழ்களில் பணிபுரியும் செய்தியாளர்கள், புகைப்படக்காரர்கள் மற்றும் ஒளிப்பதிவாளர்கள் (அரசு அங்கீகார அட்டை / மாவட்ட ஆட்சியர் வாயிலாக வழங்கப்பட்ட அடையாள அட்டை / இலவசப் பேருந்துப் பயண அட்டை போன்ற ஏதேனும் ஒரு வகையில் அரசால் அங்கீகரிக்கப்பட்டவர்கள்) ஆகியோருக்கு சிறப்பு ஊக்கத் தொகையினை உயர்த்தி வழங்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

கடந்த ஆட்சியின்போது, ஊடகவியலாளர்களுக்கு வழங்கப்பட்ட ஊக்கத் தொகை ரூ.3 ஆயிரம் ஆகும். இதனை தற்போது உயர்த்தி வழங்கக் கோரி பெறப்பட்ட கோரிக்கையினை கனிவோடு பரிசீலித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், ஊடகவியலாளர்களுக்கான ஊக்கத் தொகையினை ரூ.3 ஆயிரத்திலிருந்து, ரூ.5 ஆயிரமாக உயர்த்தி வழங்க உத்தரவிட்டுள்ளார்கள்.

அதேபோன்று, கடந்த ஆட்சியின்போது பத்திரிகை மற்றும் ஊடகத் துறையில் பணிபுரியும் அரசு அங்கீகரிக்கப்பட்ட செய்தியாளர்கள் கொரோனா நோய்த் தொற்று காரணமாக இறக்க நேரிட்டால், அவர்களது வாரிசுதாரர்களுக்கு ரூ.5 இலட்சம் இழப்பீட்டுத் தொகை வழங்க அரசாணை வெளியிடப்பட்டிருந்தது. இதனையும் உயர்த்தி வழங்கக் கோரி ஊடகவியலாளர்கள் சார்பாக அளிக்கப்பட்ட கோரிக்கையினைப் பரிவுடன் பரிசீலித்து, அதனை ரூ.10 இலட்சமாக உயர்த்தி வழங்கிட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

மேலும், பத்திரிகைத் துறை மற்றும் அனைத்து ஊடகத் துறை நண்பர்களும் இந்த நோய்த் தொற்றுக் காலத்தில் மிகவும் பாதுகாப்பான முறையில் தங்கள் பணியினை கவனமுடன் மேற்கொள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இத்தருணத்தில் கேட்டுக் கொண்டுள்ளார்கள்.

மாவட்ட ஆட்சியர்கள், தங்கள் மாவட்டத்தில் நோய்த்தொற்று சதவிகிதத்தைக் குறைப்பது ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு செயல்பட வேண்டும்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க. ஸ்டாலின்** அவர்கள்
காணொலிக் காட்சி மூலம், கொரோனா நோய்த் தொற்று தொடர்பாக
மாவட்ட ஆட்சித் தலைவர்களுடனான ஆலோசனைக் கூட்டத்தில் ஆற்றிய உரை – 23.05.2021

மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களே!

தலைமைச் செயலாளர் உள்ளிட்ட அரசு அலுவலர்களே!

மாவட்ட ஆட்சித் தலைவர்களே!

மாவட்டக் காவல்துறை அதிகாரிகளே!

மருத்துவம் மற்றும் முன்களப் பணியாளர்களே!

உங்கள் அனைவருக்கும் முதற்கண் என் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

புதிய அரசு மே 7ஆம் தேதி அமைந்தது. அதன்பிறகு உங்கள் அனைவரையும் ஒட்டுமொத்தமாகச் சந்திக்கும் முதல் கூட்டம் இது என்பதால் மாவட்ட ஆட்சித் தலைவர்கள், மாவட்டக் காவல்துறை அதிகாரிகள்

அனைவருக்கும் எனது நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகம் அனைத்துத் துறைகளிலும் தலைசிறந்த மாநிலமாக மாற வேண்டும் என்பதே எமது ஆட்சியின் முழு முதல் இலக்கு ஆகும். அதற்காகத் தமிழக அரசு தேர்ந்தெடுத்துச் செயல்படுத்தி வரும் அனைத்துத் திட்டங்களையும் மக்களிடம் கொண்டு செல்லும் மகத்தான பணி மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அப்பணியை நீங்களும் தொய்வில்லாமலும், புதிய உற்சாகத்துடனும் உத்வேகத்துடனும் நிறைவேற்றி வர வேண்டும் என்று உங்கள் அனைவரையும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

ஆட்சி அமைந்ததும் மாவட்ட ஆட்சியர்கள் – மாவட்ட காவல்துறை அதிகாரிகள் ஆகிய அனைவரையும் சென்னைக்கு நேரில் அழைத்துக் கலந்துரையாடல் கூட்டத்தை நடத்த வேண்டும் என்று நான் நினைத்திருந்தேன். ஆனால் கொரோனா என்ற பெருந்தொற்று காலமாக இருப்பதால் அக்கூட்டத்தைத் தலைமைச் செயலகத்துக்கு உங்கள் அனைவரையும் அழைத்து நடத்த முடியாத சூழல் ஏற்பட்டது.

ஆனாலும் விரைவில் அத்தகைய ஒரு கூட்டத்தை நடத்துவோம் – வெகு சீக்கிரமாக நடத்துவோம் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

இந்தக் கூட்டம் என்பது நாளைய தினம் முதல் தமிழகத்தில் அறிவிக்கப்பட்டுள்ள முழு ஊரடங்கை முன்னிட்டு நடக்கும் கூட்டம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தப் பெருந்தொற்று நோய்க் காலத்தில் உங்கள் மாவட்டங்களில் மருத்துவத் துறை, உள்ளாட்சித் துறை மற்றும் அனைத்து துறைகளுடனும் ஒருங்கிணைந்து நோய்த்தொற்று கட்டுப்பாடு மற்றும் நிவாரண நடவடிக்கைகளில் சிறப்பாகச் செயலாற்றி வரும் உங்கள் அனைவருக்கும் என் பாராட்டுகளை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

கொரோனா நிவாரணத் தொகை அறிவிக்கப்பட்டுள்ளது. அது முழுமையாக அனைத்து மக்களுக்கும் சென்று சேர்ந்துவிட்டதா என்பதை மாவட்ட ஆட்சியர்கள் முதலில் உறுதி செய்தாக வேண்டும்.

- நாளை முதல் நமது மாநிலத்தில் முழு பொது ஊரடங்கு நடைமுறைக்கு வரவிருக்கின்றது என்பதை நீங்கள் அறிவீர்கள். இந்தச் சூழ்நிலையில் மக்களுக்குத் தேவையான காய்கறிகள், பழவகைகள், பால் மற்றும் குடிநீர் போன்ற தேவைகளை வழங்க நீங்கள் சிறப்பான நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- மருத்துவமனையில் அங்கு உள்நோயாளிகளாக இருப்பவர்களுக்கு தேவையான தரமான உணவுப் பொருட்கள், பால், குடிநீர் இருப்பதை நீங்கள் உறுதி செய்து கொள்ளுங்கள்.

உலகம் எத்தனையோ பெருந்தொற்றுகளை – பேரழிவுகளைப் பார்த்துள்ளது. அதிலிருந்து மீண்டு வந்துள்ளது. ஒரு சமூகம் பாதிக்கப்படும் போது, ஏதோ ஒரு தனிமனிதனின் முயற்சியால் அதிலிருந்து மீள்வதற்கான ஒரு ஒளி பிறக்கும். அத்தகைய ஒளியாக உங்களை நான் பார்க்கிறேன்.

- அனைத்து இடங்களிலும் பால் மற்றும் குடிநீர் விநியோகம் சீராக இருப்பதைப் பார்த்துக்கொள்ள வேண்டும்.
- வீதிகளில் வாகனம் / தள்ளுவண்டிகளில் காய்கறிகள், பழங்கள் விற்கப்படுவதற்கான ஏற்பாடுகளை வேளாண்துறை மற்றும் உள்ளாட்சித்துறை அலுவலர்களுடன் கண்காணித்து வரவேண்டும்.
- மேலும் முக்கியமாக, இந்த ஊரடங்கு காலத்தில் நீங்கள் மருத்துவத்துறை மற்றும் உள்ளாட்சித் துறை மூலமாகச் சிறப்பாக வீடுவீடாக சென்று நோய் அறிகுறி உள்ளவர்களைக் கண்டறிவது நோய்த்தொற்றைக் கண்டறியும் முகாம்கள் நடத்துவது, பரிசோதனைகளை அதிகரிப்பது போன்ற பணிகளைத் தீவிரப்படுத்த வேண்டும்.
- நோயாளர்கள், நோய்த்தொற்று அறிகுறி உள்ளவர்கள் அரசு மருத்துவமனை அல்லது தனியார் மருத்துவமனை ஆகியவற்றை அடைவதில் போக்குவரத்து சிரமம் இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.
- தடுப்பூசி போடும் பணிகளை எவ்வித தொய்வுமின்றி மேற்கொண்டு செல்லும் நடவடிக்கைகளை நீங்கள் தொடர வேண்டும்.
- மக்களிடையே நோய்த்தொற்று பரவாமல் இருப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைக் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் பணியை நீங்கள் அயராது தொடர வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.
- ஊரடங்கு விதிமுறைகள் முழுமையாக கடைப்பிடிக்கப்படுவதை உறுதி செய்யவேண்டும். அதே சமயம் அனுமதிக்கப்பட்ட பணிகள் உதாரணமாக விவசாய இடுபொருட்கள், வேளாண்

விளை பொருட்கள் ஆகியவற்றின் போக்குவரத்து எவ்வித தடையும் இல்லாமல் இயங்குவதையும் உறுதி செய்ய வேண்டும்.

- உங்கள் மாவட்டத்தின் மக்களவை உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோருடன் ஆலோசனைக் கூட்டங்கள் நடத்தி அவர்களின் கருத்துகளைப் பெற்றும் கட்டுப்பாடு மற்றும் நிவாரணப் பணிகளை ஒருங்கிணைத்துச் செயல்படலாம்.
- அனைத்து மருத்துவமனைகளிலும் போதுமான அளவு ஆக்சிஜன் மற்றும் உயிர் காக்கும் மருந்துகளின் இருப்பினைத் தொடர்ந்து கண்காணித்து அவை முறையாகப் பயன்படுத்தப்படுகிறதா என்பதையும் கண்காணித்து உங்கள் மாவட்டத்தில் நோய்த்தொற்று சதவிகிதத்தைக் குறைப்பது ஒன்றையே குறிக்கோளாக் கொண்டு நீங்கள் செயல்பட வேண்டும்.
- மேலும் இக்காலகட்டத்தில், அரசுடன் இணைந்து செயலாற்ற பல்வேறு தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும் தனியார் நிறுவனங்களும் விருப்பம் தெரிவித்து வருகின்றன. மாவட்ட அளவில் அவர்கள் பணியை ஒருங்கிணைத்து மக்களுக்கு அவர்களின் சேவையைக் கொண்டு சேர்க்க நீங்கள் தனிக் கவனம் செலுத்த வேண்டும். அதற்கென மாவட்ட அளவில் ஒரு தனி அலுவலரையும் நீங்கள் நியமிக்கலாம்.
- தமிழ்நாட்டு மக்களின் உயிர் காக்கும் பொறுப்பு நம் அனைவருக்கும் உள்ளது என்பதைக் கவனத்தில் கொண்டு நீங்கள் செயலாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

> ***“நான் எனது காலத்தில் எடுத்த முயற்சிகளால் கொரோனா முற்றிலுமாக ஒழிக்கப்பட்டது, கொரோனாவே இல்லை என்ற சூழலை நான் உருவாக்கினேன்” என்று தலைநிமிர்ந்து நீங்கள் சொல்லக் கூடிய அளவுக்கு பணியாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.***

நோய்த்தொற்று தடுப்பு பணிகளை மாவட்ட நிருவாகம், மக்கள் பிரதிநிதிகள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் பொதுமக்களுடன் இணைந்து மேற்கொள்ளும் போது அதில் நாம் வெற்றி பெறுவோம் என்பதில் எனக்கு மிகுந்த நம்பிக்கை உள்ளது.

இது சமூகத்தின் மிகமிக முக்கியச் செயல்பாடு ஆகும். கொரோனா பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு – அது மேலும் பரவாமல் தடுப்பதற்கு அதன் சங்கிலி உடைக்கப்பட வேண்டும். ஒருவரிடம் இருந்து மற்றொருவருக்குப் பரவும் அந்த சங்கிலியை உடைக்காமல் கொரோனாவைக் கட்டுப்படுத்த முடியாது. அதற்காகத் தான் இந்த முழு ஊரடங்கு போடப்படுகிறது. பாதுகாப்பான சமூகத்தை உருவாக்கும் நோக்கத்துடன் தான் இந்த ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்படுகிறது என்ற நோக்கத்தைப் பொதுமக்களிடம் மாவட்ட ஆட்சியர்கள் கொண்டு செல்ல வேண்டும்.

விலைமதிப்பில்லாத உயிர்களை நாம் இழந்திருக்கிறோம்!

ஒரு பக்கம் மருத்துவப் பிரச்சினைகள் – இன்னொரு பக்கம் நிதி நெருக்கடிகள் – இத்தகைய இரண்டு மாபெரும் இன்னல்களை ஒரே நேரத்தில் தமிழகம் எதிர்கொண்டு வருகிறது. எனவே, எவ்வளவு விரைவாக கொரோனா என்ற நோய்த் தொற்றுக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியுமோ அவ்வளவு சீக்கிரம் முற்றுப்புள்ளி வைத்தாக வேண்டும்.

மாவட்ட ஆட்சியர்களாகிய நீங்கள் உங்களது இத்தனையாண்டு கால அனுபவம், அறிவு, சக்தி, திறமை அனைத்தையும் முழுமையாகப் பயன்படுத்தி கொரோனா தடுப்புப் பணிகளை ஆற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

உலகம் எத்தனையோ பெருந்தொற்றுகளை – பேரழிவுகளைப் பார்த்துள்ளது. அதிலிருந்து மீண்டு வந்துள்ளது. ஒரு சமூகம் பாதிக்கப்படும் போது, ஏதோ ஒரு தனிமனிதனின் முயற்சியால் அதிலிருந்து மீள்வதற்கான ஒரு ஒளி பிறக்கும். அத்தகைய ஒளியாக உங்களை நான் பார்க்கிறேன்.

“நான் எனது காலத்தில் எடுத்த முயற்சிகளால் கொரோனா முற்றிலுமாக ஒழிக்கப்பட்டது, கொரோனாவே இல்லை என்ற சூழலை நான் உருவாக்கினேன்” என்று தலைநிமிர்ந்து நீங்கள் சொல்லக் கூடிய அளவுக்கு பணியாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

உங்களால் முடியும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

உங்களால் மட்டுமே முடியும் என்ற மிகுந்த நம்பிக்கையும் எனக்கு இருக்கிறது என்று தெரிவித்து, விடைபெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

சிப்காட் நிறுவனம் மூலம் அயல்நாடுகளிலிருந்து 1,400 ஆக்சிஜன் சிலிண்டர்கள் இறக்குமதி

சிப்காட் நிறுவனம் மூலம் அயல்நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ள 1,400 ஆக்சிஜன் சிலிண்டர்கள் (Imported Oxygen Cylinders) மற்றும் முறைப்படுத்தும் கருவிகளை (Regulators) 26.05.2021 அன்று 18 மாவட்டங்களுக்கு கொரோனா சிகிச்சைப் பயன்பாட்டிற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் வாகனங்கள் மூலம் அனுப்பி வைத்தார்.

கோவிட்–19 வைரஸ் தொற்றுப் பரவலின் இரண்டாவது அலை மாநிலத்தில் ஆக்சிஜன் மற்றும் அதன் தொடர்புடைய சாதனங்களுக்கு (Oxygen and related equipments) மிகப்பெரும் பற்றாக்குறையைத் தோற்றுவித்துள்ளது. இவற்றின் அவசரத் தன்மை மற்றும் தவிர்க்கப்பட இயலாத தேவையைக் கருதி, இந்த நெருக்கடியான பெருந்தொற்றுப் பரவல் சூழ்நிலையைச் சமாளித்திட, சுகாதாரத் துறைக்கும், உள்ளூர் அமைப்புகளுக்கும் உதவிட, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு மு.க. ஸ்டாலின் அவர்களின் ஆணைப்படி, தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தால் (சிப்காட்) போதிய அளவிற்கான ஆக்சிஜன் சாதனங்களை (Oxygen equipments) கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்கவும், கோவிட் பெருந்தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்கிலும், சிப்காட் நிறுவனம், சிங்கப்பூர், மத்தியக் கிழக்கு நாடுகள் மற்றும் துபாயிலிருந்து 1,915 ஆக்சிஜன் உருளைகள் (oxygen cylinders), 2,380 ஆக்சிஜன் முறைப்படுத்தும் கருவிகளையும் (Oxygen Regulators), 3,250 ஓட்ட அளவு உருளைகளையும் (medical oxygen flow meters), 5,000 ஆக்சிஜன் செறிவூட்டிகளையும் (Oxygen concentrators), 800 ஆக்சிஜன் நிரப்பப்பட்ட உருளைகளையும் (filled cylinders), என மொத்தம் ரூ.40.71 கோடி அளவிற்கு இறக்குமதி செய்ய ஆணைகள் (Orders) அளித்துள்ளது.

இதுவரை, 515 ஆக்சிஜன் உருளைகளும் (oxygen cylinders), 1,780 மருத்துவ ஆக்சிஜன் ஒழுங்குபடுத்தும் கருவிகளும் (Oxygen Regulators), 250 மருத்துவ ஆக்சிஜன்



ஓட்ட அளவு கருவிகளும் (medical oxygen flow meters), இறக்குமதி செய்யப்பட்டுள்ளன. மேலும், மீதமுள்ள கருவிகளைக் கூடிய விரைவில் வரவழைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

உள்ளூர் வழங்குநர்களிடமிருந்து (local suppliers) ரூ.4.33 கோடி மதிப்பிலான, ஈரப்பதமூட்டியுடன் கூடிய ஓட்டக்கருவிகள் (flow meter with humidifiers), முறைப்படுத்தும் கருவிகள், செப்பு விசைக் குழாய்கள் (copper pipes), வெளியேற்றும் குழாய்கள் (outlets), பலவாயில் குழாய்கள் (manifolds) முதலியனவற்றை, சிப்காட் நிறுவனம் கண்டறிந்து கொள்முதல் செய்து பொதுப்பணித் துறை மருத்துவப் பணிகளுக்கு வழங்கியுள்ளது. அதன்மூலம், சென்னையிலுள்ள அரசு மருத்துவமனைகளில், இதுவரை உயிர்வலி இணைக்கப்படாத 1,000 படுக்கைகள் ஆக்சிஜன் இணைப்புடன் கூடிய படுக்கைகளாக மாற்றப்பட்டுள்ளன.

மேலும், சிப்காட் நிறுவனம், தனது தொழில் பூங்காக்களின் அருகில் அமைந்திருக்கும் தொழிற்பிரிவுகளிலிருந்து, 2,000 காலி ஆக்சிஜன் உருளைகளைத் தருவித்து, அவற்றில் தேவைக்கேற்ப, ஆக்சிஜனை நிரப்பி, கும்மிடிப்பூண்டி மற்றும் தூத்துக்குடி திட்ட அலுவலகங்கள் வாயிலாக, சென்னை மாவட்டத்திற்கு 1010, சிவகங்கை மாவட்டத்திற்கு 130, விழுப்புரம் மாவட்டத்திற்கு 100, திருப்பத்தூர் மாவட்டத்திற்கு 20, வேலூர் மாவட்டத்திற்கு 100, தூத்துக்குடி மாவட்டத்திற்கு 250, திருவள்ளூர் மாவட்டத்திற்கு 130, கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு 100, தஞ்சாவூர் மாவட்டத்திற்கு 100, செங்கல்பட்டு மாவட்டத்திற்கு 60, என மருத்துவமனைகளுக்கு கொரோனா சிகிச்சை பயன்பாட்டிற்காக விநியோகிக்கப்பட்டுள்ளது.

இதுவரை, இறக்குமதி செய்ய வழங்கப்பட்ட ஆணைகளில், 1,400 ஆக்சிஜன் உருளைகள் சிங்கப்பூரிலிருந்து, விசாகப்பட்டினத்திற்குக் கொண்டு வரப்பட்டு, அங்கிருந்து சாலை மார்க்கமாகச் சென்னைக்கு வரவழைக்கப்பட்டுள்ளன.

சிங்கப்பூரிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ள, 1400 ஆக்ஸிஜன் உருளைகள் மற்றும் முறைப்படுத்தும் கருவிகளை (Oxygen cylinders and regulators) கரூர் மாவட்டத்திற்கு 75, தருமபுரி மாவட்டத்திற்கு 75, நீலகிரி மாவட்டத்திற்கு 75, சிவகங்கை மாவட்டத்திற்கு 100, நாமக்கல் மாவட்டத்திற்கு 75, நாகப்பட்டினம் மாவட்டத்திற்கு 75, திருவாரூர் மாவட்டத்திற்கு 75, தேனி மாவட்டத்திற்கு 75, திண்டுக்கல் மாவட்டத்திற்கு 75, கன்னியாகுமரி மாவட்டத்திற்கு 75, இராமநாதபுரம் மாவட்டத்திற்கு 75, விருதுநகர் மாவட்டத்திற்கு 75, திருப்பத்தூர் மாவட்டத்திற்கு 75, கள்ளக்குறிச்சி மாவட்டத்திற்கு 75, திருவண்ணாமலை மாவட்டத்திற்கு 100, கடலூர் மாவட்டத்திற்கு 100, விழுப்புரம் மாவட்டத்திற்கு 75, இராணிப்பேட்டை மாவட்டத்திற்கு 50, என மொத்தம் 1,400 ஆக்சிஜன் உருளைகள் மற்றும் முறைப்படுத்தும் கருவிகளை கொரோனா சிகிச்சை பயன்பாட்டிற்காக வாகனங்கள் மூலம் அனுப்பி வைக்கும் நிகழ்வினை, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் அவர்கள் 26.05.2021 அன்று தலைமைச் செயலகத்தில் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.

செங்கல்பட்டில் உள்ள தடுப்பூசி உற்பத்தி மையத்தை உடனடியாக பயன்பாட்டிற்குக் கொண்டு வரவேண்டும்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
மாண்புமிகு ஒன்றிய சுகாதாரத் துறை அமைச்சர்
திரு. **ஹர்ஷ் வர்தன்** அவர்களுக்கு எழுதிய
கடிதத்தின் தமிழாக்கம் – 02.06.2021

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் முயற்சியால், தமிழகத்தில் கோவிட் தடுப்பூசி பயன்பாடு பெருமளவு உயர்ந்துள்ள நிலையில், ஒன்றிய அரசிடமிருந்து போதிய அளவில் தடுப்பூசிகள் வரப்பெறாததால், நிலவும் தட்டுப்பாட்டுச் சூழலைக் கருத்தில் கொண்டு, தமிழகத்திற்கு போதிய தடுப்பூசிகள் வழங்கவும், செங்கல்பட்டில் உள்ள தடுப்பூசி உற்பத்தி மையத்தை உடனடியாக பயன்பாட்டிற்குக் கொண்டு வருமாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

மருத்துவச் சிகிச்சை தேவைப்படும் அனைவருக்கும் உடனடியாக போதிய படுக்கை வசதிகள் கிடைப்பதை மாவட்ட ஆட்சியர்கள் உறுதி செய்ய வேண்டும்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க. ஸ்டாலின்** அவர்கள் 27.05.2021 அன்று தலைமைச் செயலகத்தில், கோயம்புத்தூர், திருப்பூர், மதுரை, திருச்சி, சேலம் மற்றும் ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் காணொலிக் காட்சி வாயிலாக கொரோனா தடுப்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகள் குறித்த ஆலோசனைக் கூட்டத்தில் ஆற்றிய உரை.

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே!

மதிப்பிற்குரிய தலைமைச் செயலாளர் அவர்களே!

துறைச் செயலாளர்களே!

மாவட்ட ஆட்சித் தலைவர்களே!

அரசு அலுவலர்களே!

உங்கள் அனைவருக்கும் முதற்கண் எனது வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த இரண்டு வாரங்களில் கொரோனா பரவலைக் கட்டுப்படுத்திட இந்த அரசு எடுத்துள்ள போர்க்கால நடவடிக்கைகள் காரணமாகவும், முழு ஊரடங்கு அமல்படுத்தப்பட்டுள்ள காரணத்தாலும், மாநில அளவிலும், சென்னை மாநகரம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள மாவட்டங்களிலும், கொரோனா தொற்றின் தாக்கம் ஓரளவு கட்டுப்படுத்தப்பட்டிருக்கிறது.

இருப்பினும், மாவட்ட வாரியாக இத்தொற்றின் தாக்கத்தை ஆராய்ந்து பார்க்கும்போது, கோவை, திருப்பூர், மதுரை, திருச்சி, சேலம் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் இத்தொற்றின் தாக்கம் போதிய அளவு கட்டுப்படுத்தப்படாத சூழ்நிலையே காணப்படுகிறது. எனவே, இந்த மாவட்டங்களில் தொற்றினைக் கட்டுப்படுத்தவும், இறப்புகளைக் குறைக்கவும் தேவையான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்வது குறித்து உங்களது கருத்துகளைக் கேட்டறியவும், ஆலோசனை செய்திடவும் இந்த ஆய்வுக் கூட்டத்தை நான் கூட்டியுள்ளேன்.

ஆய்வு செய்யப்படும் ஆறு மாவட்டங்களைப் பொறுத்தவரையில், அரசுத் துறையிலும், தனியார்த் துறையிலும் நல்ல மருத்துவக் கட்டமைப்பைக் கொண்டுள்ள மாவட்டங்களாகும். இந்தக் கட்டமைப்பை முழுமையாகப் பயன்படுத்தி, மருத்துவச் சிகிச்சை தேவைப்படும் அனைவருக்கும் உடனடியாக போதிய படுக்கை வசதிகள் கிடைப்பதை மாவட்ட ஆட்சியர்கள் உறுதிப்படுத்திட வேண்டும்.

நோய்த் தொற்றைக் கண்டறிவதற்கான ஆர்.டி.பி.சி.ஆர். பரிசோதனைகளின் எண்ணிக்கை இந்த மாவட்டங்களில் நன்கு உயர்த்தப்பட்டுள்ள போதிலும், நோய்ப் பரவல் அதிகம் உள்ள பகுதிகளைக் கண்காணித்து, அப்பகுதிகளில் போதிய பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு, நோய்த் தொற்று உள்ள அனைவரும் கண்டறியப்பட்டு, தனிமைப்படுத்தப்பட வேண்டும்.

தடுப்பூசி போடும் பணியைப் பொறுத்தவரை, கோவை மற்றும் சேலம் மாவட்டங்களில் அதிக அளவில் தடுப்பூசி போடப்பட்டுள்ளன. மற்ற நான்கு மாவட்டங்களிலும், 18 வயதிலிருந்து 44 வயது வரையில் உள்ளவர்களுக்குத் தடுப்பூசிகளை அதிக அளவில் உடனடியாக அனைவருக்கும் கிடைத்திடச் செய்ய வேண்டும்.

இரண்டாம் அலையின் இந்தக் கட்டத்தில் நோய்ப் பரவல் கிராமப் பகுதிகளிலும் அதிகமாகக் காணப்படுவதைக் கருத்தில் கொண்டு, நோய்க் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலிருந்து பிற பகுதிகளுக்கு நோய் பரவாமல் தடுத்திட வேண்டும்.

இதுகுறித்து மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் பற்றியும், அரசு அளவில் தேவைப்படும் உதவிகள் பற்றியும் கருத்துகளைத் தெரிவிக்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

கொரோனாவின் இரண்டாவது அலையின் தாக்கத்தை நமது மாநிலம் கட்டுப்படுத்துவதற்கு, இந்த ஆறு மாவட்டங்களில் நாம் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் வெற்றி அடைவது அவசியம் என்பதை மனதில் கொண்டு, அடுத்த ஓரிரு வாரங்களுக்கு அனைத்து முயற்சிகளையும் முனைப்புடன் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மேற்கொள்ள வேண்டும் எனவும் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

எட்டாவது அட்டவணையில் இடம்பெற்றுள்ள தமிழ் உள்ளிட்ட அனைத்து மொழிகளும் இந்திய ஒன்றிய அரசின் ஆட்சி, அலுவல் மொழியாகிட இந்த அரசு உறுதியுடன் பாடுபடும்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களின்
அறிக்கை – 06.06.2021

தமிழ்க் கொடியைக் கையில் ஏந்தி 14 வயதிலேயே தாய்மொழி காக்கும் போராட்டத்தில் ஈடுபட்ட முத்தமிழறிஞர் கலைஞரின் மொழி, இனப் போராட்ட வரலாற்றின் இன்றியமையாத சாதனைகளில் ஒன்று, நம் தமிழ் மொழிக்கு இந்திய ஒன்றிய அரசின், செம்மொழித் தகுதி கிடைக்கச் செய்ததாகும்.

பரிதிமாற்கலைஞரில் தொடங்கிப் பல தமிழறிஞர்களும் 100 ஆண்டுகாலமாக வலியுறுத்திய செம்மொழித் தகுதி, முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் பெருமுயற்சியால் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசிடம் வலியுறுத்தப்பட்டது. கூட்டணியின் தலைவராக இருந்த சோனியா காந்தி அம்மையார் அவர்களும், பிரதமர் பொறுப்பு வகித்த மாண்புக்குரிய மன்மோகன் சிங் அவர்களும் தலைவர் கலைஞர் அவர்களின் கோரிக்கையை ஏற்றனர். தமிழுக்குச் செம்மொழித் தகுதி வழங்கப்படும் என்ற அறிவிப்பு 06.06.2004 அன்று வெளியானது. அதற்கான அரசாணை 12.10.2004 அன்று வெளியிடப்பட்டது.

உலகின் மூத்த மொழியும், திராவிட மொழிக் குடும்பத்தின் தாயாக விளங்கும் மொழியும், இலக்கிய, இலக்கண வளங்கள் கொண்ட சிறப்பான மொழியும், பழமைக்குப் பழமையாய், புதுமைக்குப் புதுமையாய் தன்னைத் தகவமைத்துக் கொண்டு, கல்வெட்டுக் காலம் முதல் கணினி காலம் வரை சிறப்புற்று விளங்கும் மொழியான அன்னைத் தமிழ்மொழிக்கு முத்தமிழறிஞர் சூட்டிய அணிகலனே, செம்மொழித் தகுதியாகும்.

அந்தத் தகுதிக்கு மேலும் சிறப்பு சேர்க்கும் வகையில், எத்திசையும் தமிழ் மணக்க, இந்த அரசு தொடர்ந்து உழைத்திடும். நமது அரசியல் சட்டத்தின் எட்டாவது அட்டவணையில் இடம்பெற்றுள்ள தமிழ் உள்ளிட்ட அனைத்து மொழிகளும் இந்திய ஒன்றிய அரசின் ஆட்சி, அலுவல் மொழியாகிட உறுதியுடன் பாடுபடும்.

இந்தியத் தொழில் கூட்டமைப்பால் (CII) இறக்குமதி செய்யப்பட்ட 750 ஆக்சிஜன் உருளைகள் 8 மாவட்டங்களுக்கு வழங்கப்பட்டது

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க. ஸ்டாலின்** அவர்கள் 28.05.2021 அன்று தலைமைச் செயலகத்திலிருந்து கொரோனா சிகிச்சை பயன்பாட்டிற்கு 750 ஆக்சிஜன் உருளைகளை 8 மாவட்டங்களுக்கு வாகனங்கள் மூலம் கொடியசைத்து அனுப்பி வைத்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்களின் ஆணைப்படி, கொரோனா தொற்றுப் பரவலின் இரண்டாவது அலையால், தற்போது நிலவி வரும் ஆக்சிஜன் மற்றும் அதன் தொடர்புடைய சாதனங்களின் பற்றாக்குறையைச் சமாளிக்கும் விதமாகத் தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட்) போதிய அளவிற்கான ஆக்சிஜன் சாதனங்களை (Oxygen equipments) கொள்முதல் செய்ய பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கு இணங்க சிப்காட் நிறுவனம், சிங்கப்பூர், மத்தியக் கிழக்கு நாடுகள் மற்றும் துபாயிலிருந்து 1,915 ஆக்சிஜன் உருளைகள் (Oxygen Cylinders), 2,380 ஆக்சிஜன் முறைப்படுத்தும் கருவிகளையும் (Oxygen Regulators), 3,250 ஒட்ட அளவு உருளைகளையும் (Medical Oxygen Flow Meters), 5,000 ஆக்சிஜன் செறிவூட்டிகளையும் (Oxygen Concentrators), 800 ஆக்சிஜன் நிரப்பப்பட்ட உருளைகளையும் (Filled Cylinders) என மொத்தம் 40.71 கோடி ரூபாய் அளவிற்கு இறக்குமதி செய்து வருகிறது. மேலும் 4.33 கோடி ரூபாயில் பல்வேறு ஆக்சிஜன் தொடர்பான சாதனங்களைக் கண்டறிந்து கொள்முதல் செய்து மருத்துவப் பணிகளுக்கு வழங்கியதன் மூலம் சென்னையிலுள்ள அரசு மருத்துவமனைகளில், இதுவரை உயிர்வளி இணைக்கப்படாத 1,000 படுக்கைகள் ஆக்சிஜன் இணைப்புடன் கூடிய படுக்கைகளாக மாற்றப்பட்டுள்ளன.

மேலும், சிப்காட் நிறுவனம், தனது தொழில் பூங்காக்களின் அருகில் அமைந்திருக்கும் தொழிற்பிரிவுகளிலிருந்து, 2,000 ஆக்சிஜன் உருளைகளைத் தருவித்ததுடன் சிப்காட் மூலமாகச் சிங்கப்பூரிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட 1,400 ஆக்சிஜன் உருளைகள் மற்றும் முறைப்படுத்தும் கருவிகளை (Oxygen Cylinders and Regulators), சென்னை மாவட்டத்திற்கு 1,010, தூத்துக்குடி மாவட்டத்திற்கு 250, சிவகங்கை மாவட்டத்திற்கு 230, விழுப்புரம் மாவட்டத்திற்கு 175, திருவள்ளூர் மாவட்டத்திற்கு 130, வேலூர் மாவட்டத்திற்கு 100, கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு 100, தஞ்சாவூர் மாவட்டத்திற்கு 100, திருவண்ணாமலை மாவட்டத்திற்கு 100, கடலூர் மாவட்டத்திற்கு 100, திருப்பத்தூர்

மாவட்டத்திற்கு 95, கரூர் மாவட்டத்திற்கு 75, தருமபுரி மாவட்டத்திற்கு 75, நீலகிரி மாவட்டத்திற்கு 75, நாமக்கல் மாவட்டத்திற்கு 75, நாகப்பட்டினம் மாவட்டத்திற்கு 75, திருவாரூர் மாவட்டத்திற்கு 75, தேனி மாவட்டத்திற்கு 75, திண்டுக்கல் மாவட்டத்திற்கு 75, கன்னியாகுமரி மாவட்டத்திற்கு 75, இராமநாதபுரம் மாவட்டத்திற்கு 75, விருதுநகர் மாவட்டத்திற்கு 75, கள்ளக்குறிச்சி மாவட்டத்திற்கு 75, செங்கல்பட்டு மாவட்டத்திற்கு 60 மற்றும் ராணிப்பேட்டை மாவட்டத்திற்கு 50 என மொத்தம் 3,400 ஆக்சிஜன் உருளைகள் மற்றும் முறைப்படுத்தும் கருவிகளை கொரோனா சிகிச்சைப் பயன்பாட்டிற்காக ஏற்கெனவே விநியோகிக்கப்பட்டுள்ளது.

இந்த நெருக்கடியான பெருந்தொற்று பரவல் சூழ்நிலையைச் சமாளித்திட இந்தியத் தொழில் கூட்டமைப்பு (CII) தமிழ்நாடு அரசுடன் இணைந்து செயல்படும் விதமாகச் சிங்கப்பூரிலிருந்து மூன்று கோடி ரூபாய் மதிப்பீட்டில் மொத்தம் 1,000 ஆக்சிஜன் உருளைகளை இறக்குமதி செய்ய ஆணை வழங்கியதில், 750 ஆக்சிஜன் உருளைகள் சிங்கப்பூரிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள ஆக்சிஜன் உருளைகள் ஓரிரு தினங்களில் இறக்குமதி செய்யப்படவுள்ளது.

இந்தியத் தொழில் கூட்டமைப்பால் முதற்கட்டமாக இறக்குமதி செய்யப்பட்ட 750 ஆக்சிஜன் உருளைகளைச் சேலம் மாவட்டத்திற்கு 125, கோயம்புத்தூர் மாவட்டத்திற்கு 100, ஈரோடு மாவட்டத்திற்கு 100, திருவள்ளூர் மாவட்டத்திற்கு 100, காஞ்சிபுரம் மாவட்டத்திற்கு 100, வேலூர் மாவட்டத்திற்கு 75, கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு 75, மற்றும் திருப்பூர் மாவட்டத்திற்கு 75, என மொத்தம் 8 மாவட்டங்களுக்கு கொரோனா சிகிச்சை பயன்பாட்டிற்காக வாகனங்கள் மூலம் அனுப்பி வைக்கும் நிகழ்வினை, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 28.05.2021 அன்று தலைமைச் செயலகத்தில் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார்.

கொரோனா நிதி வழங்கும் சிறார்களுக்குத் திருக்குறள் நூல் அனுப்பி வைக்கப்படும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவிப்பு

கொரோனா பெருந்தொற்றுப் பேரிடரின் தாக்கத்திலிருந்து தமிழ்நாட்டை மீட்டெடுக்க, முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு அனைத்துத் தரப்பினரும் தாராள நிதி வழங்கி உதவ வேண்டுமெனக் கோரிக்கை விடுத்திருந்தேன். அதனை ஏற்று பெரும் தொழிலதிபர்கள், நடுத்தர, சிறு, குறு தொழில் நடத்துவோர், திரையுலகினர், சமூகத்தில் வசதி படைத்தவர்கள் முதல் ஏழை, எளிய சாமானிய மக்கள் வரை அனைத்துத் தரப்பினரும், பெருந்தொற்றை முறியடித்தே தீர வேண்டும் என்ற பேரார்வத்துடனும், பேரன்புடனும் தங்களால் இயன்ற நிதியை இன்முகத்துடன் வழங்கி வருகிறார்கள் என்பதை அறிவீர்கள்.



இதில், தங்களின் சின்னஞ் சிறு கனவுகளை அடைவதற்காக சிறுகச் சிறுகச் சேமித்து வைத்திருக்கும் சேமிப்பை வழங்க முன்வரும் பிஞ்சு உள்ளங்களின் பெருங்கருணை, என் நெஞ்சத்தை நெகிழ வைக்கிறது.

எனவே, கொரோனா துயர் துடைக்க முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்காக தங்கள் சேமிப்பை வழங்க முன்வரும் சிறார்கள், சிறுமியர்கள் உள்ளிட்ட பிள்ளைச் செல்வங்கள் அனைவருக்கும் தமிழ்நாடு அரசின் சார்பில், உலகப் பொதுமறையாம் திருக்குறள் நூலொன்று அனுப்பி வைக்கப்படும் என்பதைக் கனிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

“ஈதல் இசைபட வாழ்தல் அதுஅல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு”

– என்ற அய்யன் திருவள்ளுவரின் குறள் நெறிக்கு இணங்க, இளம் உள்ளங்களில் ஈகைப் பண்பையும், சக மனிதர்களை நேசிக்கும் அன்புணர்வையும் விதைத்திடும் நோக்கத்துடன் இந்த அறிவிப்பை வெளியிடுகிறேன். அன்னைத் தமிழ் மண்ணில் அற உணர்வு தழைத்தோங்கட்டும்!

“உங்கள் தொகுதியில் முதலமைச்சர்” துறை மூலம் பயனடைந்த பயனாளிகளுடன் தொலைப்பேசியில் உரையாடல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 28.05.2021 அன்று சென்னை, தமிழ்நாடு மின் ஆளுமை முகமை அலுவலக வளாகத்திற்கு நேரில் சென்று, “உங்கள் தொகுதியில் முதலமைச்சர்’’ துறை மூலம் பயன்பெற்ற மனுதாரர்களிடம் தொலைப்பேசியில் கலந்துரையாடினார்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தேர்தல் பரப்புரையில் “உங்கள் தொகுதியில் ஸ்டாலின்’’ என்ற நிகழ்வின் மூலம் பெறப்பட்ட மனுக்கள் 100 நாட்களுக்குள் தீர்வு காணும் பொருட்டு “உங்கள் தொகுதியில் முதலமைச்சர்’’ என்ற புதிய துறை உருவாக்கப்பட்டது.

சுமார் 4 இலட்சம் மனுக்கள் இதுவரை இத்துறையில் பெறப்பட்டன. பெறப்பட்ட அனைத்து மனுக்களும் மாவட்ட வாரியாக, வகை வாரியாக பிரிக்கப்பட்டு, தமிழ்நாடு மின் ஆளுமை முகமை (TNeGA) மூலம் பராமரிக்கப்படும் வலைத்தளத்தில் பதிவேற்றம் செய்யப்படுகிறது. இதுவரை சுமார் 2.7 இலட்சம் மனுக்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு மனுவும் வலைத்தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டவுடன் தனித்தன்மையுடன் கூடிய அடையாள எண் வழங்கப்பட்டு, அடையாள எண்ணுடன் கூடிய குறுஞ்செய்தி (SMS) மனுதாரருக்கு அனுப்பப்படுகிறது. மனுக்களில் கொடுக்கப்பட்டுள்ள விவரங்கள் மற்றும் அதன் தன்மைக்கேற்றவாறு தகுதியான மனுக்கள் ஒவ்வொன்றின் மீதும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, உடனடி தீர்வு காண மாவட்ட அலுவலர்கள் நடவடிக்கை மேற்கொண்டு வருகிறார்கள்.

28.05.2021 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் சென்னை, தமிழ்நாடு மின் ஆளுமை ஆணையர் அலுவலக வளாகத்திற்கு நேரில் சென்று, உங்கள் தொகுதியில் முதலமைச்சர் துறையின் மூலம் பெறப்பட்ட மனுக்கள் எவ்வாறு கணினியில் பதிவு செய்யப்பட்டு மாவட்டங்களுக்கு அனுப்பப்படுகிறது, அவற்றின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் ஆகியவை குறித்து விரிவான ஆய்வு மேற்கொண்டார். துறை ரீதியாகப் பெறப்பட்ட மனுக்களின் எண்ணிக்கை, இதன் மீது எடுக்கப்பட்ட, எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் கேட்டறிந்தார். இத்துறையின் கீழ் பயனடைந்த தேனி, இராணிப்பேட்டை, வேலூர் மற்றும் சென்னையைச் சேர்ந்த பயனாளிகளுடன் தொலைபேசி வாயிலாகத் தொடர்பு கொண்டு உரையாடினார். அவர்களின் கோரிக்கை மனுக்களின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கையால் கிடைக்கப்பெற்ற பயன்கள் குறித்தும் கேட்டறிந்தார்.

மேலும், கொரானா தொற்று பரவாமல் இருக்க ஒவ்வொரு பயனாளிகளிடமும் முகக்கவசம் கட்டாயம் அணியுமாறு அறிவுறுத்தினார்.

கொரோனா நோய்த் தொற்றினால் பெற்றோர்களை இழந்து, ஆதரவின்றி தவிக்கும் குழந்தைகளுக்கு, அவர்களது பெயரில் தலா ரூ.5 இலட்சம் வைப்பீடு

கல்லூரி வரை கல்விக் கட்டணம் மற்றும் விடுதிக் கட்டணம் போன்றவற்றை அரசே ஏற்கும்

தமிழகத்தில் கொரோனா நோய்த் தொற்றினால் பாதிக்கப்பட்டு உயிரிழந்த பெற்றோர்களை இழந்து, ஆதரவின்றி தவிக்கும் குழந்தைகளின் நலன்களைப் பாதுகாத்திட, அரசு சார்பில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 29.05.2021 அன்று தலைமைச் செயலகத்தில் உயர் அலுவலர்களுடன் ஆலோசனை மேற்கொண்டார்.

தமிழகத்தில் கொரோனா நோய்த் தொற்றினால் உயிரிழந்த பெற்றோர்களின் குழந்தைகளைக் கண்டறிந்து, அவர்களுக்குத் தேவைப்படும் உதவிகளை வழங்கிட ஏதுவாக, மாவட்ட அளவில், மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் சிறப்புப் பணிப் பிரிவு (Task Force) அரசால் ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், மேற்படி ஆதரவற்ற குழந்தைகளைப் பாதுகாக்கும் வகையில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், கீழ்க்காணும் நிவாரண உதவிகளை வழங்கிட அரசு அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்:

- கொரோனா நோய்த் தொற்றினால் பெற்றோர்களை இழந்து, ஆதரவின்றி தவிக்கும் குழந்தைகளுக்கு, அவர்களது பெயரில் தலா ரூ.5 இலட்சம் வைப்பீடு செய்யவும், அந்தக் குழந்தை 18 வயது நிறைவடையும் போது, அந்தத் தொகை அந்தக் குழந்தைக்கு வட்டியோடு வழங்கிடவும்,
- பெற்றோர்களை இழந்த குழந்தைகளுக்கு அரசு இல்லங்கள் மற்றும் விடுதிகளில் முன்னுரிமை அடிப்படையில் தங்குவதற்கு இடம் வழங்கப்படும்.

- இக்குழந்தைகளுக்குப் பட்டப் படிப்பு வரையிலான கல்விக் கட்டணம் மற்றும் விடுதிக் கட்டணம் உள்ளிட்ட அனைத்து செலவினங்களையும் அரசே ஏற்றிடவும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.
- கொரோனா நோய்த் தொற்றினால் தாய் அல்லது தந்தையை இழந்த குழந்தைகளோடு இருக்கும் தந்தை அல்லது தாய்க்கு உடனடி நிவாரணத் தொகையாக மூன்று இலட்சம் ரூபாய் வழங்கப்படும்.
- அரசு காப்பகம் அல்லது விடுதிகளில் இல்லாது, உறவினர் / பாதுகாவலரின் ஆதரவில் வளரும் குழந்தைகளின் பராமரிப்புச் செலவாக, மாதந்தோறும் தலா ரூ.3 ஆயிரம் உதவித் தொகை, அவர்கள் 18 வயது நிறைவடையும் வரையில் வழங்கப்படும்.
- ஏற்கெனவே தாய் அல்லது தந்தையை இழந்து, தற்போது கொரோனா நோய்த் தொற்றினால் மற்றொரு பெற்றோரையும் இழந்த குழந்தைகளுக்கும் ரூ.5 இலட்சம் அவர்களது பெயரில் வைப்பீடு செய்யப்படும்.
- ஒவ்வொரு குழந்தைக்கும் வழங்கப்படும் உதவித் தொகை, அவர்களது கல்வி மற்றும் வளர்ச்சியும், ஒரு சிறப்புக் குழுவால் மாவட்டந்தோறும் அமைக்கப்பட்டுக் கண்காணிக்கப்படும்.
- அனைத்து அரசு நலத் திட்டங்களும் முன்னுரிமை அடிப்படையில் இக்குழந்தைகளுக்கும், நோய்த் தொற்றினால் கணவன் அல்லது மனைவியை இழந்து, குழந்தையுடன் இருக்கும் பெற்றோருக்கும் வழங்கப்படும்.
- மேற்படி நிவாரண உதவிகள் ஒவ்வொரு குழந்தைக்கும் ஏற்றவாறு வழங்குவது குறித்த வழிகாட்டி நெறிமுறைகள் வகுத்து வெளியிட, கூடுதல் தலைமைச் செயலாளர், நிதித் துறை அவர்களது தலைமையில் வழிகாட்டுதல் குழு ஒன்று சமூக நலத் துறைச் செயலர் உள்ளிட்ட அலுவலர்கள் மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் / அமைப்புகளைச் சார்ந்தவர்களைக் கொண்டு அமைக்கப்படும்.

படமும்/செய்தியும்

மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்கள் தலைமையில், மாநில முதலமைச்சர்களுடனான கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து கலந்தாய்வுக் கூட்டம்

மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. **நரேந்திர மோடி** அவர்கள் தலைமையில் 18.05.2021 அன்று காணொலிக் காட்சி மூலமாக மாநில முதலமைச்சர்களுடன் கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பாகக் கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா.சுப்பிரமணியன், தலைமைச் செயலாளர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

5 மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட கொரோனா நோய்த் தொற்று தடுப்பு நடவடிக்கைகள் குறித்த ஆய்வுக் கூட்டம்

படமும் / செய்தியும்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தலைமையில் 30.05.2021 அன்று கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில் கோயம்புத்தூர், திருப்பூர், நீலகிரி, ஈரோடு, சேலம் ஆகிய மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் கொரோனா நோய்த் தொற்று தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் தலைமையில் நிதிநிலை குறித்த ஆய்வுக் கூட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தலைமையில் 31.05.2021 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசின் நிதிநிலை குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில், மாண்புமிகு நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் திரு. பழனிவேல் தியாகராஜன், தலைமைச் செயலாளர், நிதித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர், பொதுத் துறை செயலாளர், நிதித் துறை சிறப்புச் செயலாளர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

கோயம்புத்தூர் மாவட்டத்தில், கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவரும் நோயாளிகளை நேரில் சென்று ஆறுதல்

மாண்புமிகு
தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
30.05.2021 அன்று கோயம்புத்தூர்
அரசு மருத்துவக் கல்லூரி / இ.எஸ்.ஐ.
மருத்துவமனை வளாகத்தில் கொரோனா
தொற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு
அளிக்கப்படும் சிகிச்சைகளை
நேரில் சென்று ஆய்வு செய்து,
ஆறுதல் கூறினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், கொரோனா தொற்றினை கட்டுப்படுத்தும் வகையில், கிராம மற்றும் நகர்ப்புறங்களில் பரிசோதனைகளை அதிகரித்தல், தொற்று பாதித்தவர்களை விரைந்து கண்டறிந்து தனிமைப்படுத்தி சிகிச்சையளித்தல், புதிய தொற்று ஏற்படாத வண்ணம் தடுப்பூசி செலுத்துவதை அதிகப்படுத்துதல் எனப் போர்க்கால அடிப்படையில் நடவடிக்கைகளை மேற்கொண்டதால், தமிழகத்தில் அதிகரித்து வந்த கொரோனா தொற்றானது கடந்த சில தினங்களாக படிப்படியாகக் குறையத் தொடங்கியுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் கடந்த 20.05.2021 அன்று கோயம்புத்தூர் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்று தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பாக நேரடி கள ஆய்வு மேற்கொண்டு, கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர்களை விரைந்து தனிமைப்படுத்தி சிகிச்சையளிக்கும் வகையில், கொடிசியா வளாகத்தில் சுமார் 820 படுக்கை வசதிகள் மற்றும் குமரகுரு தொழில்நுட்ப கல்லூரியில் 360 படுக்கை வசதிகளுடன் கூடிய கொரோனா சிறப்புச் சிகிச்சை மையத்தைத் திறந்து வைத்தார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, கோயம்புத்தூர் மாவட்டத்தில் 13 புதிய கொரோனா சிறப்புச் சிகிச்சை மையங்களும், அவற்றில் 3,105 படுக்கை வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அதன் தொடர்ச்சியாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் 30.05.2021 அன்று கோயம்புத்தூர் அரசு மருத்துவக் கல்லூரி / இ.எஸ்.ஐ. மருத்துவமனை வளாகத்திற்கு நேரில் சென்று கள ஆய்வு

“இந்தியாவிலேயே முதல் முறையாக முதலமைச்சர் ஒருவர் கொரோனா நோய்த் தொற்று சிகிச்சைப் பிரிவிற்கு நேரில் சென்று கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களைச் சந்தித்து நலம் விசாரிப்பது இதுவே முதல் முறையாகும்.”

மேற்கொண்டார்கள். இந்த ஆய்வின் போது, கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அளிக்கப்படும் சிகிச்சைகள் குறித்தும், அங்குள்ள மருத்துவ கட்டமைப்புகள் குறித்தும், தினசரி பயன்படுத்தப்படும் ஆக்சிஜன் அளவு குறித்தும், நோயாளிகளுக்கு வழங்கப்படும் சிறப்பு மருத்துவச் சிகிச்சைகள் குறித்தும், அங்கு நோயாளிகளுக்கு வழங்கப்படும் உணவு குறித்தும் கேட்டறிந்தார்கள். இம்மருத்துவமனை, கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காக 382 சாதாரண படுக்கை வசதிகள், 678 ஆக்சிஜன் வசதியுடன் கூடிய படுக்கை வசதிகள், 213 தீவிர சிகிச்சை படுக்கை வசதிகள், என மொத்தம் 1,273 படுக்கை வசதிகளுடன் தற்போது செயல்பட்டு வருகிறது.

பின்னர், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் முழு பாதுகாப்பு கவச உடை (PPE KIT) அணிந்து, கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வரும் நோயாளிகள் பிரிவுக்கு நேரில் சென்று நோயாளிகளைச் சந்தித்து நலம் விசாரித்து, அவர்களின் தேவைகள் குறித்துக் கேட்டறிந்தார். மேலும், அதிதீவிர சிகிச்சை பிரிவுக்கும் சென்று நோயாளிகளின் நிலை குறித்தும், சிகிச்சைகள் குறித்தும் மருத்துவர்களிடம் கேட்டறிந்தார். இந்தியாவிலேயே முதல் முறையாக முதலமைச்சர் ஒருவர் கொரோனா நோய்த் தொற்று சிகிச்சைப் பிரிவிற்கு நேரில் சென்று கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களைச் சந்தித்து நலம் விசாரிப்பது இதுவே முதல் முறையாகும்.

மேலும், கொரோனா தொற்றால் பாதித்தவர்களை மருத்துவமனைகளுக்கு அழைத்துச் செல்லும் 50 கார் ஆம்புலன்ஸ் சேவையினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.

மூன்று வேளாண் சட்டங்களை ஒன்றிய அரசு திரும்பப்பெற வேண்டும்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
அறிக்கை – 26.05.2021

நாடாளுமன்ற நடைமுறைகளைப் புறக்கணித்து அவசரம் அவசரமாகக் கொண்டு வந்த "விலை உறுதி மற்றும் பண்ணைச் சேவைச் சட்டம் 2020", "வேளாண்மை உற்பத்தி வர்த்தகம் மற்றும் வர்த்தக மேம்பாட்டுச் சட்டம் 2020", "அத்தியாவசியப் பொருள்கள் திருத்தச் சட்டம் 2020" ஆகிய மூன்று வேளாண் சட்டங்களையும் எதிர்த்து நாடு முழுவதும் உள்ள விவசாயிகள் டெல்லியில் தங்கள் போராட்டத்தைத் துவங்கி 26.05.2021 அன்றுடன் ஆறு மாத காலம் நிறைவு பெறுகிறது.

இன்றளவும் போராடும் விவசாயிகளின் நியாயமான கோரிக்கைகளை – உணர்வுகளை மதித்து அந்த மூன்று வேளாண் சட்டங்களையும் திரும்பப் பெறுவதற்கு ஒன்றிய அரசு இதுவரை முன்வரவும் இல்லை – ஆக்கப்பூர்வமான பேச்சுவார்த்தை நடத்தி அதற்கான தீர்வு காண்பதற்கும் முயற்சிக்கவில்லை என்பது கவலையளிப்பதாக இருக்கிறது.

2021 தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலுக்கான திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையில், "இந்த மூன்று சட்டங்களையும் திரும்பப் பெறத் தமிழகச் சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றி – இவற்றை ரத்து செய்திட ஒன்றிய அரசு சட்டம் இயற்ற வேண்டும் என வலியுறுத்தப்படும்" என்று தமிழக மக்களுக்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டது. எனவே, டெல்லியில் போராடும் விவசாயிகளின் நியாயமான கோரிக்கைகளை ஏற்று, மூன்று வேளாண் சட்டங்களையும் ஒன்றிய அரசு திரும்பப் பெற வேண்டும் என்றும், விவசாயிகளுக்கு வேளாண் சட்டங்கள் தொடர்பாகத் திராவிட முன்னேற்றக் கழகம் அளித்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படும் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

படமும்/செய்தியும்

கோயம்புத்தூர் மாவட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 30.05.2021 அன்று கோயம்புத்தூர் அரசு மருத்துவக் கல்லூரி/இ.எஸ்.ஐ. மருத்துவமனை வளாகத்தில் 50 கார் ஆம்புலன்ஸ் சேவையினை தொடங்கி வைத்தார்கள். அந்நிகழ்வின்போது, மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், கோயம்புத்தூர் மாவட்டத்திற்கான கண்காணிப்பு அலுவலர், கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித்தலைவர், தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழக செயல் இயக்குநர், கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையாளர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடன் இருந்தனர்.

ஈரோடு மாவட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 30.05.2021 அன்று ஈரோடு மாவட்டம், பெருந்துறை அரசு ஈரோடு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் கொரோனா நோய்த்தடுப்பு நடவடிக்கைகள் குறித்தும் கொரோனா சிகிச்சை மையத்தில் ஆக்சிஜன் வசதியுடன் அமைக்கப்பட்டுள்ள கூடுதல் படுக்கை வசதிகள் குறித்தும் ஆய்வு மேற்கொண்டார்கள். உடன் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், மாவட்ட ஆட்சித் தலைவர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 30.05.2021 அன்று திருப்பூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ஆக்சிஜன் வசதியுடன் கூடிய 100 படுக்கைகள் கொண்ட சிறப்புச் சிகிச்சை மையத்தைத் திறந்து வைத்து ஆய்வு செய்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 30.05.2021 அன்று திருப்பூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 20 கார் ஆம்புலன்ஸ் சேவையினை தொடங்கி வைத்தார்கள்.

எனது தலைமையிலான அரசு கொரோனா தொற்றிலிருந்து மக்களைப் பாதுகாத்திடப் போர்க்கால அடிப்படையில் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
கொரோனா நோய்த் தடுப்பு நடவடிக்கைகள்
தொடர்பாக அனைத்து சட்டமன்றக் கட்சித்
தலைவர்களுடனான ஆலோசனைக் கூட்டத்தில்,
ஆற்றிய உரை – 13.05.2021

தமிழகத்தில் கொரோனா வேகமாகப் பரவி வரும் நிலையில், கொரோனா நோய்த் தொற்றுத் தடுப்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகள் குறித்து ஆலோசனை செய்வதற்காக நடத்தப்படும் இந்த அனைத்து சட்டமன்ற கட்சிகளின் ஆலோசனைக் கூட்டத்திற்கு எனது அழைப்பினை ஏற்று வருகை புரிந்துள்ள உங்கள் அனைவருக்கும் முதற்கண் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனது தலைமையிலான அரசின் நடவடிக்கைகளில் வெளிப்படைத்தன்மை இருக்கும் என்று நான் ஏற்கெனவே கொடுத்துள்ள வாக்குறுதியின்படி, நான் முதலமைச்சராகப் பொறுப்பேற்றதும் எடுக்கப்பட்டுவரும் கொரோனா தடுப்பு மற்றும் நிவாரண நடவடிக்கைகள் குறித்து, உங்கள் அனைவருக்கும் விளக்கி, உங்களது ஆலோசனைகளைப் பெறவே இந்த கூட்டத்தைக் கூட்டியிருக்கிறேன்.

கடந்த சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்று இந்த அரசு பொறுப்பேற்கும் நாளுக்கு முன்பாகவே நோய்த் தொற்றின் தாக்கத்தையும் வேகத்தையும் உணர்ந்து, அதனை எதிர்கொள்வது தொடர்பான அலுவலர்களின் கருத்துக்களை அறிந்து அதற்கான ஆலோசனைகளையும் வழங்கி வந்தேன்.

முதலமைச்சராகப் பதவியேற்றவுடன் 5 முக்கிய அரசாணைகள் பிறப்பிக்கப்பட்டதை நீங்கள் அறிவீர்கள். அவற்றில், நோய்த் தொற்று காரணமாகத் தமிழகத்தில்

வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ள ஏழை எளிய மக்களின் துயர் தீர்க்க, அரிசி அட்டை வைத்திருக்கும் அனைத்து குடும்பங்களுக்கும் ரூ.4,000 வழங்கப்படும் என்று அளிக்கப்பட்ட தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றும்பொருட்டு, அதனை இரண்டு தவணையாக வழங்கும் முக்கிய அரசாணை வெளியிடப்பட்டு, நிவாரணம் வழங்கும் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

அதோடு, கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ள பொது மக்கள் பலரும் அரசு மருத்துவமனைகள் மட்டுமின்றி, தனியார் மருத்துவமனைகளிலும் சிகிச்சை பெற்று வரும் நிலையில், பொதுமக்களின் நலன் கருதி, அவர்களின் இன்னல்களைக் குறைக்கும் வகையில், சிகிச்சைக்கான மருத்துவமனை கட்டணத்தைத் தமிழக அரசே காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், ஏற்பதற்கும் மக்கள் நலன் கருதி இந்த அரசால் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

அன்று மாலையே தலைமைச் செயலர் உள்ளிட்ட உயர் அலுவலர்கள் மற்றும் மருத்துவ வல்லுநர் குழுவினருடன் ஆலோசனைக் கூட்டம் நடத்தி பல்வேறு முக்கிய முடிவுகளை இந்த அரசு எடுத்தது. அன்றே மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் காணொலிக் காட்சி வாயிலாகவும் ஆலோசனை செய்தேன்.

தொடர்ச்சியாக வந்த நாட்களில் ஒவ்வொரு நாளும் நோய்ப் பரவல் பற்றியும் மருந்து மற்றும் தடுப்பூசிகள் இருப்பு பற்றிய விபரங்களை அறிந்து உரிய முடிவுகளை இந்த அரசு எடுத்து வந்து கொண்டிருக்கிறது.

கடந்த சில நாட்களில் இதுதொடர்பாக அரசு மேற்கொண்ட சில முக்கிய நடவடிக்கைகளைப் பற்றி உங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

- கொரோனா நோயினால் பாதிக்கப்பட்டு சிகிச்சை தேவைப்படும் நோயாளிகளுக்குத் தேவையான இடவசதி ஆக்சிஜன் இருப்பு ஆம்புலன்ஸ் தேவை போன்றவற்றை தனித்தனியே முறையாக ஒருங்கிணைத்து இரவு பகல் பாராது கண்காணித்து மக்களுக்குச் சேவை வழங்க ஒரு centralized command centre - (war room) துவக்கப்பட்டது.

- ஆக்சிஜன் இருப்பை கண்காணிக்கவும் பிற மாநிலங்களிலிருந்து கொண்டு வருவதை உறுதி செய்யவும் மற்றும் தொழில் நிறுவனங்களிலிருந்து ஆக்சிஜன் பெறுவதை ஒருங்கிணைக்கவும் தொழில் துறை முதன்மைச் செயலாளர் அவர்கள் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டது. அது 4 ஐ.ஏ.எஸ். அதிகாரிகளைக் கொண்டு இயங்கி வருகிறது

- கொரோனா நோய்த் தொற்றினைக் குணப்படுத்தும் அரும்பணியில் தங்களை ஈடுபடுத்திக் கொண்ட மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களுக்கு ஊக்கத் தொகையும், இப்பணியில் ஈடுபட்டு உயிர்நீத்த மருத்துவப் பணியாளர்களுக்கு இழப்பீடும் தற்போது வழங்கப்பட்டு வருகிறது. அந்த வகையில், கொரோனா சிகிச்சைப் பணியில் உயிரிழந்த 43 மருத்துவர்களின் குடும்பங்களுக்கு தலா 25 இலட்சம் ரூபாய் இழப்பீடு வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. கொரோனா தொற்றின் இரண்டாம் அலையில் பணியாற்றி வரும் மருத்துவர்களுக்கு 30 ஆயிரம் ரூபாய், செவிலியர்களுக்கு 20 ஆயிரம் ரூபாய், இதரப் பணியாளர்களுக்கு 15 ஆயிரம் ரூபாய், பட்ட மேற்படிப்பு மருத்துவர்கள் மற்றும் பயிற்சி மருத்துவர்களுக்கு 20 ஆயிரம் ரூபாய் என ஏப்ரல், மே மற்றும் ஜூன் மாதங்களுக்கு ஊக்கத் தொகையாக அறிவித்து உத்தரவிடப்பட்டுள்ளது.

- தடுப்பூசியினை வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்வது தொடர்பாக உலகளாவிய ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுக் குறுகிய காலத்திற்குள் 18 வயதிலிருந்து 45 வயதுக்குட்பட்டவர்கள் அனைவருக்கும் தடுப்பூசி போடுவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் இந்த அரசு முனைப்புடன் செய்து வருகிறது.

- ஒடிசா, மேற்கு வங்காளம் போன்ற வெளிமாநிலங்களிலிருந்து ஆக்சிஜன் கொண்டு வரவும், மத்திய அரசுக்கு இது குறித்து அழுத்தம் கொடுக்கவும் நடவடிக்கை மேற்கொண்டு அதில் பலனும் கிடைத்துள்ளது. இருப்பினும் பெருகிவரும் தேவையைக் கருத்தில்கொண்டு, ஆக்ஸிஜன் இருப்பை மேலும் அதிகரிக்கவும் இந்த அரசு வேறு பல நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறது. அதன் விபரங்களை ஓரிரு தினங்களில் நான் அறிவிக்க இருக்கிறேன்.

- Remdesivir மருந்து சென்னை மட்டுமல்லாமல் பல நோயாளிகளுக்கு மாநிலம் முழுவதும் தேவைப்படுவதால், முக்கிய நகரங்களில் இந்த மருந்து வழங்கப்பட்டு வருகிறது.

- பொதுமக்களில் பலருக்கு ஆயுர்வேதா சித்தா மற்றும் யுனானி போன்ற மருத்துவச் சிகிச்சை வகைகள் நம்பிக்கையும் பலருக்குப் பலனும் கிட்டுவதாகத் தெரிவிக்கப்படுவதால் தாம்பரத்தில் இதற்கென தனி சிகிச்சை மையம் துவக்கப்பட்டுள்ளது. அதனை, நான் கடந்த இரண்டு தினங்களுக்கு முன் துவக்கி வைத்தேன்.

- அரசு மேற்கொண்ட பல்வேறு முயற்சிகளின் காரணமாக, சிங்கப்பூர், தாய்வான் போன்ற வெளிநாடுகளில் இருந்து அரசு மூலமாகவும், தொழில் நிறுவனங்கள் மற்றும் கொடையாளர்கள் மூலமாகவும், ஆக்சிஜன் கான்சென்ட்ரேட்டர்கள் பெறப்பட்டு வருகின்றன.

- தற்போதைய நோய்த்தொற்று மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களிலும் அதிக அளவிலான மக்களைப் பாதித்து வருவதால், மருத்துவமனைகளில் படுக்கை வசதிகளின் தேவையும் உயர்ந்து வருகிறது இதனை எதிர்நோக்கி, கூடுதல் எண்ணிக்கையிலான புதிய படுக்கைகள் உருவாக்கப்பட்டு வருகின்றன. மேலும், நந்தம்பாக்கத்தில் உள்ள சென்னை வர்த்தக மையத்தில் புதிதாகப் படுக்கைகள் உருவாக்கப்பட்டு, செயல்பட்டு வருகின்றன.

- நோய்த் தொற்றுக்கான சோதனை முடிவுகளை விரைந்து மக்களுக்குத் தெரிவிக்கவும் சோதனைகளின் எண்ணிக்கையை உயர்த்தவும் RTPCR பரிசோதனைகள் தனியார் பரிசோதனை மையங்களும் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளது. இதற்கான கட்டணத்தை முறையாக நிர்ணயம் செய்யவும் விலை நிர்ணயக் குழுக் கூட்டத்தை உடனடியாக நடத்தவும் ஆணையிட்டுள்ளேன்.

- கொரோனா நோய்த் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளின் காரணமாகத் தொழில் மற்றும் வர்த்தக நிறுவனங்கள் பாதிக்கப்பட்டு விடக்கூடாது என்பதற்காக அந்த அமைப்புகள் உடனான ஆலோசனைக் கூட்டம் கடந்த 09.05.2021 அன்று நடத்தப்பட்டு, அதன் அடிப்படையில் பல்வேறு சலுகைகளை இந்த அரசு சிறு குறு தொழில் நிறுவனங்களுக்கு வழங்கியுள்ளது. இதனால் தொழில் வர்த்தகம் பாதுகாக்கப்பட்டு பொருளாதாரம் நிலைத் தன்மை பெற்று இருப்பது உறுதி செய்யப்படும்.

இவ்வாறு பல்வேறு நடவடிக்கைகளை இந்த குறுகிய சில நாட்களில் இந்த அரசு எடுத்து வருகிறது. பெருகி வரும் கொரோனா பெருந்தொற்றிலிருந்து, முழு வீச்சில், போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுத்து, நம் மக்களைப் பாதுகாத்திட வேண்டும் என்பதில் எனது தலைமையிலான அரசு தீவிர நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. குறைந்த அளவு பாதிப்புடன், இறப்புகளைப் பெருமளவில் தவிர்ப்பதற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு வருகிறது.

முழு ஊரடங்கு அறிவிக்கப்பட்டுள்ளதால் மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு விடக்கூடாது என்பதற்காக சில தளர்வுகளும் அறிவிக்கப்பட்டுள்ளன. ஆனால், இந்த தளர்வுகளை வாய்ப்பாகப் பயன்படுத்திக்கொண்டு சிலர் ஊரடங்கு விதிகளை மீறுகின்றனர். எனவே, இந்தத் தளர்வுகள் தொடர்ந்து நீட்டிக்கப்படலாமா அல்லது அதில் மாற்றங்கள் செய்யலாமா என்பது குறித்த உங்களது மேலான கருத்துக்களையும் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே அமர்ந்திருக்கும் அனைத்துக் கட்சிகளின் சட்டமன்றத் தலைவர்களும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பிரதிநிதிகள். அனைவரும் இணைந்து நம் மக்களைக் காப்பாற்றிடத் தேவையான ஆலோசனைகள், கருத்துக்கள், உங்கள் தொகுதியிலிருந்து கிடைத்த தகவல்கள் ஆகியவற்றைப் பகிர்ந்து கொள்ளுமாறு உங்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

தளர்வுகளற்ற முழு ஊரடங்கு காலத்தில் தமிழ்நாட்டு மக்களுக்குத் தேவையான காய்கறிகள், பழங்கள், பால் போன்ற அத்தியாவசியப் பொருட்களைத் தங்கு தடையின்றி விநியோகம் செய்ய வேண்டும்

கொரோனா நோய்த் தொற்றினைத் தடுக்கும் வகையில், 24.05.2021 முதல் ஒரு வாரக் காலத்திற்கு முழுமையாக எவ்விதத் தளர்வுகளுமின்றி தமிழ்நாட்டில் ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளதன் அடிப்படையில், பொதுமக்களுக்குத் தேவையான காய்கறிகள், பழங்கள், பால் போன்ற அத்தியாவசியப் பொருட்கள் தங்கு தடையின்றி கிடைப்பதைச் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் உறுதி செய்ய வேண்டுமென்று ஏற்கெனவே ஆணையிட்டிருந்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தலைமையில், 25.05.2021 அன்று தலைமைச் செயலகத்தில் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

அதன் தொடர்ச்சியாக, முழு ஊரடங்கு காலத்தில் அத்தியாவசியப் பொருட்களைத் தங்கு தடையின்றி வழங்கப்படுவது தொடர்பான ஆய்வுக் கூட்டம் 25.05.2021 அன்று, தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே வழங்கியுள்ள அறிவுரையின்படி, தோட்டக்கலைத் துறை, வேளாண்மைத் துறை, வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை, சென்னை பெருமாநகராட்சி உள்ளிட்ட உள்ளாட்சி அமைப்புகள், ஆவின்

நிறுவனம் மற்றும் மின் வணிக நிறுவனங்கள் மூலமாகச் சென்னை மாநகராட்சி மற்றும் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் வாகனங்கள் மூலமாகக் காய்கறிகள், பழங்கள், பால் போன்ற அத்தியாவசியப் பொருட்கள் பொது மக்களுக்கு எவ்விதத் தடையுமின்றி விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

சென்னையைப் பொறுத்தவரை, 15 மண்டலங்களில் உள்ள 200 வார்டுகளில் பொதுமக்கள் வசிக்கும் பகுதிகளுக்கே நேரடியாக வாகனங்களில் சென்று வணிகர் சங்கத்தினரின் உதவியுடன் காய்கறிகள், பழங்கள் விநியோகம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. அதன்படி, 24.05.2021 அன்று சென்னையில் 1,670 வாகனங்கள் மூலம் 1,400 மெட்ரிக் டன்னும், இதர மாவட்டங்களில் 4,626 வாகனங்கள் மூலம் 3,500 மெட்ரிக் டன்னும், ஆக மொத்தம் 6,296 வாகனங்கள் மூலம் 4,900 மெட்ரிக் டன் காய்கறிகளும், பழங்களும் விநியோகம் செய்யப்பட்டன.

பொதுமக்களுக்குத் தேவையான காய்கறிகள், பழங்கள், பால் போன்ற அத்தியாவசியப் பொருட்கள் தொடர்புடைய துறைகள் மூலமாகச் சென்னை நகரத்திலும், அனைத்து மாவட்டங்களிலும் சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளுடன் இணைந்து வாகனங்கள் மூலமாக வழங்கப்படுவதை உறுதி செய்திட வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்கள். இந்த சேவை நகர்ப்புறங்களில் சிறப்பாக வழங்கப்படுவதைப் போலவே, கிராமப்புறங்களிலும் வழங்கப்படுவதைக் கட்டாயம் உறுதி செய்யவேண்டும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்கள்.

மேலும், 25.05.2021 அன்று, 13,096 வாகனங்கள் மூலம் சென்று 6,509 மெட்ரிக் டன் அளவிலான காய்கறிகளையும், பழங்களையும் விநியோகம் செய்ய அரசால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. பொது மக்களின் வசதிக்காக, அடுத்து வரும் நாட்களுக்குத் தேவையான காய்கறிகள் மற்றும் பழங்கள் போதுமான அளவில் தொடர்ந்து நியாயமான விலையில் கிடைத்திட, தொடர்புடைய துறைகள் நடவடிக்கை எடுக்குமாறு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவுரை வழங்கினார்கள்.

படமும் / செய்தியும்

மாண்புமிகு முதல்வர் அவர்கள் கோவிட் வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட ஆசியச் சிங்கங்களை நேரில் சென்று பார்வையிட்டார்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 06.06.2021 அன்று வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவிற்கு நேரில் சென்று, கோவிட் வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ள ஆசியச் சிங்கங்களைப் பார்வையிட்டு, அச்சிங்கங்களுக்கு அளிக்கப்படும் சிகிச்சைகள் குறித்து மருத்துவர்கள் மற்றும் வனத் துறை உயர் அலுவலர்களிடம் கேட்டறிந்தார்கள்.

தனியார் மருத்துவமனைகளில் உள்ள நோயாளிகளுக்கு அந்தந்த மருத்துவமனைகள் மூலமாக ரெம்டெசிவிர் மருந்து வழங்கப்படும்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமைச் செயலகத்தில் 16.05.2021 அன்று, தமிழ்நாட்டிலுள்ள தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை பெறும் நோயாளிகளுக்கு ரெம்டெசிவிர் மருந்து வழங்கும் முறையை மேம்படுத்துவது குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

தமிழ்நாட்டில் அரசு மருத்துவமனைகளில் உள்ள நோயாளிகளுக்கு ரெம்டெசிவிர் மருந்து தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகம் மூலமாக போதிய அளவில் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், தனியார் மருத்துவமனைகளில் உள்ள நோயாளிகளுக்கு, தற்போது தனியார் மருத்துவமனைகள் மூலமாகவும், சென்னை, கோயம்புத்தூர், சேலம், திருச்சி, மதுரை, திருநெல்வேலி ஆகிய இடங்களில் உள்ள விற்பனை மையங்களில் நேரடியாக நோயாளிகளின் குடும்பத்தினர் மூலமாகவும் இந்த மருந்து வழங்கப்பட்டு வருகிறது.

நமது நாட்டிலேயே தமிழகத்தில் மட்டுமே இவ்வாறு நேரடியாக நோயாளிகளின் குடும்பத்தினரிடம் இந்த மருந்து வழங்கப்பட்டு வருகிறது. இந்த நிலையில், ரெம்டெசிவிர் மருந்து விற்பனை செய்யப்படும் இடங்களில், அதிக கூட்டம் கூடுவதால், சமூக இடைவெளியை கடைப்பிடிக்கமுடியாத சூழல் ஏற்பட்டு, நோய்த் தொற்று பரவும் அபாயம் ஏற்படுவதால், அதனைத் தவிர்க்க வேண்டியுள்ளது. இங்கு மருந்துகளைப் பெறுவோர் சிலர், அவற்றைத் தவறான முறையில் அதிக விலையில் கள்ளச்சந்தையில் விற்பனை செய்வது குறித்த புகார்களும் வந்துள்ளன. மேலும், ரெம்டெசிவிர் மருந்து ஆக்சிஜன் சிகிச்சையில் உள்ள நோயாளிகளுக்கு மட்டுமே சிறிது பலன் தருவதாகவும், மற்ற நோயாளிகளுக்கு இதனால் பெரிய அளவில் பலன் இல்லை என்றும் உலக சுகாதார நிறுவனமும், மருத்துவ நிபுணர்களும் தெரிவித்துள்ளனர்.

மேற்கூறிய காரணங்களைக் கருத்தில் கொண்டும், பொது மக்களின் சிரமத்தைக் குறைக்கும் வகையிலும், தற்போதுள்ள முறையை மாற்றி, மருத்துவமனைகள் மூலமாக மட்டுமே இந்த மருந்தை வழங்கிட வேண்டுமென்று

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்கள். மேலும், நோயாளிகளின் குடும்பத்தினருக்கு இந்த மருந்தை வாங்குவதற்கான சீட்டை அளித்து, அவர்களை வாங்கிடப் பணிக்கும் செயல்கள் தவிர்க்கப்பட வேண்டுமென்றும் வலியுறுத்தினார்கள்.

இதன்படி, 18.05.02021 அன்று முதல் தமிழகத்திலுள்ள அனைத்து தனியார் மருத்துவமனைகளும், தமது மருத்துவமனைகளில் ஆக்சிஜன் சிகிச்சை பெற்று வரும் நோயாளிகள் குறித்த விவரங்களோடு, மருந்து தேவை குறித்த தமது கோரிக்கைகளை இணையதளத்தில் பதிவிடும் வசதி ஏற்படுத்தப்படும். இந்தக் கோரிக்கைகளைப் பரிசீலித்து இந்த மருந்து ஒதுக்கீடு செய்யப்பட்டபின், அந்த மருத்துவமனையின் பிரதிநிதிகள் மட்டும், அவர்களுக்கான விற்பனை மையங்களுக்குச் சென்று ஒதுக்கீடு செய்யப்படும் மருந்துகளைப் பெற்றுக் கொள்ளலாம். இதற்கான இணையதளம் குறித்த விவரங்கள் விரைவில் வெளியிடப்படும்.

இவ்வாறு வழங்கப்படும் மருந்துகள் தகுதியான நோயாளிகளுக்கு மட்டுமே பயன்படுத்தப்படுவதையும், பெறப்படும் அதே விலையிலேயே நோயாளிகளுக்கு அவை விற்பனை செய்யப்படுவதையும், தவறான முறையில் கள்ளச் சந்தையில் இவை விற்பனை செய்யப்படாதவாறு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அலுவலர்கள் தொடர்ந்து கண்காணிப்பார்கள். நோயாளிகளுக்குத் தேவையற்ற முறையில் மருந்துச் சீட்டு அளிக்கும் மருத்துவமனைகள் மீதும், மேற்கூறிய விதிமுறைகளை மீறுவோர் மீதும், சட்டப்படியான நடவடிக்கைகளை மக்கள் நல்வாழ்வுத் துறை மேற்கொள்ளும்.

பிறப்பு, இறப்பு விதிகளில் வரையறுக்கப்பட்ட காலதாமதக் கட்டணத்தை வசூலிக்கப்படுவதிலிருந்து விலக்கு

தமிழ்நாட்டில் கொரோனா பெருந்தொற்று நோயினால் பொதுமக்களுக்கு ஏற்படும் இன்னல்களைக் குறைக்கவும், நோய்ப் பரவலைக் கட்டுப்படுத்தவும், சிகிச்சை வசதிகளை மேம்படுத்தவும் பல்வேறு நடவடிக்கைகளை அரசு எடுத்து வருவதை அறிவோம். நமது மருத்துவர்களின் சீரிய முயற்சிகளையும் மீறித் தவிர்க்க முடியாத நேர்வுகளில் இறப்புகள் நிகழ்ந்துவிடுகின்றன.

துயரமான இந்த சம்பவத்தில், சில காரணங்களினால் இறப்பு குறித்து வரையறுக்கப்பட்ட காலகட்டத்தில் அதாவது இறப்பு நிகழ்வுற்ற 21 நாட்களுக்குள் சம்பந்தப்பட்ட பிறப்பு இறப்பு பதிவாளரிடம் தகவல் தெரிவித்தல் பிறப்பு இறப்பு பதிவுச் சட்டம் 1969 மற்றும் தமிழ்நாடு பிறப்பு இறப்பு விதிகள் 2000இன்படி, கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இந்த காலகட்டத்திற்குப் பின் அதாவது 21 நாட்களுக்கு மேல் 30 நாட்கள் வரை காலதாமதக் கட்டணம் ரூ.100/– ஆகவும், 30 நாட்களுக்குப் பின் ஓராண்டிற்குள் காலதாமதக் கட்டணம் ரூ.200/– ஆகவும், ஓராண்டிற்கு மேல் காலதாமதக் கட்டணம் ரூ.500/– ஆகவும் உள்ளது.

பெருந்தொற்றினால் பொது மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கும் இந்நேரத்தில், இந்தக் கட்டண முறையானது ஒரு சுமையை ஏற்படுத்தி வருவது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதன் அடிப்படையில், இக்கட்டணத்திலிருந்து பொதுமக்களுக்கு விலக்களிக்கவும், அந்தக் காலதாமதக் கட்டணத்தை அரசே ஏற்றுக்கொள்ளும் என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
அறிவிப்பு – 08.06.2021

அதன் அடிப்படையில், இந்த கொரோனா பெருந்தொற்று காலகட்டத்தில் உள்ளாட்சி அமைப்புகளில் / கிராமங்களில், 01.01.2020 முதல் நிகழ்ந்த பிறப்பு / இறப்பு குறித்த காலந்தாழ்வு பதிவு விண்ணப்பங்களுக்குப் பிறப்பு இறப்பு விதிகளில் வரையறுக்கப்பட்ட காலதாமத கட்டணத்தை வசூலிக்கப்படுவதிலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறது. காலதாமத கட்டண விலக்கினால் உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஏற்படக்கூடிய வருவாய் இழப்பீட்டினை உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தமிழ்நாடு அரசே ஈடுசெய்யும். இருப்பினும், உரியக் காலத்தில் பிறப்பு / இறப்பினைப் பதிவு செய்ய அனைவரின் ஒத்துழைப்பும் வேண்டப்படுகிறது.

கொரோனா பெருந்தொற்றை ஒழிக்க வேண்டும் என்பது ஒன்றே நமது இலக்காக இருக்கிறது

மாண்புமிகு
தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
22.05.2021 அன்று கொரோனா தடுப்பு நடவடிக்கை குறித்து அனைத்துச் சட்டமன்றக் கட்சி உறுப்பினர்கள் குழுக் கூட்டத்தில் ஆற்றிய உரை.

மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களே!

அரசின் அழைப்பினை ஏற்று இந்த ஆலோசனைக் கூட்டத்திற்கு வருகை புரிந்துள்ள அனைத்து சட்டமன்றக் கட்சியினைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர்களே!

தலைமைச் செயலாளர் அவர்களே!

அரசு அலுவலர்களே!

ஊடகத் துறையைச் சேர்ந்த நண்பர்களே! உங்கள் அனைவருக்கும் என் நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்!

கொரோனா என்ற பெருந்தொற்றைக் கட்டுப்படுத்தவும் – அதனால் பாதிக்கப்பட்டவர்களைக் காக்கவும் – தமிழக அரசு முழு முனைப்புடன் ஈடுபட்டு வருகிறது.

தமிழக அரசின் இத்தகைய நடவடிக்கைகளுக்கு முழு ஆதரவையும், ஆக்கப்பூர்வமான ஆலோசனைகளையும் வழங்கி வரும் அனைத்து சட்டமன்றக் கட்சி உறுப்பினர்களுக்கும் எனது சார்பிலும், தமிழக அரசின் சார்பிலும் முதலில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தப் பெருந்தொற்றை ஒழிக்க வேண்டும் என்பது ஒன்றே நமது இலக்காக இப்போது இருக்கிறது. அந்த எண்ணத்துக்கு அரசியல் மாறுபாடுகள், வேறுபாடுகள் அனைத்தையும் மறந்து நாம் அனைவரும் செயல்பட்டாக வேண்டும். அத்தகைய எண்ணம் தான் நம் அனைவருக்கும் இருக்கிறது.

கட்சி எல்லைகளைக் கடந்து நாம் இங்குக் கூடியிருக்கிறோம்.

நம் அனைவரது ஒரே நோக்கம் கொரோனா ஒழிப்பு என்பதாக மட்டும் தான் இருக்க வேண்டும்!

கடந்த 13ஆம் தேதி அன்றும் இதேபோல் அனைத்துச் சட்டமன்றக் கட்சிகள் கூட்டம் நடத்தப்பட்டது. அதில் கலந்துகொண்டு உங்கள் கருத்துகளையும் மருத்துவ ஆலோசனைக் குழுவின் கருத்துகளையும் கேட்டபிறகு ஊரடங்கு குறித்தான சில விதிமுறைகளை வகுத்து நடைமுறைக்குக் கொண்டுவந்தது தமிழக அரசு.

அந்த நடைமுறைகளில் சற்று மாற்றங்களைப் பொதுமக்களின் நலன் கருதியும் கொரோனா தொற்றைக் கட்டுப்படுத்தும் நோக்கிலும், 17.05.2021 முதல் கூடுதலாக சில கட்டுப்பாடுகளுடன் ஊரடங்கு நடைமுறையிலிருந்து வருகிறது. இது வரும் 24.05.2021 அன்று முடிவுக்கு வருகிறது.

கொரோனாவைக் கட்டுப்படுத்துவதற்கு, அதன் பரவல் சங்கிலியை உடைப்பதே முக்கியமானது. அந்தச் சங்கிலியை உடைப்பதற்காகவே முழு ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டது. இந்த முழு ஊரடங்கு குறித்த அடுத்தகட்ட முடிவுகளை எடுப்பதற்காகத்தான் இந்த ஆலோசனைக் கூட்டம் கூட்டப்பட்டுள்ளது என்பதை முதலில் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கொரோனாவைக் கட்டுப்படுத்த அரசு பல்வேறு தீவிரமான நடவடிக்கைகளை எடுத்து வருவதை நீங்கள் அறிவீர்கள். அதன் விவரங்களைச் சுருக்கமாக உங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

இதில் முக்கியமானது ஆக்சிஜன் தேவை ஆகும். ஆக்சிஜன் தேவையை முழுமையாகப் பூர்த்தி செய்வதைத் தமிழக அரசு தனது மிக முக்கிய நோக்கமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது.

- ஆக்சிஜன் தட்டுப்பாட்டைப் போக்கும் வகையில் தமிழக அரசு கேட்டுக் கொண்டதன்படி, தமிழகத்திற்கான 480 மெட்ரிக் டன் ஆக்சிஜன் ஒதுக்கீட்டினை ஒன்றிய அரசு 519 மெட்ரிக் டன்னாக உயர்த்தியுள்ளது.
- ஒடிசா மாநிலத்திலிருந்து தினந்தோறும் 100 மெட்ரிக் டன் ஆக்சிஜன் பெறப்பட்டு வருகிறது. விமானங்கள் மூலம் காலி டேங்கர்கள் அனுப்பப்பட்டு இரயில்கள் மூலம் ஆக்சிஜன் சிலிண்டர்கள் பெறப்பட்டு வருகின்றன.
- ஒடிசா மாநிலத்திலிருந்து விநியோகிக்கப்படும் ஆக்சிஜனை உரிய முறையில் பெறும் பணிகளை தமிழகத்தைச் சேர்ந்த இரண்டு இந்திய ஆட்சிப் பணி அலுவலர்கள் நியமிக்கப்பட்டு அவர்கள் ஒடிசாவிலேயே தங்கி மேற்பார்வைப் பணிகளை மேற்கொண்டு வருகிறார்கள்.
- மகாராஷ்டிரா மாநிலத்திலிருந்தும் 900 மெட்ரிக் டன் அளவிலான ஆக்சிஜன் பெறுவதற்குத் தமிழ்நாடு அரசு அம்மாநில அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளது. இது தற்போது அம்மாநில அரசின் பரிசீலனையில் உள்ளது. இதற்காகவும் தனியே ஒரு இந்திய ஆட்சிப் பணி அலுவலர் நியமிக்கப்பட்டு அவர் மகாராஷ்டிராவிலேயே தங்கி மேற்பார்வைப் பணிகளை மேற்கொள்ளவுள்ளார்.
- தமிழ்நாட்டிலேயே டிட்கோ மூலம் இதர தொழில் நிறுவனங்களுடன் கூட்டு முயற்சியில் இணைந்து ஆக்சிஜன் தயாரிக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- மனித உயிர்களைக் காக்கும் சாதனங்களை ரூ.40 கோடி செலவில் இறக்குமதி செய்ய தொழில்துறை ஏற்பாடு செய்துள்ளது. இதில், ஆக்சிஜன் செறிவூட்டிகள், ஆக்சிஜன் சிலிண்டர், ரெகுலேட்டர், ப்ளோமீட்டர்ஸ் மற்றும் ஆக்சிஜனை நிரப்பிவைக்கும் உறைநிலை சேமிப்புக் கலன்கள் (Cryogenic Iso tankers) ஆகியவை உள்ளடங்கும்.
- சிங்கப்பூரிலிருந்து 2,150 சிலிண்டர்களை வாங்குவதற்கு சிப்காட் மூலமும், 1,000 சிலிண்டர்கள் CII மூலமும் வாங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும், துபாயிலிருந்து 800, தென்கொரியாவிலிருந்து 975, மலேசியாவிலிருந்து 380 சிலிண்டர்களும் பெறுவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளன.
- ரூ.22 கோடி செலவில் 2,675 ஆக்சிஜன் செறிவூட்டிகளை சென்னை மாநகராட்சி மூலம் வாங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், சிங்கப்பூரிலிருந்து ரூ.20 கோடி செலவில் 5,000 செறிவூட்டிகளையும், லெபனானிலிருந்து 185 செறிவூட்டிகளையும் வாங்குவதற்கும் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.
- உலக வங்கியின் மூலமாக 2,000 ஆக்சிஜன் செறிவூட்டிகள் கடன் அடிப்படையில் பெற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- சிங்கப்பூர் செஞ்சிலுவைச் சங்கம் 2,000 செறிவூட்டிகளையும் உலக சுகாதார நிறுவனம் 100 செறிவூட்டிகளையும் வழங்க முன்வந்துள்ளன.
- சிங்கப்பூரிலிருந்து 2,630 ரெகுலேட்டர்கள் கொள்முதல் செய்யப்பட்டதில் 1,780 ரெகுலேட்டர்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

- சிங்கப்பூரிலிருந்து கொள்முதல் செய்ய ஆணை வழங்கப்பட்ட 3,250 ப்ளோ மீட்டர்களில், தற்போது 250 ப்ளோ மீட்டர்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.
- பல்வேறு மாவட்டங்களில் 156 மினி ஆக்சிஜன் தயாரிக்கும் கூடங்கள் அமைக்க பல்வேறு நிறுவனங்கள் முன்வந்துள்ளன.
- ரூ.23 கோடி செலவில் 12 கிரையோஜெனிக்ஸ் டேங்குகள் சீனாவிடமிருந்தும், 5 டேங்குகள் தைவானிலிருந்தும் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.
- ஆக்சிஜன் ஆப்டிமைசர் என்ற சாதனத்தின் மூலம் ஆக்சிஜன் உபயோகம் அரசு மருத்துவமனைகளில் குறைக்கப்பட்டுள்ளது.
- தமிழ்நாட்டில் ஆக்சிஜன் செறிவூட்டிகள், ஆக்சிஜன் சிலிண்டர்கள் மற்றும் ஆக்சிஜன் உற்பத்தி செய்ய முதலீடு செய்யும் நிறுவனங்களுக்கு 30 சதவிகிதம் மூலதன மானியம் வழங்க அரசு அறிவித்துள்ளது. ஜனவரி 1 முதல் ஆகஸ்ட் 31 வரை உள்ள காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட அத்தகைய நிறுவனங்களுக்கு இம்மானியம் கிடைக்கும். நவம்பர் 30க்குள் குறைந்தபட்சம் 10 மெட்ரிக் டன் அளவில் ஆக்சிஜன் தயாரிக்க முதலீடு செய்யும் நிறுவனங்களுக்கு ஐந்தாண்டுகளில் 30 சதவிகிதம் மூலதன மானியம் வழங்கப்படும். இவ்வாறு தொடங்கப்படும் நிறுவனங்களுக்குத் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் மூலம் 6 சதவிகித வட்டி மற்றும் மானியத்துடன் உடனடியாக கடனுதவி வழங்கும்.
- INOX நிறுவனம் மூலம் ஒசூரில் திரவ ஆக்சிஜன் கூடுதலாகத் தயாரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.
- சிக்கில்சால் (SICGILSOL) நிறுவனம் ரூ.100 கோடி செலவில் ராணிப்பேட்டையில் உள்ள தனது ஆக்சிஜன் தயாரிக்கும் நிறுவனத்தினை விரிவுபடுத்த உத்தேசித்துள்ளது.
- தற்போது ஒடிசாவிலிருந்து தமிழகத்திற்கு ஆக்சிஜன் பெறப்பட்டு வருகிறது. அங்கு வீசிய புயல் காரணமாகத் தொடர்ந்து ஆக்சிஜன் பெறப்படுவதில் தாமதம் ஏற்படும் நிலையில், உடனடியாக மகாராஷ்டிராவிலிருந்து ஆக்சிஜன் வழங்க வேண்டி ஒரு அவசரக் கடிதத்தை நான் மத்திய அமைச்சர் திரு. பியூஷ் கோயல் அவர்களுக்கு எழுதினேன். அக்கடிதத்தை தி.மு.க. நாடாளுமன்றக் குழுத் தலைவர் திரு. டி.ஆர்.பாலு அவர்கள் நேரில் சென்று வழங்கி, தமிழ்நாட்டிற்குக் கூடுதலாக 900 மெட்ரிக் டன் ஆக்சிஜன் ஒதுக்கீடு செய்ய வேண்டுகோள் விடுத்தார். அதனை உடனடியாக ஏற்று, மத்திய இரயில்வே துறை அமைச்சர் பியூஸ் கோயல் அவர்கள் தமிழகத்திற்குக் கூடுதல் ஒதுக்கீட்டை வழங்கிட உத்தரவாதம் அளித்துள்ளார்.

இப்படி ஆக்சிஜன் தட்டுப்பாட்டை நீக்கப் பெருமளவிலான முயற்சிகளைத் தமிழக அரசு மேற்கொண்டுள்ளது. இதன் காரணமாக அனைத்து மருத்துவமனைகளிலும் போதுமான ஆக்சிஜன் இருப்பு உள்ளதை உறுதி செய்திருக்கிறோம்.

இன்னொரு பக்கத்தில் மருத்துவ உள்கட்டமைப்புகளை உருவாக்கும் பணிகளையும் அரசு முனைப்புடன் செயல்படுத்தி வருகிறது.

இத்தகைய சூழலில் கடந்த 10ஆம் தேதி முதல் 24ஆம் தேதி வரையிலான முழு ஊரடங்கு காலம் முடிய இருக்கிறது.

கொரோனா பரவல் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதா என்று கேட்டால், குறைந்துள்ளதே தவிரக் கட்டுக்குள் இன்னும் வரவில்லை என்றே தான் சொல்ல முடியும்.

முழு ஊரடங்கு பிறப்பிக்கும் போது பொதுமக்களின் நன்மைக்காக சில தளர்வுகளை நாம் அறிவிக்கிறோம். தேவையான மளிகை, காய்கறிகளை வாங்கிக் கொள்வதற்காக மட்டுமே அந்தத் தளர்வுகளை அறிவித்தோம். ஆனால், அந்தத் தளர்வுகளைப் பயன்படுத்தி அவசியமில்லாமல் வெளியில் சுற்றுவதும் சிலருக்கு வழக்கம் ஆகிவிட்டது. இப்படி வருபவர்களை அறிவுரை சொல்லி அனுப்பி வையுங்கள் என்று காவல்துறைக்கு உத்தரவிட்டோம். அத்தகைய அன்பான அறிவுரைகளையும் சிலர் கேட்பதாகத் தெரியவில்லை.

முழு ஊரடங்கு என்பது பொதுமக்களின் நன்மைக்காகத் தான் பிறப்பிக்கப்பட்டுள்ளது. மக்களின் உயிர்களைக் காக்கவே, பாதுகாக்கவே போடப்பட்டுள்ளது. அதனை உணராதவர்களாகப் பொதுமக்களில் சிலர் இருப்பது வேதனை தருகிறது.

முழு ஊரடங்கைச் சிலர், ஏதோ விடுமுறைக் காலம் என்பதாக நினைத்து ஊர் சுற்றி வருகிறார்கள். இது விடுமுறைக் காலம் அல்ல, கொரோனா காலம் என்பதை உணராமல் இன்னமும் சிலர் இருக்கிறார்கள்.

'கொரோனாவை வாங்கிக் கொள்ளவும் மாட்டேன் – கொரோனாவை அடுத்தவருக்குக் கொடுக்கவும் மாட்டேன்' என்று பொதுமக்கள் உறுதி எடுத்துக் கொண்டால் மட்டும் தான் இந்த நோய்த் தொற்றுக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியும்.

இதனை உணர்த்துவதற்காகத் தான் பல்வேறு திரையுலகக் கலைஞர்களை வைத்து விழிப்புணர்வு வீடியோக்களைத் தயாரித்து பொதுமக்களுக்குச் சொல்லி வருகிறோம்.

கொரோனா குறித்த பயம், பொதுமக்களின் பேச்சில் தெரிகிறது. ஆனால், அது செயலில் தெரிய வேண்டும். அத்தகைய எச்சரிக்கை உணர்வை இன்னமும் பொதுமக்களிடம் விதைத்தாக வேண்டும்.

கடந்த ஓராண்டுக் காலத்தில் விலைமதிப்பில்லாத மனித உயிர்களை இழந்துள்ளோம். இதனால் எத்தனையோ குடும்பங்களின் எதிர்காலம் கேள்விக்குறியாக ஆகி உள்ளது. இத்தகைய இழப்புகளுக்கு விரைவில் முற்றுப்புள்ளி வைத்தாக வேண்டும்.

கடந்த ஓராண்டுக் காலத்தில் நம்முடைய மருத்துவர்கள், செவிலியர்கள், முன்களப் பணியாளர்கள் அடைந்துள்ள துன்ப துயரங்கள் அளவில்லாதது. ஏராளமான மருத்துவர்களை நாம் இழந்துள்ளோம். மருத்துவத்துறையே மிகப்பெரிய மனரீதியான நெருக்கடிக்கு உள்ளாகி இருக்கிறது. தங்களது உயிரைப் பற்றிக் கவலைப்படாமல் அவர்கள் பணியாற்றி வருகிறார்கள். அவர்களுக்கு இதற்கு மேலும் சுமையை, அழுத்தத்தைக் கொடுக்க முடியாது.

கொரோனா காரணமான மிகப்பெரிய நெருக்கடிக்கு உள்ளாகி இருப்பவர்கள் பள்ளி – கல்லூரி மாணவ, மாணவியர்கள். அவர்களுக்கு விடுமுறை என்பது மகிழ்ச்சிக்குரிய காலமாக இருந்தது, இப்போது மிகப் பெரிய துன்பம் தருவதாக மாறிவிட்டது. மன அழுத்தம் கொண்டவர்களாக அவர்கள் மாறிவிடக் கூடும். இன்னும் எத்தனை மாதங்கள் பள்ளி, கல்லூரிகளை மூடி வைத்திருக்க முடியும்? அவர்களுக்கு விரைவில் கல்வியையும் எதிர் காலத்தையும் உருவாக்கித் தந்தாக வேண்டும்.

இவற்றை எல்லாம் கருத்தில்கொண்டு, இங்கு வருவதற்கு முன்பாக, நோய்ப் பரவலைக் கட்டுப்படுத்த மருத்துவ நிபுணர்களுடன் ஆலோசனைக் கூட்டத்தை நடத்தினேன். அதில் அவர்களது ஒருமித்த கருத்தாக, தளர்வுகளற்ற ஊரடங்கினை முழுமையாக, தீவிரமாக அமல்படுத்தினால் மட்டுமே, நோய்ப் பரவலைக் கட்டுப்படுத்த இயலும் என்று ஆலோசனை வழங்கினார்கள். மாவட்டங்களில் நான் மேற்கொண்ட பயணங்களின் போதும், இதே கருத்து பரவலாக என்னிடம் தெரிவிக்கப்பட்டது.

எனவே, மேற்படி சூழ்நிலையில், தளர்வுகளற்ற முழு ஊரடங்கை அமல்படுத்துவது குறித்த முடிவினை அரசு எடுக்க வேண்டியுள்ளது. நோய்த் தொற்றுப் பரவல் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் குறித்து ஏற்கெனவே உங்கள் அனைவரது ஆலோசனைகளையும் பெற்று, நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

எனவே, தற்போதைய நிலையில், காலத்தின் அருமை கருதி, வருகை புரிந்திருக்கும் மாண்புமிகு உறுப்பினர்கள், ஊரடங்கு குறித்த தங்களது மேலான கருத்துகளை மட்டும் குறிப்பாகத் தெரிவிக்க அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

முன்னாள் பிரதமர் திரு. ராஜீவ்காந்தி வழக்கில் சிறையில் உள்ள ஏழு பேரையும் விடுதலை செய்ய ஆணை பிறப்பிக்க வேண்டும்

மாண்புமிகு குடியரசுத் தலைவர் திரு. **ராம்நாத் கோவிந்த்** அவர்களுக்கு,

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் எழுதிய கடிதம் – 19.05.2021

முன்னாள் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி வழக்கில் தண்டிக்கப்பட்டு 30 வருடங்களுக்கும் மேலாகச் சிறையில் வாடும் பேரறிவாளன், முருகன், சாந்தன், ஜெயக்குமார், ராபர்ட் பயாஸ், பி.ரவிச்சந்திரன், எஸ்.நளினி ஆகிய ஏழு பேரையும் விடுதலை செய்ய வேண்டும் என்று தமிழக அமைச்சரவை 09.09.2018 அன்று தீர்மானம் நிறைவேற்றி மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்களுக்கு அனுப்பியுள்ளதையும், “அந்த அமைச்சரவை தீர்மானத்தின் மீது முடிவு எடுக்கும் அதிகாரம் குடியரசுத் தலைவர் அவர்களுக்குத்தான் இருக்கிறது எனக் கூறி, தமிழக ஆளுநர் அவர்கள் குடியரசுத் தலைவர் அவர்களுக்குத் தமிழ்நாடு அரசின் அமைச்சரவைத் தீர்மானத்தை அனுப்பி வைத்திருப்பதையும்” சுட்டிக்காட்டி 19.05.2021 அன்று மாண்புமிகு குடியரசுத் தலைவர் அவர்களுக்குக் கடிதம் எழுதியுள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், “மேற்கண்ட ஏழு பேரும் 30 வருடத்திற்கும் மேலாகச் சிறையில் வாடுகிறார்கள். உச்சநீதிமன்றமே கொரோனா தொற்றின் பரவலைத் தடுக்க சிறைச்சாலைகளில் உள்ள கூட்ட நெருக்கடியை நீக்கும் பொருட்டு கைதிகளை விடுதலை செய்ய அறிவுறுத்தியுள்ளது எனத் தெரிவித்து, ஏழு பேரையும் விடுதலை செய்ய 09.09.2018 அன்று தமிழ்நாடு அமைச்சரவை நிறைவேற்றி அனுப்பியுள்ள தீர்மானத்தை உடனடியாக ஏற்றுக் கொண்டு ஆணை பிறப்பிக்க வேண்டும்” என்று வலியுறுத்தியுள்ளார்.

மாநில அரசுகள் கொள்முதல் செய்யும் கொரோனா தடுப்பூசிகள் மற்றும் மருந்துகளுக்கு ஜி.எஸ்.டி. வரியைப் பூஜ்ய சதவிகிதம் என நிர்ணயிக்க வேண்டும்

மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. **நரேந்திர மோடி** அவர்களுக்கு
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் எழுதிய கடிதம் – 13.05.2021

கோவிட் தொற்றால் அனைத்து மாநிலங்களும் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், இத்தொற்றைக் கட்டுப்படுத்தத் தேவையான தடுப்பூசிகளையும், நோயாளிகளுக்குச் சிகிச்சை அளிக்கத் தேவையான மருந்துகளையும் மாநில அரசுகள் கொள்முதல் செய்து வருகின்றன. இதனைக் கருத்தில்கொண்டு, ஜி.எஸ்.டி. கவுன்சிலோடு கலந்தாலோசித்து, இந்தப் பொருட்கள் மீதான ஜி.எஸ்.டி. வரியைக் குறிப்பிட்ட காலத்திற்குப் பூஜ்ய சதவிகிதம் (Zero rate) என நிர்ணயிக்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களைக் கேட்டுக் கொண்டுள்ளார்கள்.

பொருளாதார வளர்ச்சி கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டு, மாநில அரசுகளின் வரி வருவாய் வளர்ச்சி பெருமளவில் குறைந்துள்ளதால், அதனை ஈடுசெய்ய கீழ்க்குறிப்பிட்டுள்ள மூன்று நடவடிக்கைகளை ஒன்றிய அரசு மேற்கொண்டு மாநில அரசுகளுக்கு உதவ வேண்டும் என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கோரியுள்ளார்கள்.

★ நிலுவையிலுள்ள ஜி.எஸ்.டி. இழப்பீட்டுத் தொகைகளையும், மாநில நுகர்பொருள் கழகங்களுக்கு வழங்கப்பட வேண்டியுள்ள அரிசி மானியத் தொகையையும் உடனடியாக விடுவிக்க வேண்டும்.

★ பெட்ரோல் மற்றும் டீசல் மீதான கூடுதல் மேல்வரி விதிப்பால் மத்திய அரசுக்குக் கிடைத்துள்ள வருவாய் மாநில அரசுகளுக்குப் பகிர்ந்தளிக்கப்படாத நிலையில், கொரோனா தொற்றால் மாநில அரசுகளுக்கு ஏற்பட்டுள்ள நிதி இழப்பீட்டை ஈடுசெய்யச் சிறப்பு நிதி உதவி (Adhoc Grants-in-aid) அளிக்கப்பட வேண்டும்.

★ இக்காலத்தில் ஏற்பட்டுள்ள கூடுதல் செலவினங்களை மேற்கொள்ளத் தேவைப்படும் நிதியைத் திரட்டுவதற்காக, அனுமதிக்கப்பட்டுள்ள கடன் வாங்கும் அளவை, மாநிலத்தின் உற்பத்தி மதிப்பில் மூன்று சதவிகிதம் என்ற அளவிலிருந்து மேலும் ஒரு சதவிகிதம் உயர்த்த வேண்டும்.

நாம் அனைவரும் ஒன்றுபட்டு, ஒரே குறிக்கோளோடு செயல்பட்டு, மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி, கொரோனா பெருந்தொற்றினை முறியடிப்போம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களின் தலைமையில், 16.05.2021 அன்று தலைமைச் செயலகத்தில் கொரோனா விழிப்புணர்வு குறித்து அனைத்துக் காட்சி ஊடகத்தினருடன் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

தமிழகத்தில் கொரோனா விழிப்புணர்வு குறித்து அனைத்துக் காட்சி ஊடகத்தினருடனான ஆலோசனைக் கூட்டம், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில், 16.05.2021 அன்று மாலை 5.00 மணியளவில், தலைமைச் செயலகம், நாமக்கல் கவிஞர் மாளிகை, 10ஆவது தளத்தில் உள்ள கூட்ட அரங்கில் நடைபெற்றது.

மாண்புமிகு முதலமைச்சர் தனது உரையில், கொரோனா நோய்த் தொற்று நடவடிக்கையில், முன்களப் பணியாளர்களாக விளங்கும் ஊடகவியலாளர்களின் பங்களிப்பின் அவசியத்தை எடுத்துரைத்து, தங்களது ஒத்துழைப்பை நல்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

பின்னர், ஆட்சிப் பொறுப்பேற்ற நாள் முதல் கொரோனாவைக் கட்டுப்படுத்த தமது அரசு மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள் குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஊடகவியலாளர்களுக்கு விளக்கிக் கூறினார். அவற்றில் முக்கியமாக, உலகளாவிய ஒப்பந்தம் மூலம் 3.5 கோடி தடுப்பூசிகளைத் தமிழக அரசு வாங்கவிருப்பதாகத் தெரிவித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், நெதர்லாந்திலுள்ள ஆம்ஸ்டர்டாம் நகரிலிருந்து விமானப் படை விமானங்கள் வாயிலாகத் திரவ ஆக்சிஜன் கொண்டுவரப்பட்டுள்ளதாகவும், சிங்கப்பூரிலிருந்து 1,900 காலி சிலிண்டர்கள் வாங்குவதற்கு சிப்காட் மூலமாக ஆர்டர் போடப்பட்டு, விமானம் மூலம் சென்னைக்கு வந்த 500 சிலிண்டர்கள் ஆக்சிஜன் நிரப்பும் மையங்களுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

கொரோனா நோய்த் தடுப்பு நடவடிக்கைகளில் தமிழக அரசு முனைப்பாக ஈடுபட்டாலும், மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி, அதனைச் சரியாக அவர்களிடம் கொண்டுபோய் சேர்ப்பதில் ஊடகங்களின் ஒத்துழைப்பு மிகவும் முக்கியம் எனத் தெரிவித்தார். எனவே, அந்த வகையில், மக்களின் நன்மைக்காக, மக்களின் உயிர் காக்கும் விஷயத்தில் தமிழக அரசு எடுத்துவரும் நடவடிக்கைகளை, முயற்சிகளை ஊடகங்கள் முழுமையாக வெளியிடுவதோடு, மிகுந்த எச்சரிக்கையுடன் செய்திகளை வெளியிட வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

ஊடகவியலாளர்கள் அரசுக்கு ஆக்கப்பூர்வமான ஆலோசனைகளை வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொண்ட மாண்புமிகு முதல்வர் அவர்கள், அரசு சார்பில் வெளியிடப்பட்டுள்ள பல்வேறு விழிப்புணர்வு வாசகங்களை தங்களது ஊடகங்கள் மூலம் வெளியிட்டு, மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

பின்னர், வருகை புரிந்திருந்த ஊடகவியலாளர்களின் கருத்துகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்டறிந்தார்.

மக்களின் நல்வாழ்வில்தான் நாட்டின் எதிர்காலம் அடங்கியிருப்பதால், நாம் அனைவரும் ஒன்றுபட்டு, ஒரே குறிக்கோளோடு செயல்பட்டு, மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி, கொரோனா பெருந்தொற்றினை முறியடிப்போம் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நம்பிக்கை தெரிவித்தார்.

கூட்டத்திற்கு வருகை புரிந்தோரைத் தலைமைச் செயலாளர் திரு. வெ. இறையன்பு, இ.ஆ.ப., அவர்கள் வரவேற்றுப் பேசினார்.

கூட்டத்தின் இறுதியில், மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், செய்தித் துறை அமைச்சர் அவர்கள் நன்றியுரை நிகழ்த்தினார்.

படமும்/செய்தியும்

கண்ணியத் தென்றல் காயிதே மில்லத் அவர்களின் 126ஆவது பிறந்தநாள் விழா

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 05.06.2021 அன்று கண்ணியத் தென்றல் காயிதே மில்லத் அவர்களின் 126ஆவது பிறந்தநாளை முன்னிட்டு தமிழ்நாடு அரசின் சார்பில் சென்னை, திருவல்லிக்கேணி, வாலாஜா பெரிய பள்ளிவாசல் வளாகத்தில் அமைந்துள்ள அன்னாரின் நினைவிடத்தில் மலர் போர்வை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வின்போது, மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

இணையவழி வகுப்புகளில் முறையற்ற வகையில் நடந்துகொள்வோர் மீது “போக்சோ” சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும்

பள்ளி, கல்லூரிகளில் ஆன்லைன் வகுப்புகள் முறையாக நடைபெறுவதைக் கண்காணிப்பது குறித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தலைமையில் 26.05.2021 அன்று தலைமைச் செயலகத்தில் ஆலோசனைக் கூட்டம்.

கொரோனா பெருந்தொற்று காரணமாகத் தமிழ்நாடு மட்டுமின்றி இந்தியா முழுவதும் கல்வி நிறுவனங்கள் மூடப்பட்டு வகுப்புகள் இணைய வழியாக (online) கடந்த சுமார் ஓராண்டாக எடுக்கப்பட்டு வருகிறது. இந்த வகுப்புகளின் செயல்பாடுகள் குறித்து சமீபத்தில் வரப்பெற்ற சில செய்திகளின் தன்மையைக் கருத்தில் கொண்டு இணைய வழி வகுப்புகளை முறைப்படுத்துவது குறித்தும் அதில் தவறுகள் நடக்கும் பட்சத்தில் அதன் மீது உடனடி நடவடிக்கை எடுக்கவும் ஆலோசனை செய்வதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் 26.05.2021 அன்று தலைமைச் செயலகத்தில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

சமீபத்தில் இணைய வகுப்பு ஒன்றில் நடைபெற்ற சில விரும்பத்தகாத நிகழ்வுகள் குறித்தும் அதன் மீது மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கை குறித்தும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆய்வு செய்தார்கள். இதுபோன்ற சம்பவங்கள் மீண்டும் நடைபெறக் கூடாது என்றும் சட்டப்பூர்வமான நடவடிக்கை சம்பந்தப்பட்டவர்கள் மீது எடுக்கப்படும் என்றும் மற்ற பள்ளி, கல்லூரிகளில் இதுபோன்ற நிகழ்வுகள் நடக்காமல் இருப்பதற்குப் பின்வரும் முடிவுகளையும், உத்தரவுகளையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

- ☐ இணைய வழியாக நடத்தப்படும் வகுப்புகள் அந்தந்த பள்ளியினால் பதிவு (record) செய்யப்பட வேண்டும் என்றும் இப்பதிவினை சம்பந்தப்பட்ட பள்ளி நிருவாகம் மற்றும் பெற்றோர் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் இருவரைக் கொண்ட குழுவால் அவ்வப்போது ஆய்வு செய்யப்பட வேண்டுமென்றும்;
- ☐ இணைய வழி வகுப்புகள் நடத்துவது தொடர்பாக முறையான வழிகாட்டுதல்களை வகுத்து வெளியிடப் பள்ளிக் கல்வித் துறை ஆணையர், கல்லூரி கல்வி

இயக்குநர், கணினி குற்றத் தடுப்பு பிரிவு மற்றும் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் தொடர்பான காவல் அலுவலர்கள், கல்வியாளர்கள் மற்றும் உளவியல் நிபுணர்கள் கொண்ட ஒரு குழு அமைக்கப்படும் என்றும், அக்குழு, மாநிலத்திலுள்ள பள்ளிகள் மற்றும் கல்வி நிறுவனங்களில் பாலியல் தொல்லைகள் தரப்படுவதைத் தடுப்பதற்கு உரிய வழிமுறைகளைப் பரிந்துரைக்கவும் இணையவழி வகுப்புகளை நெறிப்படுத்துவது குறித்தும் வழிகாட்டு நெறிமுறையினை ஒரு வாரக் காலத்திற்குள் சமர்ப்பிக்க வேண்டுமென்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

- இணைய வகுப்புகளில் முறையற்ற வகையில் நடந்துகொள்வோர் மீது “போக்சோ” சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் மாணவ, மாணவிகள் தங்கள் புகார்களைத் தெரிவிக்க ஒரு Helpline எண் உருவாக்கவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.
- மேலும், இணைய வகுப்புகள் குறித்து வரும் புகார்களை மாநிலத்தின் கணினி குற்றத் தடுப்புக் (Cyber Crime) காவல் பிரிவில் காவல் கண்காணிப்பாளர் நிலையில் உள்ள அலுவலர் உடனடியாகப் பெற்று சம்பந்தப்பட்ட மாணவ, மாணவிகளுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாத வகையில் விசாரித்து துரிதமான நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமெனவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்கள்.

தமிழகத்தின் கடல் மீனவ குடும்பங்களுக்கு மீன்பிடித் தடைக்கால நிவாரணத் தொகை ரூ.5,000 வழங்கிட முதல்வர் அவர்கள் ஆணை

கடல் மீன் வளத்தைப் பேணிக்காத்திட, தமிழ்நாட்டில் ஒவ்வொரு ஆண்டும் கிழக்குக் கடற்கரை பகுதியில் ஏப்ரல் 15ஆம் நாளன்று தொடங்கி ஜூன் 14ஆம் நாள் வரையிலும், மேற்கு கடற்கரை பகுதியில் ஜூன் 1ஆம் நாளன்று தொடங்கி ஜூலை 31ஆம் நாள் வரையிலும் 61 நாட்களுக்கு மீன்பிடி தடைக்காலம் அமல்படுத்தப்பட்டு வருகிறது.

மீன்பிடித் தடைக்காலத்தின் போது மீன்பிடி விசைப்படகுகள்/ இழுவலைப் படகுகளில் மீன்பிடிப்பு செய்யும் பணியாளர்கள் மற்றும் முழுநேர மீன்பிடிப்பினை சார்ந்த மீனவ குடும்பங்கள் முற்றிலுமாக தொழிலின்றி வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதால் மீனவர்கள் தங்களது குடும்பத்தினை சிரமமின்றி நடத்திச் செல்ல 2008ஆம் ஆண்டு முதல் மீன்பிடி தடைக்கால நிவாரணம் வழங்கப்படுகிறது.

தமிழக முதல்வர் அவர்களின் உத்தரவின்படி நடப்பாண்டிற்கு (2021ஆம் ஆண்டு) 1.72 இலட்சம் கடல் மீனவ குடும்பங்களுக்கு மீன்பிடித் தடைக்கால நிவாரணத் தொகை தலா ரூ.5,000/– வீதம் வழங்கிடும் பொருட்டு ரூ.86 கோடி நிதி ஒப்பளிப்பு வழங்கி அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

கிழக்கு கடற்கரை பகுதி மாவட்டங்களான திருவள்ளூர், சென்னை, காஞ்சிபுரம், விழுப்புரம், கடலூர், நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி (பகுதி) ஆகியவற்றைச் சேர்ந்த 1,46,598 பயனாளிகளும், மேற்கு கடற்கரைப் பகுதி மாவட்டமான கன்னியாகுமரியைச் சேர்ந்த 25,402 பயனாளிகளும் ஆக மொத்தம் 1,72,000 பயனாளிகள் இத்திட்டத்தின் மூலம் பயனடைவார்கள்.

மீன்பிடித் தடைக்கால நிவாரணத் தொகையானது மீனவர்களின் வங்கிக் கணக்குகளுக்கு நேரடியாக வரவு வைக்கப்படும் என மாண்புமிகு மீன்வளம் – மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் அவர்கள் தெரிவித்தார்.

கொரோனா சிகிச்சைப் பணியில் உயிரிழந்த மருத்துவர்களின் குடும்பங்களுக்கு இழப்பீடு, கொரோனா இரண்டாம் அலையில் பணியாற்றிவரும் மருத்துவப் பணியாளர்களுக்கு ஊக்கத் தொகை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு - 12.05.2021

கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ள நோயாளிகளுக்கு உரியச் சிகிச்சை அளித்து அவர்களைக் காப்பாற்றும் அரும்பணியில், கடந்த ஓராண்டாக மருத்துவர்களும், செவிலியர்களும் இதரப் பணியாளர்களும் அயராது அரும் பணியாற்றி வருகின்றனர். இப்பணியில் தமது உயிரைத் துச்சமென மதித்து களப்பணியாற்றிய சில மருத்துவர்கள் தமது இன்னுயிரையும் தியாகம் செய்துள்ளனர். இது ஈடுசெய்யப்பட முடியாத பெரும் தியாகம் என்பதை உணர்ந்துள்ள இந்த அரசு, அவர்தாம் குடும்பத்தாருக்கு ஆறுதல் அளிக்கும் வகையில், கொரோனா சிகிச்சைப் பணியாற்றியபோது அத்தொற்றால் பாதிக்கப்பட்டு உயிரிழந்த 43 மருத்துவர்களின் குடும்பங்களுக்கு தலா 25 இலட்சம் ரூபாய் தொகையை இழப்பீடாக வழங்கிட முடிவு செய்துள்ளது.

மேலும், அல்லும் பகலும் நமது அரசு மருத்துவமனைகளில் பணியாற்றிவரும் மருத்துவர்கள், செவிலியர்கள், தூய்மைப் பணியாளர்கள், ஆய்வுக்கூடப் பணியாளர்கள், சி.டி. ஸ்கேன் பணியாளர்கள், அவசர மருத்துவ ஊர்திப் பணியாளர்கள் உள்ளிட்ட அனைத்துப் பணியாளர்களின் சேவையைப் பாராட்டும் வகையில், கொரோனா தொற்றுக்கான சிகிச்சை மற்றும் அச்சிகிச்சை சார்ந்த பணிகளில் ஈடுபட்ட மேற்கூறிய அலுவலர்களுக்கு ஊக்கத் தொகை வழங்கவும் இந்த அரசு முடிவு செய்துள்ளது. இதன்படி கொரோனா தொற்றின் இரண்டாம் அலைக் காலமான, ஏப்ரல், மே, ஜூன் ஆகிய மூன்று மாத காலத்திற்கு, மருத்துவர்களுக்கு 30 ஆயிரம் ரூபாயும், செவிலியர்களுக்கு 20 ஆயிரம் ரூபாயும், இதரப் பணியாளர்களுக்கு 15 ஆயிரம் ரூபாயும், பட்ட மேற்படிப்பு மருத்துவர்கள் மற்றும் பயிற்சி மருத்துவர்களுக்கு 20 ஆயிரம் ரூபாயும் ஊக்கத் தொகையாக வழங்கப்படும்.

கொரோனா நோய்த்தொற்றைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகள் குறித்து ஆலோசனைகள் வழங்க, சட்டமன்ற கட்சிகளைச் சார்ந்த உறுப்பினர்களைக் கொண்ட ஆலோசனைக் குழு

தமிழ்நாட்டில் கொரோனா நோய்த்தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்த மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் அனைத்து சட்டமன்ற கட்சித் தலைவர்கள் கூட்டம் 13.05.2021 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது. அக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் ஒன்றாகப் பின்வரும் தீர்மானம் (தீர்மானம் எண்.4) நிறைவேற்றப்பட்டது.

“நோய்த்தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகள் குறித்த ஆலோசனைகளை வழங்க, சட்டமன்ற கட்சிகளைச் சார்ந்த உறுப்பினர்களைக் கொண்ட ஒரு ஆலோசனைக் குழு அமைக்கலாம் எனத் தீர்மானிக்கப்பட்டது”

மேலே தெரிவிக்கப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில், அனைத்து சட்டமன்ற கட்சிகளின் தலைவர்களுடன் ஆலோசனை மேற்கொள்ளப்பட்டு, அவர்களிடமிருந்து பெறப்பட்ட பரிந்துரையின் அடிப்படையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் பின்வரும் சட்டமன்ற உறுப்பினர்களைக் கொண்ட ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டது.

ஆலோசனைக் குழு உறுப்பினர்கள்

வ. எண்.	தமிழகச் சட்டமன்ற அரசியல் கட்சி	சட்டமன்ற உறுப்பினர் பெயர்
1.	திராவிட முன்னேற்றக் கழகம்	மருத்துவர் நா.எழிலன்
2.	அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்	மருத்துவர் சி. விஜய பாஸ்கர்
3.	இந்திய தேசிய காங்கிரஸ்	திரு. ஏ.எம். முனிரத்தினம்
4.	பாட்டாளி மக்கள் கட்சி	திரு. ஜி.கே. மணி
5.	பாரதிய ஜனதா கட்சி	திரு. நயினார் நாகேந்திரன்
6.	மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம்	மருத்துவர் தி. சதன் திருமலைக்குமார்
7.	விடுதலை சிறுத்தைகள் கட்சி	திரு. எஸ்.எஸ். பாலாஜி
8.	இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்)	திரு. வி.பி. நாகை மாலி
9	இந்திய கம்யூனிஸ்ட் கட்சி	திரு. தி. ராமச்சந்திரன்
10.	மனித நேய மக்கள் கட்சி	முனைவர் ஜவாஹிருல்லா
11.	கொங்கு நாடு மக்கள் தேசிய கட்சி	திரு. ரா.ஈஸ்வரன்
12.	தமிழக வாழ்வுரிமை கட்சி	திரு. தி.வேல்முருகன்
13.	புரட்சி பாரதம்	பூவை திரு. ஜெகன் மூர்த்தி

மேற்படி ஆலோசனைக் குழுவானது அவசர அவசியம் கருதி நோய்த் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்தும் வழிமுறைகள் குறித்து ஆலோசனைகள் பெற அவ்வப்போது கூடி விவாதிக்கும். இக்குழுவிற்கு பொதுத்துறை செயலாளர் உறுப்பினர் செயலராகச் செயல்படுவார்.

மாணவர்கள் நலன் கருதி இந்த ஆண்டு பன்னிரண்டாம் வகுப்பு பொதுத் தேர்வுகள் இரத்து செய்யப்படுகிறது

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் அறிவிப்பு – 05.06.2021

நாடு முழுவதும் கொரோனா பெருந்தொற்று இரண்டாம் அலையின் காரணமாகப் பல்லாயிரக் கணக்கான பொதுமக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். தமிழ்நாடு அரசு போர்க்கால அடிப்படையில் இப்பெருந்தொற்றிலிருந்து மக்களைப் பாதுகாக்க அனைத்து நடவடிக்கைகளையும் செவ்வனே செய்து, அதில் வெற்றியும் பெற்று வருகிறது. இந்நிலையில், பன்னிரண்டாம் வகுப்பு பொதுத் தேர்வுகளை எழுதவிருக்கும் மாணவர்களின் கல்வியிலும், பாதுகாப்பிலும் மிகுந்த அக்கறை கொண்ட தமிழ்நாடு அரசு, பொதுத் தேர்வுகள் தொடர்பாக பல்வேறு தரப்பினரையும் கலந்து ஆலோசித்துத் தகுந்த நடவடிக்கைகளை எடுத்து இருக்கிறது.

இப்பெருந்தொற்றின் தாக்கம் காரணமாக, ஒன்றிய அரசு மத்திய இடைநிலைக் கல்வி வாரியம் மூலம் (CBSE) பன்னிரண்டாம் வகுப்பு மாணவர்களுக்கு இந்த ஆண்டு நடக்கவிருந்த பொதுத்தேர்வை ஏற்கெனவே இரத்து செய்துள்ளது. பல்வேறு மாநிலங்களும் இதே காரணத்திற்காக, தத்தமது மாநில பன்னிரண்டாம் வகுப்பு பொதுத் தேர்வுகளை இரத்து செய்துள்ளன.

இப்பொதுத் தேர்வுகளை நடத்துவது குறித்து, கடந்த மூன்று தினங்களாக பள்ளியளவில் தொடங்கி, மாவட்டம் மற்றும் மாநில அளவில் மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், ஆசிரியர் சங்கங்கள், கல்வியாளர்கள், பல்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள், ஊடகவியலாளர்கள், பொதுச் சுகாதாரம் மற்றும் உளவியல் நிபுணர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரிடமும் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் தலைமையில் கருத்துக்கள் கவனமுடன் கேட்டறியப்பட்டன.

பல்வேறு தரப்பினரும் பொதுத் தேர்வு நடத்துவது குறித்து ஆதரவாகவும், மறுத்தும் கருத்துக்களைத் தெரிவித்திருந்தாலும், அனைத்துத் தரப்பினரும் மாணவர்களின் உடல் மற்றும் மன நலன் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற கருத்தில் உறுதியாக உள்ளனர்.

கொரோனா பெருந்தொற்றின் இரண்டாம் அலை, மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் இன்னும் தீவிரமாக இருந்து வருகிறது, இதைத் தொடர்ந்து மூன்றாவது அலையும் வர வாய்ப்புள்ளது என்று மருத்துவ வல்லுநர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். மேலும், தற்போதுள்ள விதிகளின்படி, 18 வயதுக்கு மேற்பட்ட நபர்களுக்கு மட்டுமே தடுப்பூசி செலுத்த இயலும் என்ற நடைமுறை இருப்பதால் அவ்வயதுக்குக் குறைவான, தடுப்பூசி போடப்படாத மாணவர்களை தேர்வு எழுத ஒரே நேரத்தில் வரச்செய்வது, தொற்றினை அதிகரிக்கச் செய்யலாம் என்றும் வல்லுநர்கள் அறிவுரைகளை வழங்கியுள்ளனர்.

மாநில கல்வித் திட்டத்தின் கீழ் நடத்தப்படும் பன்னிரண்டாம் வகுப்பு பொதுத் தேர்வுகள் மட்டுமே உயர்கல்வி வாய்ப்புகளுக்கான தகுதியாகக் கருதப்பட வேண்டும் என்ற கொள்கை நிலைப்பாட்டில் இந்த அரசு உறுதியாக இருப்பினும், தேர்வினை மேலும் தள்ளிவைப்பது, மாணவர்களை மனதளவில் பாதிப்பிற்கு உள்ளாக்கும் என்று மருத்துவர்கள் கருதுவதால், அவர்களது அறிவுரை மற்றும் பல்வேறு தரப்பிலிருந்தும் வரப்பெற்ற ஆலோசனைகளின் அடிப்படையில், பன்னிரண்டாம் வகுப்பு பொதுத் தேர்வு இந்த ஆண்டு இரத்து செய்யப்படுகிறது. இந்நிலையில் மாணவர்களுக்கு எவ்வாறு மதிப்பெண் வழங்குவது என்பதனை முடிவு செய்ய, பள்ளிக் கல்வித் துறை முதன்மைச் செயலாளர் அவர்கள் தலைமையில், உயர்கல்வித் துறை செயலாளர், சென்னை பல்கலைக்கழக துணைவேந்தர், பள்ளித் தலைமை ஆசிரியர்கள் ஆகியோர் கொண்ட ஒரு குழு அமைக்கப்படும்.

இக்குழு மாணவர்களுக்கு எவ்வாறு மதிப்பெண் வழங்குவது என்பது குறித்து ஆய்வு செய்து, விரைவில் அரசுக்கு அறிக்கை சமர்ப்பிக்கும். இக்குழு சமர்ப்பிக்கும் அறிக்கையின் அடிப்படையில், பன்னிரண்டாம் வகுப்பு மாணவர்களுக்கு இறுதித் தேர்வு மதிப்பெண் வழங்கப்படும். அவ்வாறு வழங்கப்படும் மதிப்பெண்களைக் கொண்டு மட்டுமே, தமிழகத்திலுள்ள அனைத்து உயர்கல்வி நிறுவனங்களிலும் சேர்க்கை நடைபெறும்.

பெருந்தொற்றின் காரணமாக, தமிழ்நாட்டில் பொதுத் தேர்வுகள் முழுவதுமாக இரத்து செய்யப்பட்ட நிலையில், அகில இந்திய அளவில் நடத்தப்படும் “நீட்” போன்ற நுழைவுத் தேர்வுகளை நடத்துவது உகந்ததாக இருக்காது என்று தமிழ்நாடு அரசு கருதுகிறது. இது குறித்த அறிவிப்புகள் இதுவரை எதுவும் வெளிவராத நிலையில், உயர்கல்விக்காக நடத்தப்படும் பல்வேறு நுழைவுத் தேர்வுகளையும் இரத்து செய்ய வலியுறுத்தி, மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு.நரேந்திர மோடி அவர்களுக்குக் கடிதம் எழுதியுள்ளேன். கொரோனா பெருந்தொற்றுக் காலத்தில், மாணவர்களின் உடல் நலன் மற்றும் மனநலனைக் கருத்தில் கொண்டு மட்டுமே இந்த முடிவு எடுக்கப்பட்டாலும், மாநில கல்வித் திட்ட அடிப்படையில், உயர்கல்வி சேர்க்கை எந்தவிதத்திலும் பாதிக்கப்படாமல் இருப்பதைத் தமிழக அரசு உறுதி செய்யும்.

இகல் வெல்வோம் !

கொட்டுகின்ற மழையில் – வானை
வெட்டுகின்ற மின்னலில்

செவி பிளக்கும் இடி முழக்கத்தில்
சீறியடிக்கும் புயல் காற்றில்
சின்னதோர் அகல் விளக்கைக் கையில் ஏந்தி
புன்னகை மலரப் பயணம் தொடங்கினாய் !

எந்தப் பாதையில் ?
செங்குத்தான பாறை மீது !
சரளைக் கற்களைக் கொண்ட வழியில் !

அந்த விளக்கு அணையாமல்
எங்கள் கரத்தில் கொடுத்தாய் ; ஆம் !
தொடர்ந்து நடந்து தொய்வில்லாமல் சென்று
எதிர்ப்புகளுக்கிடையே அகல் விளக்கை
அணையாமல் கொண்டுபோய்
இலட்சிய முகட்டில் வைப்போம்
என்ற நம்பிக்கையுடன்
தம்பிகள் கையில் தந்தாய் !

விளக்கை அணைக்கத் துடிக்கும் காற்றை
விலக்கி நடக்கிறோம் வெற்றிப்பாதையில் !

அகல் விளக்கின் சுடரில்
அண்ணா உன் அருள் முகத்தைக் கண்டு

இகல் வெல்வோம் ; இதனை
இந்த நாள் சபதமாக ஏற்போம் !

– முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர்

கன்னியாகுமரி மாவட்டத்தில் கனமழையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக நிவாரணம் வழங்க உத்தரவு

வடக்கு அந்தமான் கடல் மற்றும் கிழக்கு மத்திய வங்கக் கடலில் 22.05.2021 அன்று, யாஸ் புயல் உருவாகும் என்று இந்திய வானிலை ஆய்வு மையத்தால் 19.05.2021 அன்று வெளியிடப்பட்டுள்ள சிறப்பு வானிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, யாஸ் புயலின் தாக்கத்தை எதிர்கொள்ள, மாவட்ட நிருவாகத்தைத் தயார் நிலையில் வைத்திருக்கவும், பாதிப்பிற்குள்ளாகும் என்று கண்டறியப்பட்டுள்ள பகுதிகளில் வசிக்கும் பொதுமக்களைப் பாதுகாப்பான இடங்களில் தங்க வைத்து உணவு, மருத்துவ வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகளை வழங்குமாறு அனைத்து உயர் அலுவலர்களுக்கும் உத்தரவிட்டேன்.

மேலும், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் 21.05.2021 அன்று சென்னை எழிலகத்தில் உள்ள மாநில அவசரக் கட்டுப்பாட்டு மையத்தில் ஆய்வுக் கூட்டம் ஒன்றை நடத்தி, யாஸ் புயலின் காரணமாக மேற்கொள்ள வேண்டிய முன் எச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து உயர் அலுவலர்களுக்கும் மாவட்ட ஆட்சியர்களுக்கும் அறிவுரைகள் வழங்கினார்.

இதுமட்டுமன்றி, தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் அவர்கள் 22.05.2021 அன்று யாஸ் புயலால் பாதிப்பு ஏற்படக்கூடும் என்று கருதப்பட்ட மாவட்ட ஆட்சியர்களுடன் காணொலி காட்சி வாயிலாகக் கூட்டம் நடத்தி, யாஸ் புயலின் காரணமாக மேற்கொள்ள வேண்டிய முன் எச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து அறிவுரை வழங்கினார்.

மேலும், ஆழ்கடலில் மீன் பிடிக்கச் சென்றுள்ள 45 நாட்டுப் படகுகளில் உள்ள மீனவர்களுக்குத் தொலைத் தொடர்பு கருவிகள் மூலமாகவும், இந்தியக் கடலோர காவல் படை மூலமாகவும் தகவல் தெரிவிக்கப்பட்டு, 45 நாட்டுப் படகுகளில் ஆழ்கடலில் மீன் பிடிக்கச் சென்ற அனைத்து மீனவர்களும் பத்திரமாகக் கரை திரும்பியுள்ளனர்.

கன்னியாகுமரி மாவட்டத்தில், பெய்த கன மழையின் காரணமாக, பாதிப்பிற்குள்ளான பகுதிகளில் வசித்த 767 நபர்கள் 16 நிவாரண முகாம்களில், கொரோனா நோய்த்தொற்று தடுப்பு வழிகாட்டு நெறிமுறைகளுக்குட்பட்டு, தங்க வைக்கப்பட்டு உணவு, மருத்துவ வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் வழங்கப்பட்டது. பாதிப்பு ஏற்படும் என்று கருதப்பட்ட பகுதிகளில் வசிக்கும் பொதுமக்களைப் பாதுகாப்பான இடங்களில் முன் கூட்டியே தங்க வைக்க அரசு மேற்கொண்ட நடவடிக்கையின் காரணமாக, உயிரிழப்பு தவிர்க்கப்பட்டுள்ளது.

இம்மாவட்டத்தில் பெய்த கனமழையின் காரணமாக, சித்தாறு 1, சித்தாறு 2 மற்றும் மாம்பலத்துறையாறு அணைகளிலும், தாமிரபரணி, வல்லியாறு மற்றும் பழையாறு உள்ளிட்ட ஆறுகளில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு, குடியிருப்பு பகுதிகளில் வெள்ளம் சூழ்ந்ததோடு, வேளாண் மற்றும் தோட்டக்கலைப் பயிர்களுக்கும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. மொத்தம் 238 கூரை வீடுகள் சேதமடைந்துள்ளதாகவும், மேலும் 35 ஹெக்டேர் பரப்பளவில் பயிர்கள் சேதமடைந்துள்ளதாகவும், 373 ஹெக்டேர் பரப்பளவில் பயிரிடப்பட்ட வேளாண் மற்றும் தோட்டக்கலைப் பயிர்கள் வெள்ள நீரால் சூழப்பட்டுள்ளது எனவும் முதல் நிலை அறிக்கை வரப்பெற்றுள்ளது.

மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்களையும், மாண்புமிகு தகவல் தொழில் நுட்பத்துறை அமைச்சர் அவர்களையும், கூடுதல் தலைமைச் செயலர் மற்றும் வருவாய் நிருவாக

ஆணையரையும், பாதிப்பிற்குள்ளான பகுதிகளைப் பார்வையிட்டு, மக்களுக்குத் தேவையான நிவாரணம் மற்றும் மீட்புப் பணிகளைத் துரிதப்படுத்துவதற்காக அனுப்பி வைத்தேன்.

இதுமட்டுமன்றி, மின்சாரம், சாலை, உள்ளாட்சி மற்றும் இதர துறைகளின் உட்கட்டமைப்புகளுக்கு ஏற்பட்டுள்ள சேதங்களை உடனடியாக சரி செய்யவும், இவை தொடர்பான அறிக்கையினை விரைவில் சமர்ப்பிக்கவும் தொடர்புடைய அலுவலர்களுக்கு உத்தரவிட்டுள்ளேன்.

கொரோனா நோய்த் தொற்றுப் பரவல் காரணமாக முழு ஊரடங்கு நடைமுறையில் இருக்கும் இந்த சூழ்நிலையில், பாதிப்பிற்குள்ளான இம்மாவட்ட மக்களின் துயர் துடைக்கும் வகையில் மாநில பேரிடர் நிவாரண நிதியின் கீழ், பகுதியாகச் சேதமடைந்த கூரை வீடு ஒன்றுக்கு ரூ.4,100/– வீதமும், முழுமையாகச் சேதமடைந்த கூரை வீடு ஒன்றுக்கு ரூ.5,000/– வீதமும் வழங்கப்படும்.

மேலும், மானாவாரி மற்றும் நீர்ப்பாசனம் பெற்ற நெற்பயிர்களுக்கும், நீர்ப்பாசன வசதி பெற்ற இதர பயிர்களுக்கும் இடுபொருள் நிவாரணத் தொகையாக ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.20 ஆயிரமும், மானாவாரி நெற்பயிர் தவிர, அனைத்து மானாவாரி பயிர்களுக்கும் இடுபொருள் நிவாரணத் தொகையாக ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.10 ஆயிரமும், பல்லாண்டு காலப் பயிர்களுக்கு (perennial crops) இடுபொருள் நிவாரணத் தொகையாக ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.25 ஆயிரம் வழங்கிடவும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு அறிவிக்கப்பட்ட நிவாரணத் தொகையினை தாமதமின்றி வழங்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் தொடர்புடைய அலுவலர்களுக்கு உத்தரவிட்டுள்ளேன்.

"டவ்–தே" புயல் தொடர்பாக மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்பான ஆலோசனைக் கூட்டம்

படமும்/செய்தியும்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தலைமையில் 15.05.2021 அன்று தலைமைச் செயலகத்தில், அரபிக் கடலில் "டவ்–தே" புயல் சின்னம் உருவாகியுள்ளதையொட்டி பாதிப்பு ஏற்படக்கூடிய மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில், தலைமைச் செயலாளர், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர், வருவாய் நிருவாக ஆணையர்/கூடுதல் தலைமைச் செயலாளர், நிதித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர், பொதுத் துறை செயலாளர், இந்திய வானிலை ஆய்வு மையத்தின் இயக்குநர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மருத்துவ ஆக்சிஜன் உற்பத்தி செய்திடத் தமிழக அரசு சிறப்புச் சலுகைகள் அறிவிப்பு

தமிழ்நாட்டில் வேகமாகப் பரவி வரும் கொரோனா நோய்த் தொற்றினைக் கட்டுப்படுத்திட, தமிழக அரசு பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. கொரோனா தொற்றின் இரண்டாவது அலையில் பாதிப்புக்குள்ளாகும் நோயாளிகளுக்கு அவசியமான மருத்துவ ஆக்சிஜன் கிடைப்பதில் தற்போது தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனைக் கருத்தில்கொண்டு, மருத்துவ ஆக்சிஜன் உற்பத்தியில் தமிழகம் தற்சார்பு அடைவதற்கான வழிமுறைகள் குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விரிவான ஆலோசனைக் கூட்டத்தை 11.05.2021 அன்று நடத்தினார்கள். அக்கூட்டத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது அறிவுறுத்தலின்படி, மருத்துவ ஆக்சிஜன் மற்றும் தொடர்புடைய உபகரணங்கள் உற்பத்தி செய்யும் உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கும் பொருட்டு, தமிழ்நாடு அரசு பின்வரும் சிறப்புத் தொகுப்பு சலுகைகளை அறிவித்துள்ளது:–

ஆக்சிஜன் செறிவூட்டும் கருவி, ஆக்சிஜன் உருளை மற்றும் மருத்துவ ஆக்சிஜன் உற்பத்தி செய்யத் தமிழ்நாட்டில் முதலீடு செய்யும் உற்பத்தியாளர்களுக்கு 30 சதவீதம் மூலதன மானியம் இரண்டு சம ஆண்டு தவணைகளில் வழங்கப்படும். இந்தச் சலுகையைப் பெறுவதற்குத் தொடர்புடைய நிறுவனங்கள் 2021, ஆகஸ்ட் 15க்குள் உற்பத்தியைத் தொடங்க வேண்டும். ஜனவரி 1, 2021 முதல் ஆகஸ்ட் 31, 2021 வரை செய்யப்படும் முதலீடுகளும் இதற்குக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

குறைந்தபட்சம் நாளொன்றுக்கு 10 மெட்ரிக் டன் உற்பத்தித் திறன் கொண்ட பெரிய நீர்ம ஆக்சிஜன் உற்பத்தி தொழிற்சாலைகள் (Liquid Oxygen Plants) அமைக்க ஜனவரி 1, 2021 முதல் நவம்பர் 30, 2021 வரை செய்யப்படும் முதலீடுகளுக்கு 30 சதவிகிதம் மூலதன மானியம் 5 ஆண்டுகளில் வழங்கப்படும். இந்த சலுகையைப் பெறுவதற்கு நிறுவனங்கள் 30.11.2021க்கு முன்னர் உற்பத்தியைத் தொடங்க வேண்டும்.

அத்தகைய தொழில் நிறுவனங்களுக்குத் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் ஆண்டுக்கு 6 சதவீதம் வட்டி மானியத்துடன் உடனடியாக கடன் வழங்கப்படும்.

அத்தகைய தொழில் நிறுவனங்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் சிப்காட்/சிட்கோ நிறுவனங்கள் மூலம் நிலம் ஒதுக்கீடு செய்யப்படும்.

அத்தகைய முதலீட்டாளர்களுக்குத் தமிழ்நாடு வழிகாட்டி நிறுவனம் மூலம் கட்டணம் ஏதுமின்றி ஒற்றைச் சாளர முறையில் விரைந்து அனுமதி வழங்கப்படும்.

கொரோனா தொடர்பான மருத்துவப் பொருட்களான ஆக்சிஜன் செறிவு, தடுப்பூசிகள், ஆக்சிஜன் உற்பத்தி நிலையங்கள் போன்றவற்றை உற்பத்தி செய்யும் புதிய நிறுவனங்களை ஊக்குவிப்பதற்கு டிட்கோ நிறுவனம் கூட்டாண்மை (Joint venture) அடிப்படையில் துணைபுரியும்.

இந்தச் சிறப்புத் தொகுப்பு சலுகைகள் தமிழ்நாட்டில் மருத்துவ ஆக்சிஜன் மற்றும் தொடர்புடைய உபகரணங்கள் உற்பத்தி செய்யும் நிறுவனங்களின் முதலீடுகளுக்கு பெரும் ஊக்கம் அளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தன்னார்வ தொண்டு நிறுவனங்களுடன் ஒன்றிணைந்து செயல்பட மாநில அளவிலான ஒருங்கிணைப்புக் குழு அலுவலர்கள் நியமனம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 19.05.2021 அன்று கொரோனா பெருந்தொற்று நோய் இரண்டாம் அலை பரவலைத் தடுக்கும் வகையில் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், அரசுடன் ஒருங்கிணைந்து செயல்படும் வகையில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தான கூட்டம் சென்னை தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பேசிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், கொரோனா பெருந்தொற்றின் வேகமானது, கடந்த முதல் அலையை விட இந்த இரண்டாவது அலையில் மிகக் கடுமையாகவும், பெரும் சவாலாகவும் உள்ளது என்றும், இப்பெருநோயினை அரசின் செயல்பாடுகள் மட்டுமே முற்றிலும் ஒழித்துவிட முடியாது என்றும், கொரோனா பெருந்தொற்றிலிருந்து மக்களைக் காக்கும் பணியில், தமிழ்நாடு அரசு எடுத்து வரும் அனைத்து முயற்சிகளுக்கும், நடவடிக்கைகளுக்கும் ஆக்கமும் ஊக்கமும் அளிக்கும் வகையில் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் களத்தில் நின்று ஒன்றிணைந்து செயல்பட வேண்டுமென்றும் அனைத்து தன்னார்வ தொண்டு நிறுவனங்களையும் கேட்டுக் கொண்டார்.

மேலும், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலம் அரசு மருத்துவமனைகளுக்குப் பிராணவாயு, உயிர் காக்கும் மருந்துகள் வழங்குவது, கொரோனா தொற்று நோயால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு இலவச வாகன வசதிகள் செய்வது, இந்நோய் தீவிரம் குறித்தும், தடுப்பூசி போடப்படுவதன் முக்கியத்துவம் குறித்தும், பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துவது போன்ற சேவைகளில் தன்னலம் கருதா பெரும் சேவைகளில் ஈடுபட்டு வரும் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் அரசுடன் கைகோர்த்து நன்கு ஒன்றிணைந்து மக்களின் சேவைகளை முன்னுரிமைப்படுத்தி இணைந்து செயல்பட்டால், இந்த நெருக்கடிக் காலத்தை எளிதில் வெற்றி கொண்டு மக்களைக் காக்கலாம் என்றும், எனவே, இந்தப் பணிகளை ஒருங்கிணைத்து மக்களுக்கு உதவிட மாநில அளவிலான ஒருங்கிணைப்புக் குழு (State Level Co-ordination Committee) அமைக்கப்படும் என்றும் தெரிவித்திருந்தார்கள். தற்போது, கொரோனா பெருந்தொற்று நோயை ஒழிக்கத் தன்னார்வ தொண்டு நிறுவனங்களுடன் ஒன்றிணைந்து செயல்பட, மாநில அளவிலான ஒருங்கிணைப்புக் குழுவிற்குக் கீழ்க்கண்ட அதிகாரிகளை நியமித்து உத்தரவிட்டுள்ளார்கள்.

அரசு அதிகாரி பெயர் / மாநில அளவிலான ஒருங்கிணைப்புக் குழுவின் உறுப்பினர்

1. திருமதி G. லஷ்மிபிரியா, இ.ஆ.ப.,
   கூடுதல் ஆணையர் (நிர்வாகம்),
   வணிகவரித் துறை, சென்னை–5.
2. திரு. S.P.அம்ரித், இ.ஆ.ப.,
   அரசு துணைச் செயலாளர்,
   பொது (சட்டம் (ம) ஒழுங்கு)த் துறை,
   சென்னை–9.
3. திரு. S.சாந்தகுமார்,
   மாவட்ட வருவாய் அலுவலர்,
   தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம், சென்னை–32.
4. திரு. M.கண்ணன்,
   மாவட்ட வருவாய் அலுவலர் / பொதுமேலாளர்,
   தமிழ்நாடு மின்னணு நிறுவனம் (ELCOT),
   சென்னை.

இக்குழு தன்னலம் கருதா தன்னார்வ தொண்டு நிறுவனங்களுடன் ஒன்றிணைந்து இந்த கொரோனா பெருந்தொற்று நோயை ஒழிக்க மேற்கொள்ளும் பணிகளுடன் சேர்த்து, பெருந்தொழில் நிறுவனங்களிடமிருந்து சமூக பங்களிப்பு நிதியினைப் பெற்று (Corporate Social Responsibility – CSR) அதன் மூலம் கொரோனா தொற்றிலிருந்து மக்களைக் காக்க மேற்கொள்ளப்படும் பல்வேறு நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கும் பணிகளையும் மேற்கொள்ளும்.

மாநில அளவிலான இந்த ஒருங்கிணைப்புக் குழு தன்னார்வ தொண்டு நிறுவனங்களுடன் ஒன்றிணைந்து சென்னை, தேனாம்பேட்டையில் அமைந்துள்ள தேசிய சுகாதார இயக்க வளாகத்தில் இயங்கி வரும் கட்டளை மையத்தில் (War Room – Unified Command Centre) தனது பணிகளை மேற்கொள்ளும். தனியார் தொண்டு நிறுவனங்கள் tnngocoordination@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரி மூலம் மாநில ஒருங்கிணைப்புக் குழுவினை தொடர்பு கொள்ளலாம்.

மாநில அளவிலான ஒருங்கிணைப்புக் குழுவினை தொடர்புகொள்ள இணையதளம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 19.05.2021 அன்று கொரோனா பெருந்தொற்று நோய் இரண்டாம் அலை பரவலைத் தடுக்கும் வகையில் தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், அரசுடன் ஒருங்கிணைந்து செயல்படும் வகையில் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தான கூட்டம் சென்னை தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

கொரோனா பெருந்தொற்று நோயை ஒழிக்கத் தன்னார்வ தொண்டு நிறுவனங்களுடன் ஒன்றிணைந்து செயல்பட, மாநில அளவிலான ஒருங்கிணைப்புக் குழு அமைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து மாவட்டங்களும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களுடன் ஒன்றிணைந்து செயல்பட மாவட்ட அளவிலான குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மாநில அளவிலான இந்த ஒருங்கிணைப்புக் குழு தேனாம்பேட்டையில் அமைந்துள்ள தேசிய சுகாதார இயக்க வளாகத்தில் இயங்கி வரும் கட்டளை மையத்தில் (War Room – Unified Command Centre) தனது பணிகளை மேற்கொண்டு வருகிறது. தன்னலம் கருதா தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், தனிநபர்கள் மற்றும் பெருந்தொழில் நிறுவனங்கள் https://ucc.uhcitp.in/ngoregistration என்ற இணையதளத்தில் தங்களைப் பதிவு செய்து மக்களுக்கு உதவும் பெரும் பணியில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ளக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மாநில அளவிலான ஒருங்கிணைப்புக் குழுவால் https://www.facebook.com/tnngocoordination/ என்ற முகநூல் கணக்கு தொடங்கப்பட்டுள்ளது. மேலும், 8754491300 என்ற அலைபேசி எண் மூலமாகவும், tnngocoordination@gmail.com என்ற இணையதளம் வாயிலாகவும் மாநில ஒருங்கிணைப்புக் குழுவைத் தொடர்பு கொள்ளலாம்.

படமும்/ செய்தியும்

ஓய்வுபெற்ற அரசுப் போக்குவரத்துக் கழக ஊழியர்களுக்கு நிலுவைத் தொகைக்கான காசோலையை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கினார்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 02.06.2021 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் பணியாற்றி ஜனவரி 2020 முதல் ஏப்ரல் 2020 வரையிலான காலகட்டங்களில் ஓய்வு பெற்ற போக்குவரத்து ஊழியர்களுக்கு வழங்க வேண்டிய ஓய்வூதிய பணப் பயன்களின் நிலுவைத் தொகையான ரூ.497.32 கோடியினை 2,457 ஓய்வுபெற்ற போக்குவரத்துக் கழக ஊழியர்களுக்கு வழங்கிடும் அடையாளமாக, 6 ஓய்வு பெற்ற போக்குவரத்து ஊழியர்களுக்கு நிலுவைத் தொகைக்கான காசோலைகளை வழங்கினார்கள். இந்த நிகழ்வின்போது, மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் திரு. துரைமுருகன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு.ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், தலைமைச் செயலாளர், போக்குவரத்துத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

நாம் அனைவரும் சேர்ந்து, நாட்டு மக்களுக்கு நல்லதோர் எதிர்காலத்தை அமைக்க, சட்டமன்ற ஜனநாயகத்தைப் பேணிப் பாதுகாப்போம்

மாண்புமிகு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 12.05.2021 அன்று ஆற்றிய உரை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “எங்கள் வாழ்வும், எங்கள் வளமும் மங்காத தமிழென்று சங்கே முழங்கு” – என்ற புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் வரிகளுக்கு இலக்கணமாக விளங்கக் கூடிய திராவிட முன்னேற்றக் கழகம், நடந்து முடிந்த தமிழகச் சட்டமன்றத் தேர்தலில் பெரும்பான்மைப் பெற்று ஆட்சி அமைக்க ஆதரவுக் கரம் நீட்டிய தமிழக மக்கள் அனைவருக்கும் தங்கள் மூலமாக எனது மனமார்ந்த நன்றியை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

“செந்தமிழால் செய்த உடல், செங்கோலால் செய்த விரல், வெண்கலத்தால் செய்த குரல், வெற்றிகளால் செய்த கழல், சங்கநூல் செரித்த குடல், சரித்திரத்து ஞானக் கடல், நெஞ்சமெல்லாம் தமிழ் அன்னை, நினைப்பதெல்லாம் தமிழன்னை” என்று கவிஞர் தணிகைச் செல்வனால் போற்றப்பட்ட முத்தமிழ் அறிஞர் நம் நெஞ்சமெல்லாம் அன்றும், இன்றும், என்றும் வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய நம்முடைய தலைவர் கலைஞர் அவர்களை வணங்கி என்னுடைய உரையை நான் தொடங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் இந்த இருக்கையில் அமர்ந்திருப்பதைப் பார்க்கும்போது என் நெஞ்சம் அடையும் மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. எந்த அளவுக்கு தாங்கள் உணர்ச்சிவயமாக இப்போது அமர்ந்திருக்கிறீர்களோ அதைவிட அதிகமாக நான் உணர்ச்சியும், பெருமையும், பூரிப்பும் அடைந்துகொண்டிருக்கிறேன். இங்கே எல்லோரும் குறிப்பிட்டுச் சொன்னார்கள். அனைத்து தொலைக்காட்சி விவாத மேடைகளிலும் கம்பீரமாக உட்கார்ந்து, பல்வேறு விவாதங்களில் பங்கெடுத்து, கருத்தோடும், சுவையோடும் பேசக்கூடிய தங்களது விவாதங்களைத் தொடர்ந்து கவனித்துக் கொண்டிருக்கக்கூடியவன் நான். அந்தவகையில் ஆக்கப்பூர்வமான விவாதத்திற்குப் புகழ்பெற்ற ஜனநாயக மன்றமாக விளங்கிக்கொண்டிருக்கக்கூடிய இந்த சட்டமன்றத்தினுடைய பேரவைத் தலைவராக தாங்கள் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது எங்களுக்கெல்லாம் மிகுந்த பெருமை அளிப்பதாக இருக்கின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் ஏற்றிருக்கும் பேரவைத் தலைவர் பொறுப்பு *“நாட்டின் சுதந்திரம் மற்றும் விடுதலையின் சின்னம்”* என்று இந்தியாவின் முதல் பிரதமரான பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் சொன்னார்கள். *“அவைத் தலைவர் பேரவையைக் குறிப்பவர். அவையினுடைய கண்ணியம், சுதந்திரத்தன்மை ஆகியவற்றின் அடையாளம் பேரவைத் தலைவர்”* என்று நேரு

அவர்கள் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள். அந்த சுதந்திரத்தின், ஜனநாயகத்தின் அடையாளமாக தாங்கள் வீற்றிருக்கிறீர்கள். கதர் ஆடையில் அமர்ந்து நீங்கள் அமர்ந்திருக்கிறீர்கள். தூய்மையின் அடையாளமாக, வெள்ளை உள்ளத்தின் அடையாளமாக இந்த மன்றத்தின் உறுப்பினர்களுக்கு எல்லாம் நீங்கள் இன்றைக்குக் காட்சி தந்துகொண்டிருக்கிறீர்கள். இந்த 16ஆவது சட்டமன்றத்தில் தாங்கள் பேரவைத் தலைவராக அமைந்திருப்பது இந்த மாபெரும் மன்றத்திற்குப் பெருமை அளிப்பதாக அமைந்திருக்கின்றது. இந்த மாமன்றத்திலிருந்த பேரவைத் தலைவர்கள் அனைவரும், இந்த அவைக்குப் பல்வேறு பெருமைகளைச் சேர்த்துத் தந்திருக்கிறார்கள். அதிலும் குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், தென் மாவட்டத்தைச் சார்ந்தவர்களே அதிகமாகப் பேரவைத் தலைவர்களாக இருந்திருக்கிறார்கள்.

தென் மாவட்டத்தைச் சார்ந்தவர்கள் மரியாதைக்குரிய திரு. எஸ். செல்லப்பாண்டியன் அவர்கள், திரு. சி.பா. ஆதித்தனார் அவர்கள், திரு. பி.எச். பாண்டியன் அவர்கள், முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள், திரு. சேடப்பட்டி இரா. முத்தையா அவர்கள், திரு. பி.டி.ஆர். பழனிவேல்ராசன் அவர்கள், திரு. கா. காளிமுத்து அவர்கள், திரு. இரா. ஆவுடையப்பன் அவர்கள். தற்போது தாங்கள் பேரவைத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறீர்கள். இந்தப் பேரவையை ஜனநாயக மாண்புடன் நடத்திடும் திறமை படைத்தவர்களாகப் பேரவைத் தலைவர்கள் இருந்திருக்கிறார்கள். தாங்களும் இந்தப் பேரவையை ஜனநாயக ரீதியில், அந்த மரபு வழி நின்று நிச்சயம் நடத்துவீர்கள் என்பதில் யாருக்கும் எள்ளளவும் சந்தேகமில்லை. இந்திய நாட்டினுடைய விடுதலைக்குப் பிறகு 1952ஆம் ஆண்டு நடந்த முதல் பொதுத் தேர்தலில் வெற்றி பெற்ற உறுப்பினர்களைக் கொண்ட முதல் சட்டமன்றம் கூடிய இடம்தான், இந்த இடம்.

மொழி வாரியாக மாகாணங்கள் பிரிப்பதற்கு முன்னதாக 375 உறுப்பினர்கள் சென்னை ராஜதானியில் இருந்ததால் அனைவரும் உட்காரக்கூடிய வசதியுடன் புதிய பேரவைக் கட்டடம் அரசினர் தோட்டத்தில் அப்போது கட்டப்பட்டது. அதில்தான் முதல் ஐந்தாண்டுக் காலம் பேரவை நடந்திருக்கிறது. மொழி வாரியாக மாகாணங்கள் பிரிக்கப்பட்டதற்குப் பிறகு தமிழ்நாடு சட்டமன்றத்திற்கான உறுப்பினர் தொகை குறைந்த பிறகு செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் மீண்டும் சபை நடவடிக்கைகள் நடந்தன. அத்தகைய வரலாற்றுச் சிறப்புமிக்க இடத்தில் கூட்டப்பட்டுள்ள இந்தக் கூட்டத்தில் தாங்கள் பேரவைத் தலைவர் இருக்கையில் அமர்ந்திருப்பது உள்ளபடியே பாராட்டுக்குரியது, மகிழ்ச்சிக்குரியது, பெருமைக்குரியது. உள்ளத்தால், அறிவாற்றலால், செயல் திறத்தால் வளர்ந்த தங்கள் தலைமையிலான இந்த அவையிலே நாங்கள் செயல்படுவதை ஒரு பொற்காலமாகக் கருதிக்கொண்டிருக்கிறோம்.

நெல்லை மாவட்டம், காவல் கிணறு என்ற ஊருக்கு அருகில் இருக்கக்கூடிய லெப்பைகுடிகாடு என்ற ஊரில் பிறந்த தாங்கள், பள்ளி ஆசிரியராக வாழ்க்கையைத் தொடங்கியிருக்கிறீர்கள். காவல் கிணறு திரு இருதய மேல்நிலைப் பள்ளியில் கணிதம் மற்றும் ஆங்கில ஆசிரியராக இருந்து, அரசியல் ஈடுபாட்டின் காரணமாக ஆசிரியர் வேலையை விட்டு விலகி, அரசியல் பணிக்கு வந்திருக்கிறீர்கள். மாணவர்களுக்கு ஆசிரியராக இருந்த தாங்கள், இப்போது 234 சட்டமன்ற உறுப்பினர்கள் கொண்ட இந்தப் பேரவைக்குத் தலைவராகப் பொறுப்பேற்றிருக்கிறீர்கள். மூன்று முறை சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றி, நான்காவது முறை வெற்றி பெற்றுள்ள தங்களுக்குச் சூட்டப்பட்டிருக்கிறது இந்த மகுடம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் உங்கள் உத்தரவுகளுக்கு, கட்டளைகளுக்கு, கண்ணசைவுக்குக் கட்டுப்பட்டு நிச்சயமாகச் செயல்படுவோம். *‘சட்டசபையை அதிகார அமைப்பாக இல்லாமல், சமூகத்துக்கு நன்மை செய்யும் அமைப்பாகக் கருத வேண்டும்’*. இதை யார் சொன்னது? தந்தை பெரியார் அவர்கள். எனவே, அவர் வழிவந்திருக்கக் கூடியவர்கள் நாங்கள்!

இங்கே கூட எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னார்கள். *‘ஜனநாயக நாட்டில் ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்பவை ஒரு நாணயத்தினுடைய இரு பக்கங்கள். இதில் ஒரு பக்கம் சரியாக இருந்து, மறுபக்கம் சிதைந்து போயிருக்குமென்று சொன்னால், அந்த நாணயம் செல்லாக் காசாகி விடும்‘*. இதே பேரவையில்தான் அறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள். அவருடைய தம்பிமார்கள்தான் நாங்கள்.

‘ஒரு மனிதனின் முகத்தில் உள்ள நிறைகளை மட்டுமல்ல, குறைகளையும் காட்டுவதுதான் கண்ணாடி. அதுபோல் ஆளுங்கட்சியினுடைய நிறை குறைகளைக்

‘ஒரு மனிதனின் முகத்தில் உள்ள நிறைகளை மட்டுமல்ல, குறைகளையும் காட்டுவதுதான் கண்ணாடி. அதுபோல் ஆளுங்கட்சியினுடைய நிறை குறைகளைக் காட்டுவதுதான் சட்டமன்றம்’ என்று சொன்னவர் யார் தெரியுமா? எங்கள் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். கருத்துகளைக் கருத்துகளால் எதிர்கொள்ளும் வல்லமை எங்களுக்கு உண்டு.

காட்டுவதுதான் சட்டமன்றம்' என்று சொன்னவர் யார் தெரியுமா? எங்கள் தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். கருத்துகளைக் கருத்துகளால் எதிர்கொள்ளும் வல்லமை எங்களுக்கு உண்டு. ஆனால், அதில் கர்வமோ, ஆணவமோ இருக்காது. ஜனநாயகமும், மரபுகளும் நிச்சயமாக அதிலே இருக்கும். எந்தக் காரணத்தைக் கொண்டும் ஆணவம் இருக்காது; கர்வம் இருக்காது. ஜனநாயகம்தான் இருக்கும். மரபுகளும் கடைப்பிடிக்கப்படும் என்பதை உறுதியோடு நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

தோல்வியில் துவள்வதும், வெற்றியில் இறுமாப்பு கொள்வதும் எங்களுடைய வழக்கமல்ல. அப்படி எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்கள் எங்களை வளர்க்கவும் இல்லை. ஆகவே, தமிழக மக்கள் அளித்திருக்கக்கூடிய இந்த மாபெரும் வெற்றி, எங்களை மேலும், மேலும் அடக்கமுள்ளவர்களாக ஆக்கி இருக்கிறது. கட்டுப்பாட்டோடு இருப்பதோ, அடக்கத்தோடு இருப்பதோ சட்டமன்றத்தினுடைய ஜனநாயகத்தைக் காப்பாற்றிடவே. அதை எந்தவிதத்திலும் பலவீனமாக யாரும் கருதிடக் கூடாது. இவை அனைத்தையும் அறிந்த தாங்கள் ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்று பேதம் பார்க்காமல், அனைவருக்கும் பொதுவானவராக இருந்து, பழம்பெருமை வாய்ந்த மிகத் தொன்மையான இந்த அவையை அதற்குரிய மாண்புடன் நடத்திடுவீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு மட்டுமல்ல, இங்கிருக்கக்கூடிய எல்லோருக்கும் இருக்கிறது. ஆகவே, இங்கிருக்கக்கூடிய அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் நிச்சயமாக இருக்கும். அதில், எந்த மாறுபாடும் இருக்க வாய்ப்பே கிடையாது. அதன் சாட்சிதான், மாண்புமிகு அவை முன்னவரும், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரும் தங்களை இந்தப் பெருமைமிகு இருக்கையில் அழைத்து வந்து அமர வைத்தார்கள்.

''லார்டு வெலிங்டன்'' அவர்களும், அவரது துணைவியாரும் இணைந்து, இப்பேரவைக்குப் பரிசாக வழங்கிய அந்த அழகிய நாற்காலியில் நீங்கள் அமர்ந்திருக்கிறீர்கள். அவையினுடைய மாண்பு கெடாது, எவ்வித விரோத உணர்ச்சிக்கும் இடம் தராமல், ஜனநாயக மரபுகளைக் காக்கக்கூடிய வகையில் ஆளுங்கட்சி செயல்படும் என்ற உறுதியை நான் உங்கள் மூலமாக இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல், பேரவைத் துணைத் தலைவராகப் பொறுப்பேற்றிருக்கக்கூடிய மாண்புமிகு திரு.கு.பிச்சாண்டி அவர்களையும் நான் மனதாரப் பாராட்டுகிறேன். திருவண்ணாமலை நகர் மன்ற உறுப்பினராக 1986ஆம் ஆண்டு மக்கள் பணியாற்றிய அவர், ஆறு முறை சட்டமன்ற உறுப்பினராக மக்களால் தேர்வு செய்யப்பட்ட பெருமைக்குரியவர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள். கடந்த சட்டமன்றப் பேரவையில் பிரதான எதிர்க்கட்சியான திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் துணை கொறடாவாக அவர் சிறப்பாகப் பணியாற்றி இருக்கிறார். அனைத்து விவாதங்களிலும் முழுமையாகப் பங்கெடுத்த பெருமை அவருக்குண்டு. மாண்புமிகு பேரவை உறுப்பினர்கள் சொல்லக்கூடிய கருத்துகளை எல்லாம் ஆழமாக உள்வாங்கக்கூடியவர். அவை முன்னவர் அவர்கள்கூட இங்கே குறிப்பிட்டுச் சொன்னார்கள். பேரவை அலுவல் நேரம் நிறைவு பெறுகிற வரையிலே, ஏன் சில நேரம் மதிய உணவைக்கூட மறந்து இந்தப் பேரவையிலே அமர்ந்து அந்தப் பேரவை நடவடிக்கைகளைக் கவனித்துக் கொண்டிருந்தவர் நம்முடைய திரு. பிச்சாண்டி அவர்கள். அனைவருடனும் அன்போடு பழகக்கூடியவர். பாசத்தோடு பழகக்கூடியவர் மாண்புமிகு திரு. பிச்சாண்டி அவர்கள். எனவே, பேரவைத் துணைத் தலைவராக அவரை நாம் தேர்ந்தெடுத்திருக்கிறோம். அவரையும் மனமார நான் பாராட்டுகிறேன். வாழ்த்துகிறேன்.

பேரவைத் தலைவருக்கு இந்த அவையின் மாண்பைக் காப்பாற்ற நிச்சயமாகத் துணைத் தலைவராகப் பொறுப்பேற்றிருக்கக்கூடிய திரு. பிச்சாண்டி அவர்கள் இருப்பார், இருக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நேரத்தில் தனிப்பட்ட எனக்குள்ள ஒரு வருத்தம், அவைத் தலைவர் ஆனதன் மூலமாக தங்களது அரசியல் பணிகளை நாங்கள் பயன்படுத்திக்கொள்ள முடியாத சூழல் இப்போது எங்களுக்கு ஏற்பட்டு இருக்கிறது. ஆனால், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் இதே அவையில் திரு. கே.ஏ. மதியழகன் அவர்களைப் பேரவைத் தலைவர் பொறுப்பில் அமர வைத்தபோது சொன்னார். ''எங்கள் உடன்பிறப்பாக இருந்து எங்களோடு இந்த மாபெரும் இயக்கத்தை வளர்க்கக் காரணகர்த்தாவாக இருந்த தாங்கள் இன்று அந்தப் பணியிலிருந்து, அறுத்துக் கொண்டீர்கள் என்று நான் சொல்ல மாட்டேன், ஒதுங்கியிருக்கிறீர்கள்'' என்று வாழ்த்தியதைத்தான் உங்களுக்கு நான் நினைவுபடுத்துகிறேன். ஆகவே, கழகப் பணி செய்ய முடியாமல் போகிறதே என்ற வருத்தம் எனது உள்ளத்தில் ஒரு ஓரத்திலிருந்தாலும் இந்த இடத்துக்குப் பொருத்தமானவர் தாங்கள்தான் என்பதை எண்ணி அந்த வகையிலே நான் மனநிறைவு அடைகிறேன். தங்களுக்கும் பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும், எதிர்க்கட்சியினர் உட்பட அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் என்னுடைய பாராட்டுதல்களை, வாழ்த்துகளை நன்றியோடு தெரிவித்துக்கொண்டு, வாருங்கள் நாம் அனைவரும் சேர்ந்து நமக்கும் நாட்டு மக்களுக்குமான நல்லதோர் எதிர்காலத்தை அமைக்க இந்தச் சட்டமன்ற ஜனநாயகத்தைப் பேணிப் பாதுகாப்போம் என்று கூறி, என் உரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி, வணக்கம்.

செவிலியர் என்பதை ஒரு வேலையாக இல்லாமல் சேவையாக ஆற்றிவரும் உங்களைப் பாராட்டுகிறேன்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 12.05.2021 அன்று, அரசு மருத்துவமனைகளில் பணிபுரியும் செவிலியர்களுடன் காணொலி வாயிலாகக் கலந்துரையாடினார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 12.05.2021 அன்று, அரசு மருத்துவமனைகளில் பணிபுரியும் செவிலியர்களுடன் காணொலி வாயிலாகக் கலந்துரையாடினார். செவிலியர் தினத்தை முன்னிட்டு அவர்களுக்கு வாழ்த்துகளைத் தெரிவித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், கொரோனா பெருந்தொற்றுக்கு எதிரான போரில் முன்களப் பணியாளர்களாகச் செவிலியர்கள் ஆற்றி வரும் பணிகளுக்குப் பாராட்டுத் தெரிவித்தார். இந்நிகழ்வில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசியதன் விவரம் வருமாறு :

அனைவருக்கும் வணக்கம்!

எல்லோரும் எப்படி இருக்கிறீர்கள்? முதலில் உங்கள் அனைவருக்கும் செவிலியர் தின வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். என்னைப் பொறுத்தவரை, ‘கருணையின் வடிவம்’ என்று செவிலியரைச் சொல்வேன்.

அன்பு செலுத்துவதும், அதை வெளிப்படுத்துவதும், ஆகிய இரண்டும் இணைந்ததுதான் உங்களது வாழ்க்கை! செவிலியர் என்பதை ஒரு வேலையாக இல்லாமல் சேவையாக ஆற்றிவரும் உங்களைப் பாராட்டுகிறேன்!

கடந்த ஓராண்டுக் காலம் – கொரோனா என்ற பெருந்தொற்று காலம்! உங்கள் சேவை – பல மடங்கு உயர்ந்து விட்டது. இதை எப்படி எதிர் கொண்டீர்கள் என்பதை ஒவ்வொருவராகச் சொல்லுங்கள்!

(செவிலியர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கலந்துரையாடினர். அப்போது செவிலியர்களின் பணி நேரம், அவர்கள் குடும்பத்தினருடன் செலவிடும் நேரம், அவர்களுக்கு வழங்கப்படும் பாதுகாப்பு உபகரணங்கள் உள்ளிட்டவை குறித்துக் கேட்டறிந்தார்)

மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் சேவைக்குப் பணத்தை ஈடாகக் கொடுத்துவிட முடியாது. ஆனால் அரசு காட்டும் நன்றியின் அடையாளமாக, நிதி அறிவிப்பை இன்றைக்கு அறிவித்துள்ளேன். கொரோனா தடுப்பு பணியில் ஈடுபட்டு உயிரிழந்த 43 மருத்துவர்களின் குடும்பங்களுக்கு தலா ரூ.25 இலட்சம் இழப்பீடாக அறிவித்துள்ளேன்.

மருத்துவர்கள், செவிலியர்கள் உள்ளிட்ட முன்களப் பணியாளர்களுக்கு ஊக்கத் தொகை வழங்க முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. ஏப்ரல், மே, ஜூன் ஆகிய மூன்று மாத காலத்திற்கான ஊக்கத் தொகையாக மருத்துவர்களுக்கு 30 ஆயிரம் ரூபாயும், செவிலியர்களுக்கு 20 ஆயிரம் ரூபாயும், தூய்மைப் பணியாளர்கள், ஆய்வுக்கூட பணியாளர்கள், சி.டி. ஸ்கேன் பணியாளர்கள், அவசர மருத்துவ ஊர்திப் பணியாளர்கள் போன்றவர்களுக்கு 15 ஆயிரம் ரூபாயும், பட்ட மேற்படிப்பு மருத்துவர்கள், பயிற்சி மருத்துவர்களுக்கு 20 ஆயிரம் ரூபாயும் ஊக்கத் தொகையாக வழங்கப்படும் என அறிவித்துள்ளேன்.

இந்த நிதி என்பது, எங்களது நன்றி உணர்ச்சிக்கான அடையாளமாக வழங்குகிறோம். கொரோனா தொற்று பரவாமல் தடுக்க ஊரடங்கு அறிவித்துள்ளோம்.

தொற்றால் பாதிக்கப்பட்டவர்களை முழுமையாகக் காக்கும் பணியையும் மும்முரமாக முடுக்கி விட்டிருக்கிறோம். இதற்கு முழு உதவியும் செய்து தங்களின் உயிரைப் பற்றிக் கவலைப்படாமல் செயல்படும் செவிலியர்கள் அனைவரையும் மீண்டும் பாராட்டுகிறேன்!

இவ்வாறு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் செவிலியர்களுடன் கலந்துரையாடினார்.

நலிந்த நிலையில் வாழும் கலைஞர்களுக்கு மாதாந்திர நிதியுதவி வழங்கும் திட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 08.06.2021 அன்று தலைமைச் செயலகத்தில், நலிந்த நிலையில் வாழும் கலைஞர்களுக்கு மாதாந்திர நிதி உதவி வழங்கும் திட்டத்தின் கீழ், 1,000 கலைஞர்களுக்கு நிதி உதவி வழங்கும் அடையாளமாக 11 கலைஞர்களுக்கு நிதி ஒப்பளிப்பு ஆணைகளை வழங்கினார்கள்.

இதன்மூலம், தமிழ்நாடு அரசின் கலை பண்பாட்டுத் துறையின் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் வாயிலாகப் பொருளாதாரத்தில் நலிந்த நிலையில் வாழும் சிறந்த கலைஞர்களுக்கு வழங்கப்படும் மாதாந்திர நிதி உதவி திட்டத்தின் கீழ், 2018–2019 மற்றும் 2019–2020 ஆகிய இரண்டு ஆண்டுகளுக்கு தலா 500 நலிந்த கலைஞர்கள் வீதம் மொத்தம் 1,000 நலிந்த கலைஞர்கள் பயனடைவார்கள். மேலும், நலிந்த கலைஞர்களுக்கு வழங்கப்பட்டு வரும் மாதாந்திர நிதியுதவியை ரூ.2,000/–த்திலிருந்து ரூ.3,000/– ஆக உயர்த்தி தமிழ்நாடு அரசு ஆணை வெளியிட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ், தமிழ்நாட்டில் உள்ள 6,600 அகவை முதிர்ந்த செவ்வியல் மற்றும் கிராமியக் கலைஞர்கள் பயன்பெறுவார்கள்.

> மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 08.06.2021 அன்று தலைமைச் செயலகத்தில், நலிந்த நிலையில் வாழும் கலைஞர்களுக்கு நிதி ஒப்பளிப்பு ஆணைகளை வழங்கினார்கள்.

"டவ் தே" புயலில் காணாமல் போன 21 மீனவர் குடும்பத்திற்கு தலா ரூ.20 இலட்சம் நிவாரண உதவி

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களின்
அறிவிப்பு–02.06.2021

கடந்த 13.05.2021 அன்று இந்திய வானிலை ஆராய்ச்சி மையம் டவ் தே புயல் குறித்து வெளியிட்ட எச்சரிக்கையினை தொடர்ந்து தமிழக அரசு பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொண்டது. இதன் காரணமாக, அரபிக்கடல் பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த 246 ஆழ்கடல் மீன்பிடி படகுகள் பாதுகாப்பாகக் கரை திரும்பியுள்ளன. இருப்பினும், கீழ்க்கண்ட 2 நிகழ்வுகளில் 21 மீனவர்கள் காணாமல் போய்விட்டதாக தகவல் பெறப்பட்டது.

நாகப்பட்டினம் மாவட்டத்தைச் சேர்ந்த IND-TN-06-MM- 5517 (முருகன் துணை) பதிவெண் கொண்ட படகு, இலட்சத்தீவிற்கு அருகே கடலில் மூழ்கியதாகவும் அதிலுள்ள ஒன்பது மீனவர் காணாமல் போய்விட்டதாகவும் தகவல் பெறப்பட்டது.

காணாமல் போன 9 மீனவர்களைத் தேடுதல் மற்றும் மீட்புப்பணி நடவடிக்கைகளைத் துரிதப்படுத்த வலியுறுத்தி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் அவர்களுக்குக் கடிதம் எழுதியதைத் தொடர்ந்து மூழ்கிய படகு மற்றும் 9 மீனவர்களைப் பாதுகாப்பாக மீட்பதற்கு மீட்புப்பணியில் இந்தியக் கடலோர காவற்படையின் கப்பல் "விக்ரம்" மற்றும் ஹெலிகாப்டர் பயன்படுத்தப்பட்டுத் தேடுதல் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. மேலும் இலட்சத்தீவு நிருவாகியின் ஒரு ஹெலிகாப்டரும் காணாமல் போன மீனவர்களைத் தேடுதல் பணியில் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

கடலில் மூழ்கிய "முருகன் துணை" பெயர்கொண்ட திரு.மணிகண்டன், என்பவரது மீன்பிடி படகுடன் ஒன்றாகச் சென்ற நாகப்பட்டினம் மாவட்டத்தைச் சேர்ந்த 2 மீன்பிடி விசைப்படகுகளில் 23 மீனவர்களும் காணாமல் போன 9 மீனவர்களைத் தேடும் பணியில் ஈடுபட்டும் இதுவரை கண்டுபிடித்திட இயலவில்லை.

கேரள மாநிலம் கோழிக்கோட்டைச் சேர்ந்த திரு.சபிஷ், என்பவருக்குச் சொந்தமான அமீர் ஷா எனப் பெயர் கொண்ட மீன்பிடி விசைப்படகு பதிவு எண் IND–KL–07–MM–4989ல் 05.05.2021 அன்று 16 மீனவர்களுடன் கேரள மாநிலம் பைபோர் (Beypore) மீன்பிடி துறைமுகத்திலிருந்து மீன்பிடிக்கச் சென்றதாகவும், 16 மீனவர்களில் 12 மீனவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் "டவ் தே" புயல் கடந்த பின்பு அவர்கள் காணாமல் போய்விட்டதாகவும் தகவல் பெறப்பட்டது. முன்னதாக, இந்தியக் கடலோர காவற்படையினருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டு கடலோர காவற்படையினரால் தேடுதல் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

காணாமல் போன 21 மீனவர்களைத் தீவிரமாகத் தேடிக் கண்டுபிடித்து மீட்கக் கோரி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மத்திய அரசின் பாதுகாப்புத்துறை அமைச்சர் அவர்களுக்குக் கடிதம் மூலம் கேட்டுக்கொண்டார்கள்.

"டவ் தே" புயல் காரணமாகக் காணாமல் போன நாகப்பட்டினம் மாவட்டத்தைச் சேர்ந்த 6 மீனவர்களும், மயிலாடுதுறை மாவட்டத்தைச் சேர்ந்த 3 மீனவர்களும், கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த 12 மீனவர்களும் (மொத்தம் 21 மீனவர்களும்) மீன்பிடித் தொழிலையே வாழ்வாதாரமாகக் கொண்டவர்கள் என்பதாலும் காணாமல் போன மீனவர்களை ஆழ்கடலில் இதுவரை ஹெலிகாப்டர் மற்றும் கடலோர காவற்படையின் கப்பல் மூலம் 15.05.2021 முதல் இதுவரை தொடர்ந்து தேடப்பட்டும் 21 மீனவர்களையும் கண்டுபிடித்திட இயலாத நிலை உள்ளது.

எனவே "டவ் தே" புயல் காரணமாகக் காணாமல் போன 21 மீனவர் குடும்பங்களின் வறிய நிலையினை கருத்தில் கொண்டு மேற்கண்ட காணாமல் போன மீனவர்களது வாரிசுதாரர்களுக்கு ரூ.20 இலட்சம் நிவாரணத் தொகையாக வழங்க மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்கள்.

ஸ்டெர்லைட் தாமிர உருக்கு ஆலை போராட்டத்தின்போது உயிரிழந்தவர்களின் வாரிசுதாரர்கள் மற்றும் கொடும் காயமடைந்தவர்கள் என 17 பேருக்குக் கல்வித் தகுதிக்கேற்ப கருணை அடிப்படையில் பணிநியமனம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தூத்துக்குடி ஸ்டெர்லைட் தாமிர உருக்கு ஆலை போராட்டத்தின் போது உயிரிழந்தவர்களின் வாரிசுதாரர்கள் மற்றும் கொடும் காயமடைந்தவர்கள் 17 பேருக்கு அவர்களின் கல்வித் தகுதிக்கேற்ப கருணை அடிப்படையில் பணிநியமன ஆணைகளை வழங்கினார்கள்.

2018ஆம் ஆண்டு நடந்த தூத்துக்குடி ஸ்டெர்லைட் தாமிர உருக்கு ஆலை போராட்டத்தின் போது உயிரிழந்தவர்களின் வாரிசுதாரர்கள் மற்றும் கொடும் காயமடைந்தவர்கள் 17 பேருக்கு அவர்களின் கல்வித் தகுதிக்கேற்ப கருணை அடிப்படையில் கிராம உதவியாளர்களாகவும் மற்றும் சமையலராகவும் பணிநியமனம் வழங்கி தமிழக அரசு உத்தரவிட்டிருந்தது. அதனடிப்படையில் கிராம உதவியாளராக பணிநியமனம் செய்யப்பட்டவர்களில் 16 நபர்கள் அவர்களின் கல்வித் தகுதியின் அடிப்படையில் இளநிலை உதவியாளர்களாகவும், ஒரு நபர் ஈப்பு ஓட்டுநராகவும் பணி நியமனம் வழங்கிடத் தமிழக அரசுக்கு நீண்ட நாட்களாகக் கோரிக்கைகளை அளித்திருந்தனர்.

தற்போது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் அந்த கோரிக்கைகளைக் கனிவுடன் பரிசீலித்து மேற்படி நபர்களுக்கு அவர்களின் கல்வித் தகுதிக்கேற்ப தூத்துக்குடி மாவட்ட நிர்வாகத்தின் கீழ் வருவாய்த்துறை, ஊரக வளர்ச்சித்துறை மற்றும் பேரூராட்சித் துறைகளில் 16 நபர்களுக்கு இளநிலை உதவியாளர்களாகவும், ஒரு நபருக்கு ஈப்பு ஓட்டுநராகவும் பணி நியமன ஆணைகளை 21.05.2021 அன்று மதுரை மாவட்ட ஆட்சியரகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வழங்கினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 21.05.2021 அன்று, மதுரை ஆட்சியரகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பணிநியமன ஆணைகளை வழங்கினார்கள்.

மேலும், தூத்துக்குடி ஸ்டெர்லைட் தாமிர உருக்கு ஆலை போராட்ட கலவரங்கள் குறித்து விசாரிப்பதற்காக அமைக்கப்பட்ட ஆணையத்தின் இடைக்கால அறிக்கையை ஓய்வு பெற்ற நீதியரசர் திருமதி அருணா ஜெகதீசன் அவர்கள் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களிடம் 14.05.2021 அன்று இடைக்கால அறிக்கையைச் சமர்ப்பித்தார். இடைக்கால அறிக்கையில் இடம்பெற்றுள்ள பரிந்துரைகள் மீதான தமிழக அரசின் முடிவுகள் விரைவில் அறிவிக்கப்படும்.

காவிரி டெல்டா பகுதி விவசாய பெருமக்கள் குறுவை சாகுபடி செய்யப் பாசனத்திற்கு மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறப்பு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 12.06.2021 அன்று மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறந்து வைத்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள், காவிரி டெல்டா பகுதிகளில் உள்ள விவசாய பெருமக்கள் குறுவை சாகுபடி செய்ய மேட்டூர் அணையிலிருந்து 12.06.2021 அன்று தண்ணீர் திறந்தார்கள்.

காவிரி டெல்டா பகுதிகளில் குறுவை சாகுபடி செய்யப் பாசனத்திற்கு மேட்டூர் அணையிலிருந்து ஜூன் 12 முதல் செப்டம்பர் 15ஆம் தேதி வரை 125 டி.எம்.சி தண்ணீர் தேவைப்படுகிறது. இதற்காக மேட்டூர் அணையிலிருந்து 99.74 டி.எம்.சி தண்ணீர் வழங்கப்படுகிறது. மீதமுள்ள 25.26 டி.எம்.சி தண்ணீரானது மழை மற்றும் நிலத்தடி நீர் மூலமாகப் பூர்த்தி செய்யப்படும்.

மேட்டூர் அணையிலிருந்து குறுவை சாகுபடிக்கு ஜூன் 12ஆம் தேதி 3,000 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டு, வரும் மாதங்களில் தேவைக்கேற்ப நீர் வழங்கப்படும்.

12,10,000 ஏக்கர் பரப்பளவில் சம்பா மற்றும் தாளடி பாசனம் செய்ய செப்டம்பர் 15 முதல் ஜனவரி 28 வரை 205.60 டி.எம்.சி தண்ணீர் தேவைப்படுகிறது. இதற்கு மேட்டூர் அணையிலிருந்து 108.50 டி.எம்.சி தண்ணீர் வழங்கியும், மீதமுள்ள 97.10 டி.எம்.சி தண்ணீர் பருவமழை மற்றும் நிலத்தடி நீர் கொண்டும் பூர்த்தி செய்யப்படும்.

மேட்டூர் அணையிலிருந்து காவிரி டெல்டா பாசனத்திற்கும் மற்றும் குடிநீர் பயன்பாட்டிற்கும் தண்ணீர் திறந்துவிடப்படும் காலங்களில், அணையின் மின் நிலையம் மூலம் 50 மெகாவாட் மின்சாரமும், சுரங்க மின் நிலையம் மூலம் 200 மெகாவாட் மின்சாரமும், என மொத்தம் 250 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. அணையின் கீழ்ப் பகுதியில் 7 கதவணை நீர்மின் நிலையங்கள் மூலம் தலா 30 மெகாவாட் என மொத்தம் 210 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. வடகிழக்கு பருவ மழையினை பொறுத்து அணையிலிருந்து தண்ணீர் எடுக்கும் அளவினை உயர்த்தியும், குறைத்தும் தேவைக்கேற்ப வழங்கப்படும்.

காவிரி டெல்டா விவசாயப் பெருங்குடி மக்கள் அனைவரும் தண்ணீரைச் சிக்கனமாக பயன்படுத்தியும், நீர்ப்பங்கீட்டில் நிலைமைக்கேற்ப தண்ணீரை முறைவைத்து பயன்படுத்தவும், நீர்வளத் துறை அலுவலர்களுடன் ஒத்துழைப்பு நல்கியும், வேளாண்மை உழவர் நலத்துறை அலுவலர்களின் ஆலோசனைகளைப் பெற்று, செம்மை நெல் சாகுபடி உள்ளிட்ட தொழில்நுட்பங்களைப் பயன்படுத்திக் குறைந்த பரப்பளவில் மிக அதிக அளவு மகசூல் பெற்றுப் பயனடைய வேண்டுமென மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார்கள்.

“அனைவருக்கும் அனைத்துமான தமிழகம்” இலக்குகளை எட்டிட மாவட்ட ஆட்சித் தலைவர்களின் ஒத்துழைப்பு அரசுக்கு அவசியம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 15.06.2021 அன்று தலைமைச் செயலகத்தில், புதியதாகப் பொறுப்பேற்கவுள்ள மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் கலந்தாலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், கொரோனா பெருந்தொற்றுப் பரவல் என்ற நெருக்கடியான காலகட்டத்தில், நோய்த் தொற்று பரவாமல் தடுத்திட மாவட்ட ஆட்சியர்கள் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும்,

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தலைமையில் 15.06.2021 அன்று தலைமைச் செயலகத்தில், புதியதாகப் பொறுப்பேற்கவுள்ள மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் கலந்தாலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

நோய்த் தொற்றுப் பரவல் எண்ணிக்கையை மேலும் குறைத்திட வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்கள். அரசு சார்பாக மருத்துவ உட்கட்டமைப்பு வசதிகளை ஏராளமாக உருவாக்கி உள்ளதையும், படுக்கைகள் இல்லை என்ற புகாருக்கு முற்றுப்புள்ளி வைத்தும், ஆக்சிஜன் தட்டுப்பாடு இல்லை என்ற நிலை மாறி உள்ளதையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்துக் கூறினார்கள். மேலும், ஏராளமான தற்காலிக மருத்துவமனைகளை உருவாக்கி உள்ளதையும், ஆக்சிஜனை உள்நாட்டிலிருந்தும், வெளிநாட்டிலிருந்தும் பெற்றுத் தட்டுப்பாடு இல்லாத நிலை தற்போது உருவாக்கப்பட்டுள்ளதையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தனது உரையில் சுட்டிக்காட்டினார்கள்.

மேலும், கல்வியில், வேலைவாய்ப்பில், சமூகப் பொறுப்புகளில் அனைவருக்கும் அனைத்தும் கிடைக்க மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அதிகாரத்தை, பதவியைப் பயன்படுத்தித் தங்களது கடமையை ஆற்ற வேண்டும் என்று தெரிவித்தார்கள்.

வளரும் வாய்ப்புகள் – வளமான தமிழ்நாடு!
மகசூல் பெருக்கம், மகிழும் விவசாயி!
குடிமக்கள் அனைவருக்கும் குறையாத தண்ணீர்!
அனைவருக்கும் உயர்தரக் கல்வி மற்றும்
உயர்தர மருத்துவம்!
எழில்மிகு மாநகரங்களின் மாநிலம்!
உயர்தர ஊரகக் கட்டமைப்பு, உயர்ந்த
வாழ்க்கைத் தரம்!
அனைவருக்கும் அனைத்துமான தமிழகம்!

ஆகிய 7 இலக்குகளைப் பத்தாண்டுக்காலத்தில் எட்டிட மாவட்ட ஆட்சித் தலைவர்களின் ஒத்துழைப்பு அரசுக்கு அவசியம் என்று தெரிவித்தார்கள்.

பொதுவிநியோகத் திட்டத்தை முறையாகச் செயல்படுத்திட வேண்டும் என்றும், அனைவருக்கும் குடும்ப அட்டைகள் கிடைத்திடவும், போலி அட்டைகளை ஒழித்திடவும், வழங்கப்படும் உணவுப் பொருட்கள் சுத்தமானதாக – தரமானதாக இருப்பதை உறுதி செய்திட வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்கள்.

வளரும் வாய்ப்புகள் – வளமான தமிழ்நாடு!
மகசூல் பெருக்கம், மகிழும் விவசாயி!
குடிமக்கள் அனைவருக்கும்
குறையாத தண்ணீர்!
அனைவருக்கும் உயர்தரக் கல்வி மற்றும்
உயர்தர மருத்துவம்!
எழில்மிகு மாநகரங்களின் மாநிலம்!
உயர்தர ஊரகக் கட்டமைப்பு, உயர்ந்த
வாழ்க்கைத் தரம்!
அனைவருக்கும் அனைத்துமான தமிழகம்!

அரசு சார்பாக மருத்துவ உட்கட்டமைப்பு வசதிகளை ஏராளமாக உருவாக்கி உள்ளதையும், படுக்கைகள் இல்லை என்ற புகாருக்கு முற்றுப்புள்ளி வைத்தும், ஆக்சிஜன் தட்டுப்பாடு இல்லை என்ற நிலை மாறி உள்ளதையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்துக் கூறினார்கள். மேலும், ஏராளமான தற்காலிக மருத்துவமனைகளை உருவாக்கி உள்ளதையும், ஆக்சிஜனை உள்நாட்டிலிருந்தும், வெளிநாட்டிலிருந்தும் பெற்றுத் தட்டுப்பாடு இல்லாத நிலை தற்போது உருவாக்கப்பட்டுள்ளது.

மக்கள் அளிக்கும் மனுக்கள் மீது உடனடி நடவடிக்கை எடுக்கவும், நீதிமன்றங்கள் பிறப்பிக்கும் உத்தரவுகளைக் கவனச்சிதறல்கள் இல்லாமல் நடைமுறைப்படுத்திடவும், அரசின் இலக்குகளைத் தங்களது இலக்குகளாகக் கொள்ள வேண்டும் என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார்கள்.

நகர்ப்புற வளர்ச்சியும் ஊரக வளர்ச்சியும்தான் நாட்டின் வளர்ச்சிக்கான அடையாளங்கள் என்று தெரிவித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், காலிப் பணியிடங்களைத் தகுதியானவர்களைக் கொண்டு நிரப்பிடவும், மாநில அரசும் ஒன்றிய அரசும் ஒதுக்கும் நிதியை முறையாகச் செலவு செய்து திட்டங்களை நிறைவேற்றிட வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்கள்.

மாநில அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் ஆகியவர்களோடு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இணைந்து பணியாற்றி, சிறப்பான ஆட்சியை மக்களுக்கு அளித்து, அரசுக்கு ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள்.

தனது அரசு உத்தரவு போடும் அரசு மட்டுமல்ல, மாவட்ட ஆட்சியர்கள் தெரிவிக்கும் ஆலோசனைகளையும் கருத்துக்களையும் காது கொடுத்துக் கேட்கும் அரசு என்றும், நாம் அனைவரும் ஒன்றிணைந்து பணியாற்றி வளம் மிகுந்த தமிழ்நாட்டை உருவாக்குவோம் என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள்.

எல்லோருக்கும் எல்லாம் என்பதே இலட்சியம்

மாண்புமிகு முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சராக திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் கடந்த 07.05.2021 அன்று முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன், எல்லோருக்கும் எல்லாம் என்பதே இலட்சியம் என்ற உயரிய நோக்கத்தோடு தமிழக மக்கள் தங்கள் வாழ்வில் வளம்பெறும் வகையில் 5 முத்தான திட்டங்களான கோப்புகளில் கையெழுத்திட்டு அரசாணைகளைப் பிறப்பித்தார்கள்.

அந்த திட்டங்களின் மூலம் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பயனடைந்த பயனாளிகள் தெரிவித்ததாவது,

கொரோனா சிறப்பு நிவாரண நிதி பெற்றுப் பயனடைந்த பர்கூர் வட்டம், கந்தி குப்பம் கிராமத்தைச் சேர்ந்த திருமதி எஸ்.பிருந்தா க/பெ.சிவகுமார் கூறியதாவது,

"நான் பர்கூர் வட்டம் கந்தி குப்பம் கிராமத்தில் கணவர் மற்றும் இரு குழந்தைகளுடன் வசித்து வருகிறேன். எனது கணவர் ஆட்டோ ஓட்டி அதில் வரும் வருமானம் கொண்டு எனது குடும்பத்தை நடத்தி வருகிறேன். கொரோனா நோய்த்தொற்று காரணமாக, தற்பொழுது ஊரடங்கு உத்தரவு நடைமுறையில் உள்ளதால், ஆட்டோ ஓட்ட முடியாமல் எனது கணவர் வீட்டில் இருக்கிறார். போதிய வருமானம் இல்லாத நிலையில் நானும் எனது குடும்பத்தினரும் மிகவும் சிரமத்தில் வாழ்ந்து வருகிறோம். இந்நிலையில், தமிழகத்தின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றுள்ள திரு.மு.க.ஸ்டாலின் அய்யா அவர்கள் அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு கொரோனா நிவாரண நிதியாக ரூ.4,000 வழங்க ஆணையிட்டார்கள். அதனடிப்படையில், முதல் தவணையாக ரூ.2,000 பெற்றது எங்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

இந்த இக்கட்டான காலத்தில் என்னைப்போன்ற ஏழை, எளிய மற்றும் நடுத்தர மக்கள் முழு ஊரடங்கு காலத்தில் வாழ்வாதாரமின்றி இருந்த நிலையில் கொரோனா நிதி வழங்கியது பேருதவியாக இருந்தது. கொரோனா நிவாரண நிதியை வழங்கி எங்களுக்கு உதவிய முதலமைச்சர் அய்யா அவர்களுக்கு என் சார்பிலும், என்னைப் போன்ற ஏழை, எளியோர் சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்".

ஆவின் பால் விலை குறைப்பு மூலம் பயனடைந்த கிருஷ்ணகிரி வட்டம், பையனப்பள்ளி கிராமத்தைச் சேர்ந்த திருமதி வேடியம்மாள் க/பெ. கிருஷ்ணன் அவர்கள் கூறியதாவது,

"நான் கிருஷ்ணகிரி வட்டம் பையனப்பள்ளி கிராமத்தில் எனது கணவர் மற்றும் மூன்று குழந்தைகளுடன் வசித்து வருகிறேன். எனது கணவர் செங்கல் சூளையில் வேலை செய்து வருகிறார். நான் அருகில் உள்ள தோட்டத்தில் தோட்ட வேலை செய்கிறேன். மக்களின் அத்தியாவசியப் பொருட்களில் மிகவும் முக்கியமான ஒன்று பால். முதல்வர் அவர்கள் ஏழை, எளிய மக்களின் தேவையறிந்து ஆவின் பால் லிட்டருக்கு ரூ.3 விலை குறைப்பு செய்யப்படும் என அறிவித்து, என்னைப் போன்ற ஏழை, எளிய மக்கள் பொருளாதாரமின்றி தவிக்கும் இச்சூழலில், பொதுமக்களின் வயிற்றில் பால் வார்த்த முதலமைச்சர் அய்யா அவர்களுக்கு எனது உள்ளம் கனிந்த நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன்".

நகரப் பேருந்துகளில் கட்டணமின்றி பயணம் திட்டத்தின் கீழ், பயனடைந்த கிருஷ்ணகிரி மாவட்டம் தேன்கனிக்கோட்டை வட்டம், ஒசட்டியைச் சேர்ந்த திருமதி பிரியா அவர்கள் தெரிவித்ததாவது,

“நான் கிருஷ்ணகிரி மாவட்டம் தேன்கனிக்கோட்டை வட்டம் ஒசட்டி கிராமத்தில் எனது கணவர் மற்றும் இரண்டு பெண் குழந்தைகளுடன் வசித்து வருகின்றேன். எனது கணவர் விவசாய கூலி, நான் தேன்கனிக்கோட்டையில் தனியார் ஓட்டலில் சமையல் உதவியாளராக வேலை செய்து மாதம் ரூ.3,000 சம்பளம் வாங்குகிறேன். எங்கள் கிராமத்திலிருந்து தேன்கனிக்கோட்டைக்கு செல்லும் அரசு டவுன் பஸ்சில் தினந்தோறும் வேலைக்குச் சென்று வர ரூ.24 செலவாகிறது. தற்போது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் நகரப் பேருந்துகளில் பெண்கள் இலவசமாகப் பயணம் செய்யலாம் என

அறிவித்துள்ளார்கள். இதனால் எனக்கு மாதந்தோறும் ரூ.720 சேமிப்பாகிறது. இந்த பணம் என் குடும்பத்திற்குப் பயன்படும் என்று நினைக்கும்போது அளவில்லா மகிழ்ச்சி ஏற்படுகிறது. இத்திட்டத்தைச் செயல்படுத்திய முதல்வர் அவர்களுக்கு நன்றி”.

முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் மூலம் கொரோனா நோய் சிகிச்சை கட்டணம் குறித்து தேன்கனிக்கோட்டை வட்டம், அந்தேவனப்பள்ளி கிராமத்தைச் சேர்ந்த திரு.சமஸ் தப்ரேஸ் த/பெ.ஷபியுல்லா. அவர்கள் தெரிவித்ததாவது,

“நான் தேன்கனிக்கோட்டை வட்டம் அந்தேனவனப்பள்ளி கிராமத்தில் தாய், தந்தை மற்றும் மூன்று குழந்தைகளுடன் வசித்து வருகிறேன். நான் எங்கள் ஊரில் விவசாய கூலி வேலை செய்து வருகிறேன். தற்போது எனது தந்தைக்கு கொரோனா நோய் பாதிக்கப்பட்டு தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார். மேலும், சிகிச்சை அளிக்க போதுமான வசதி என்னிடம் இல்லை. இந்த காலகட்டத்தில், முதல்வர் அவர்கள் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ள பொதுமக்கள் அரசு மருத்துவமனைகள் மட்டுமின்றி தனியார் மருத்துவமனைகளிலும் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், கொரோனா நோய்க்குச் சிகிச்சை பெற்றுக்கொள்ளலாம் என அறிவித்துள்ளார்கள். அப்பொழுது, இந்த அறிவிப்பு எனக்கு மிகவும் மகிழ்ச்சியை அளித்தது. என்னைப் போன்ற ஏழை, எளிய மற்றும் நடுத்தர மக்களுக்கும் அரசு மருத்துவமனை மட்டுமல்லாமல் தனியார் மருத்துவமனைகளிலும் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், கொரோனா நோய்க்கு இலவசமாகச் சிகிச்சை அளிப்பது எங்களுக்கு பேருதவியாக இருந்தது”.

பொதுமக்கள் வழங்கும் மனுக்கள் மீது 100 நாட்களுக்குள் நடவடிக்கை குறித்து கிருஷ்ணகிரி வட்டம், சுபேதார் மேடு பகுதியைச் சேர்ந்த திருமதி லட்சுமி க/பெ. மகேந்திரன் தெரிவித்ததாவது,

“உங்கள் தொகுதியில் முதலமைச்சர்” திட்டத்தின் கீழ் பல்வேறு துறைகளின் சார்பாகப் பொதுமக்களிடம் இருந்து மனுக்கள் பெற்று அரசுத் துறை அலுவலர்கள் பணியாற்றி வரும் இந்த சூழ்நிலையில், மனுக்கள் மீது நடவடிக்கை எடுப்பதற்கென்றே தனியாக ஒரு துறையை உருவாக்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எங்களது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

– தே.ராம்குமார்
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
கிருஷ்ணகிரி மாவட்டம்

முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் 97ஆவது பிறந்தநாளை முன்னிட்டு
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க. ஸ்டாலின்** அவர்கள்
03.06.2021 அன்று சென்னை, மெரினா கடற்கரையில் அமைந்துள்ள முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின்
நினைவிடத்தில் மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

தமிழரசு

R.N.I. No. 21446/70 Regn. No. TN/CCN/643/2021-2023
& WPP No. TN/PMG (CCR) 518/2021-2023

Date of Publication : 2nd week of every month
Date of Posting : 27th - 30th of every month

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு. க. ஸ்டாலின்** அவர்கள்
12.06.2021 அன்று காவிரி டெல்டா பகுதிகளில் உள்ள விவசாய பெருமக்கள் குறுவை சாகுபடி செய்ய
மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறந்து வைத்தார்.

Published by Dr.V.P. JAYASEELAN, I.A.S., on behalf of Information and Public Relations Department
Government of Tamil Nadu, Secretariat, Fort St. George, Chennai - 600 009 and Printed by: T. Suyambulingom at TAMILARASU PRESS,
Rajiv Gandhi Salai, Taramani, Chennai - 600 113. Editor: Dr.V.P. JAYASEELAN, I.A.S.,